# இறை தூதர்கள்

பாகம் 1

வெளியிடுபவர்

M. A. அப்துல் கனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை தூதர்கள்

ஆக்கம்

M. A. அப்துல் கனி

[ விலை ★ ரூபா 1-50 ]

WITHDRAWN
PUBLIC LIBRARY
COLOMBO 7.

VIJAYALUCKSHMI BOOK DEPOT,
248, Galle Road,
WELLAWATTE, COLOMBO 6.
Tel: 84780

போன்: 5942

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CLASS No. 922.97
ACC. No. 7573
114

To the Reader of this Book

PLEASE KEEP THIS BOOK CLEAN

DO NOT MAKE MARKS ON IT.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எமது அருள் மறையாம் திருக்குர்ஆனில் அல்லாஹ்வின் தீர்க்கதரிசிகள் சிலரது முக்கிய வரலாறுகள் இரத்தினச்சுருக்கமாகவும் சுவை மிக்கதாகவும் கூறப்பட்டிருக்கின்றன. மக்கள் அவற்றை அறிந்து, உறுதியான நம்பிக்கைகொண்டு, எச்சரிக்கையும் படிப்பினையும் பெறவேண்டுமென்பது அல்லாஹ்வின் திருவுள்ளமாகும். ஆயினும் தமிழ் கூறும் முஸ்லிம் நல்லுலகத்து அரபு மொழி புரியாதோரே பலர் இருக்கின்றமையின் மூல மொழியில் அவ்வரலாற்றினை அறிந்து சுவைத்துப் பயன் பெறும் பான்மை பெற்றிலர்.

அன்பு கெழுமிய ஆசிரியர் எம். ஏ. அப்துல்கனி அவர்கள் சில தீர்க்கதரிசிகளது வரலாற்றுச் சுருக்கத்தைப் பழகு தமிழில் பலரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அழகாகத் தொகுத்துள்ளார். அவரின் இக் கன்னிமுயற்சியைப் பாராட்டுகின்றோம்.

பள்ளிக்கூடச் சிறுவர் முதற்கொண்டு வயோதிபர்வரையுள்ளோர் யாவரும் வாசித்துப் பயன்பெறத்தக்க இச்சிறுநூல், பள்ளி மாணவருக்கு உப பாடப்புத்தகமாக அமைவதற்கும் பொருத்தமுடையது.

மௌலவி முகம்மது மரைக்கார் அப்துல் வஹாத்
விரிவுரையாளர்

முஸ்லிம் ஆசிரியப் பயிற்சிக் கலையகம்
அட்டாளைச்சேனை.

27.10.1967

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

வரலாறு என்பது ஓர் இனத்தினதோ, அல்லது ஒரு மொழி பேசும் மக்களின் வரலாருகவோ அமையமுடியும். ஆனல், ''இறைதூதர் வரலாறு'' என்னும்பொழுது அது மனித இனத்தின் வரலாருக அமையக் காண்கின்ருேம். ''ஒவ்வொரு சமுதாயத்துக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடிய திருத்தூதரை நாம் அனுப்பியுள்ளோம்'' 35:24 என்ற திருமறை வசனம் இந்த உண்மையை உணர்த்துகின்றது. திருக்குர்ஆனின் நோக்கம் நபிமார்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்துக்கூறல் அன்று. அருள்மறை மனித இனத்திற்கு வழிகாட்டும் பெருநூலாகவே அல்லாஹ்விஞல் அருளப்பட்டது. ஆனல், அல்லாஹ்வின் போதனைகளைப் புறக்கணித்த சமூதாயங்கள், எவ்வாறு இறைவனின் தண்டனைக்கு ஆளாகின என்பதை விளக்கும்பொழுது, திருக்குர்ஆன் நபிமார்களின் சரித்திரத்தை ஆங்காங்கு குறிப்பிடுகின்றது. நபிமார்களின் இறை-விசுவாசத்தையும், அவர்களின் உயர் பணிகளையும், அவர்கள் எதிர்நோக்கிய மகத்தான சோதனைகளையும், தீமையை ஒழித்து நன்மையை வளர்ப்பதில் அவர்கள் அடைந்த ஆன்மீக வெற்றியினையும் அருள்மறை விளக்குகின்றது.

திருக்குர்ஆனில், நபிமார்களின் வாழ்வு பற்றிய விரிவான விளக்கம் இல்லை. சில குறிப்புகள் மட்டுமே காணப்படுகின்றன. இக் குறிப்புகளில் சிலவற்றைப் பெருமானரின் திருவசனங்களில் காண்கின்ருேம். பெரும்பாலானவை அப்பாஸிக்களின் காலப்பிரிவில் எழுதப்பட்ட திருமறை விரிவுரைகளிலும், வரலாற்று நூல்களிலும் காணப்படுகின்றன. அரபு வரலாற்ருசிரியர் பலர், வரலாற்றை எழுத முனையும்பொழுது, உலகம் சிருஷ்டிக்கப்பட்ட காலம் முதல் பெருமானர் (ஸல்) அவர்களது காலப்பிரிவு வரை; அல்லது, குறிப்பிட்ட அந்த வரலாற்ருசிரியரது காலப்பிரிவுவரையுள்ள வரலாற்றை எழுதுவது மரபாக இருந்துவந்துள்ளது. அரபு வரலாற்ருசிரியர் அல்-மசூதியின் ''முருஜுஸ் ஸாறப்'' இந்த அடிப்படையிலேயே அமைந்துள்ளது. பெரும்பாலும் மரபுவழிக்கதைகளே ஆரம்பகால வரலாற்றுக்கு மூலாதாரமாக அமைந்தன. ''வஹ்ஹாப்பின் முனப்பிஹ்'' ''கஃபுல் அஹ்பார்'' போன்ற யூத தல்முதிய மரபுவழிக்கதைகளும், கிறீஸ்தவ மரபுவழிக்கதைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிமார்களின் வரலாற்றை எழுத முனைபவருக்கு மூல ஆதாரமாக அமைவன திருக்குர்ஆனும், பெருமானாரின் ஆதாரபூர்வமான ஹதீஸ்களுமாகும். ஆனால், சில நூல்களில் இவை இரண்டும் தவிர்க்கப்பட்டு மரபுவழிக்கதைகளும் கிஸ்ஸாக்களும் நுழைக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். அரபுத்தமிழ் நூலான ''கஸஸுல் அன்பியா'' வை இதற்கு ஆதாரமாகக் காட்டமுடியும். தர்க்க ரீதியாக வரலாற்றுக்கண்ணோட்டத்தோடு அணுகும்பொழுது அந்த நூலிலுள்ள குறைகள் புலப்படும்.

எனவே, நண்பர் M. A. அப்துல் கனி அவர்களின் இம்முயற்சி, இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் துறையில் புதியதொரு முயற்சி. ஒரு கஷ்டமான துறையில் துணிந்து இறங்கியமைக்கு அவரைப் பாராட்டவேண்டும். நபிமார்களின் வரலாற்றைத் திருக்குர்ஆனின் அடிப்படையில் விளக்கிச் சென்றுள்ளார். ஆனால், ஆங்காங்கு மரபுவழிக்கதைகளும் புகுத்தப்பட்டுள்ளன.

எளிய, அழகு தமிழில் அமைந்துள்ள இந்நூலைத் தமிழ் பேசும் முஸ்லிம் உலகம் வரவேற்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை எனக்கு உண்டு.

M. A. M. சுக்ரி. B. A. (Hons.)
அரபு விரிவுரையாளர்,
அரபு மொழி இஸ்லாமிய ஆராய்ச்சித் துறை,
இலங்கைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் நிராகரித்துவிட்டு, அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் இடையில் பிரிவினை செய்துவிடக் கருதி, "அந்தத் தூதர்களில் சிலரை விசுவாசிப்போம் சிலரை நிராகரிப்போம்" எனவும் கூறி; நிராகரிப்புக்கும் விசுவாசத்திற்கும் மத்தியில் ஒரு பாதையை ஏற்படுத்த விரும்புகின்றார்களோ, அவர்கள் நிச்சயமாக நிராகரிப்பவர்களே. இவர்களுக்கு, இழிவுதரும் வேதனையை இறைவன் சித்தப்படுத்தி வைத்திருக்கிறான். (அல்குர்ஆன் 4: 150, 151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை.

بسم الله الرحمن الرحيم

"எவர் மலக்குகளையும் நபிமார்களையும் விரோதிக்கின்றாரோ, அவர் இறைவனுக்கும் விரோதியே. (அல்குர்ஆன் 2:98)

"இறை தூதர்கள்" என்ற தலைப்பின்கீழ் சில நபிமார்களுடைய சரிதைகளை எழுதி, நூலாக உங்கள்முன் சமர்ப்பிக்கின்றேன். திருக்குர்ஆனிலே சிதறிக் கிடக்கும் நபிமார்களுடைய சரிதைகளின் அம்சங்களை வேறாக எடுத்து; ஹதீது மூலமாக அவர்களைப்பற்றிக் கூறப்படும் சரிதைகளினிடையே ஒழுங்கான முறையில் அவைகளைப் புகுத்தி; தொடர்பான ஒரு கதை போன்று தொகுத்து இதை எழுதியுள்ளேன்.

ஈமானுடைய ஆறு விஷயங்களில் நபிமார்களைப் பற்றி அறிவது நான்காவது விஷயமாகும். எனவே, அவர்களைப்பற்றி அறிவது எவ்வளவு முக்கியத்துவம் என்பது இதிலிருந்தே விளங்குகிறது. ஆகையினால், ஹதீது மூலமாகக் கூறப்படும் அவர்களுடைய சரிதைகளுக் கிடையே, குர்ஆன் ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி ஒரு நூல் வெளியிடப்பட்டால், அது மக்களுக்குப் பிரயோசனம் அளிக்கும் என்ற நோக்கம் கொண்டு இதைத் தொடங்கினேன்.

இன்று பாடசாலைகளில் நபிமார்களைப்பற்றி கற்கும் மத்திய வகுப்பு மாணவர்களுக்கு இந் நூல் பெரிதும் உதவி புரியும் என நம்புகின்றேன். அதுமட்டுமல்ல, யூசுப் சுலைகா என்ற காவியம் படிக்கும் பாடசாலை மாணவர்களுக்கு இந் நூலின் இறுதிப் பகுதி அதிக பிரயோசனம் அளிக்கும் என்பதும் எனது நம்பிக்கை. யாராக இருந்தபோதிலும், வாசித்துப் பயன் அடையவேண்டும் என்பதே எனது அவா.

மார்க்க அறிவு குறைந்த யான், திருக்குர்ஆனை வாசித்ததின் பயனாக இதை எழுதும் ஆற்றல் பெற்றேன். "சிறியவராக இருந்த போதிலும் தெரிந்ததை மற்றோர்களுக்கு எடுத்துக்கூறலாம்" என்ற ஹதீதை மனதிற் கொண்டு, இதை நூலாக வெளியிடுகின்றேன். எனவே இந்த வெளியீட்டில் பிழைகள் ஏற்பட்டிருக்கலாம். அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைகளைத் திருத்தி வாசிப்பதுடன், அவைகளை எனக்கு அறியத்தருமாறும் பணிவுடன் உங்களை வேண்டுகின்றேன். அத்துடன், இன்னும் பல ஆக்க – வேலைகள் செய்வதற்கு அனைவரின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் கோருகின்றேன்.

எனது கைப்பிரதியை வாசித்துப் பல திருத்தங்கள் செய்து தந்த மௌலவி A. M. முஹம்மது ஆசிரியர் (அட்டாளைச்சேனை-4) அவர்கட்கும்; இது பூரணமாக முடிவதற்கு வழி கூறி ஊக்கமும் அளித்த பெரியார் அல்ஹாஜ் A. M. ஷரிப்தீன் (கிந்தலூர் வட்டாரக் கல்வியதிகாரி) அவர்கட்கும்; யான் வேண்டும்பொழுதெல்லாம் என் கேள்விகளுக்கு விடை அளித்துக்கொண்டிருந்த, எங்கள் மதகுருவான ஜனாப் M. H. M. இஸ்மாயீல் ஆலீம் (அக்கரைப்பற்று–5) அவர்கட்கும் எனது பணிவான நன்றி.

இதனைப் பார்வையிட்டு அணிந்துரை, மதிப்புரை ஆகியவை வழங்கிய கனம் M. M. A. வதூத் (போதனாசிரியர், அட்டாளைச்சேனை G. T. C.) அவர்கட்கும், கனம் M. A. M. சுக்ரி (அறபு விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு) அவர்கட்கும் எனது உள்ளம் கனிந்த நன்றி.

காலதாமதமின்றி இதனை அச்சிட்டுத் தந்துதவிய "ஆதம்ஸ்" அச்சகத்தார் அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்.

6ம் குறிச்சி,
அக்கரைப்பற்று.
30–10–67.

M. A. அப்துல் கனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட அட்டவணை


| பாடம் | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | நபி ஆதம் | (அலை) | ... | 1 |
| 2. | ,, இத்ரீஸ் | (அலை) | ... | 11 |
| 3. | ,, நூஹ் | (அலை) | ... | 17 |
| 4. | ,, சாலிஹ் | (அலை) | ... | 29 |
| 5. | ,, இப்ருஹீம் | (அலை) | ... | 39 |
| 6. | ,, இஸ்மாயீல் | (அலை) | ... | 52 |
| 7. | ,, யாகூப் | (அலை) | ... | 62 |
| 8. | ,, யூசுப் | (அலை) | ... | 66 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை திருத்தம்

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 9 | 1 | 4 | காயீன் | காபீல் |
| 9 | 1 | 8 | ,, | ,, |
| 34 | 3 | 8 | கருகே பாய் | கருகே போய் |
| 34 | 3 | 9 | காண்டு | கொண்டு |
| 36 | 3 | (2) | எவ்வகையிலிம் | எவ்வகையிலும் |
| 39 | 2 | 7 | கெதுப்பாக | கெதிர்ப்பாக |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி ஆதம் (அலை)

பூமியில் மனிதவர்க்கத்தை உண்டாக்குவதற்காக ஒரு பிரதிநிதியைப் படைப்பதற்கு இறைவன் நாடினான். அமரர்களை நோக்கி, "நிச்சயமாக பூமியில் ஒரு பிரதிநிதியை நான் படைக்கப்போகின்றேன்," என்று கூற; அதற்கு அமரர்கள், "மகா வல்லமையுடையவனே! பூமியில் அழிம்பு செய்து இரத்தம் சிந்துவிக்கக்கூடிய சந்ததிகளைப் பெற்றெடுக்கும் மனுவர்க்கத்தையா அங்கு உண்டாக்கப்போகின்றாய்? நாங்களோ உன்னுடைய பரிசுத்த தன்மைகளைக் கூறி உன்னைத் துதிசெய்து கொண்டிருக்கிறோம்," என்று கூறி எதிர்ப்புத்தெரிவித்தனர். (அல் குர்ஆன் 2ம் பாடம் 30ம் வசனம்; 15ம் பாடம் 28ம் வசனம்) அப்படியான பிரதிநிதியைப் படைப்பதைவிட, அவர்களைப்போன்ற அமரர்களைப் படைப்பது மேன்மை என்ற கருத்துப்படவே அவர்கள் அவ்வாறு எதிர்த்து வாதாடியிருக்கவேண்டும். அதற்கு இறைவன் அமரர்களை நோக்கி, "நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நான் நன்கு அறிவேன்," எனக் கூறினான். (2:33) தாங்கள் வாதிட்டதற்காக அமரர்கள் மன்னிப்புக்கோரி அமைதியாகயிருந்தனர்.

பின்பு இறைவன், தான் விரும்பிய அப்பிரதிநிதியைப் படைக்கும் நோக்கமாக, ஜிப்ரீல் (அலை) என்னும் அமரரைக் கூப்பிட்டு, பூமியின் நான்கு கோணங்களிலிருந்தும் ஒரு பிடி மண் எடுத்துவரும்படி ஏவினான். அவர் பூமிக்கு வரவும், மண்கொடுப்பதற்கு அது மறுத்துவிட்டது. பின், மீக்காயீல், இஸ்ராபீல், இஸ்ராயீல் (அலை) ஆகிய அமரர்கள் வந்தார்கள். பூமியின் கடூர வார்த்தைகளால் எவராலும் மண் எடுத்துச்செல்ல முடியாமற்போய்விட்டது. எனினும், இஸ்ராயீல் (அலை) அவர்கள் அதனுடன் எதிர்த்துப் பேசி, ஒரு பிடி-மண் எடுத்துச் சென்றார். இதற்காகத்தான் ஜீவராசிகளின் உயிர்களைக் கைப்பற்றுவதற்காக இவ்வமரரை இறைவன் நியமித்துள்ளான் என மார்க்கமேதைகள் கருதுகின்றனர்.

அம் மண்ணை, தான் விரும்பியபடி இறைவன் செப்பனிட்டு, எங்கள் ஆதிபிதா நபி ஆதம் (அலை) அவர்களைப் படைத்தான். (15:26) பிறகு உயிரை உட்புகச் செய்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பினுள் உயிர் சென்றதும், அவருக்குத் தும்மல் உண்டானது. தும்மி முடிந்ததும், ''எல்லாப் புகழும் இறைவனுக்கே'' என்ற வாக்கியத்தைச் சொல்லும்படி இறைவன் அவருக்குக் கற்பித்தான். அதன்படியே அவர் மொழிய, ''இறைவனின் கிருபை உமக்குக் கிடைக்கட்டும்'' என்று இறைவனே அவரை ஆசீர்வதித்தான். ஆசீர்வதிக்கப்பட்ட நபி ஆதம் (அலை) அவர்கள், சீவிப்பதற்காக சொர்க்கத்திலே விடப்பட்டார். அங்கு என்னென்ன பொருட்கள் காணப்பட்டனவோ, அவைகளின் நாமங்கள் அனைத்தையும் நபியவர்கட்கு இறைவன் அறிவித்துக் கொடுத்தான். (2:31)

ஒரு சோதனைக்காக இறைவன் அமரர்களை நோக்கி, அவர்களின் முன்பாகயிருந்த சில பொருட்களின் நாமங்களைக் கூறும்படி ஏவினான். அவர்களுக்கோ அவ்வாறு அறிவிக்கமுடியாமற் போய்விட்டது. சிரம் தாழ்த்தியவர்களாக உடனே இறைவனை நோக்கி, ''மிகத் தூய்மையான எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ அறிவித்தவைகளைத் தவிர வேறொன்றையும் நாங்கள் அறியமாட்டோம், நிச்சயமாக நீ மிக்க அறிந்தோனும் ஞானமுடையோனுமாயிருக்கின்றாய்,'' எனத் துதித்தார்கள். (2: 31, 32)

பின், இறைவன் நபி ஆதம் (அலை) அவர்களை நோக்கி, ''நீர் இவற்றின் பெயர்களை அவர்களுக்கு அறிவியும்,'' எனக் கட்டளையிட்டான். அதன்படியே அவர் அவற்றின் பெயர்களை அவர்களுக்கு அறிவித்தார். அப்பொழுது, இறைவன் அமரர்களை நோக்கி, ''நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நான் நன்கு அறிபவன் என்று முன்பு உங்களுக்கு நான் சொல்லவில்லையா? ஆதமைப் பற்றி நீங்கள் மறைத்ததையும் வெளியிட்டதையும் நிச்சயமாக நான் நன்கு அறிவேன்,'' என்று கூறினான். (2,33)

பின்னர் இறைவன் அமரர்களை நோக்கி, ''மரியாதையின் நிமித்தம் ஆதமுக்கு நீங்கள் சிரம் தாழ்த்துங்கள்,'' எனக் கட்டளையிட்டான். ஒரு அமரரைத் தவிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையோர் மரியாதை செய்தனர். இறைவன் அவ்வமரரை நோக்கி, ''சிரம் பணிந்தோருடன் சேர்ந்து நீயும் சிரம் பணியாதது ஏன்''? எனக் கேட்டான். நபி ஆதம் (அலை) அவர்கள் மண்ணால் படைக்கப்பட்டிருப்பதாகவும், தான் ஒளியினால் படைக்கப்பட்டிருப்பதாகவும்; எனவே மண்ணால் படைக்கப்பட்ட அவருக்கு, தான் மரியாதை செய்யவேண்டிய அவசியமில்லை எனவும் கூறி, அவ் வமரர் கர்வம் கொண்டார், (2 : 34, 15 : 29 – 33, 17:61) எனவே அந்த அமரரை இறைவன் இப்லீசாகச் சபித்தான்.

நபி ஆதம் (அலை) அவர்கள் சொர்க்கத்திலே சீவித்து வரலானார். அவருக்குத் துணையாக ஒரு பெண்ணைப் படைக்க நாடி, இறைவன் நபியவர்கட்கு ஓர் ஆழ்ந்த நித்திரையை வரச்செய்தான். அவர் கண்ணயர்ந்தபொழுது, அவரின் இடதுபுற விலா எலும்புகளிலிருந்து கோணலான ஓர் எலும்பை யெடுத்து, ஒரு பெண்ணைப் படைத்து அவருக்குப் பக்கத்திலே அமர்த்தினான். நபி ஆதம் (அலை) அவர்கள் நித்திரையை விட்டெழும்பியதும், தன்னைப் போன்ற உருவமொன்று தனக்குப் பக்கத்தே இருந்ததைக் கண்டு, ''என் இறைவனே! இது என்ன?'' என்று கேட்டார். ''இது உமக்காக, உம்மிலிருந்து படைக்கப்பட்ட ஒரு பெண்; பெயர் ஹவ்வா,'' என இறைவன் கூறினான்.

மேலும் இறைவன் அவரை நோக்கி, "ஆதமே! நீர் இப் பெண்ணுடன் இச் சோலையில் வசித்திரும். நீங்கள் இருவரும் இதில் விரும்பிய இடங்களுக்குச் சென்று விரும்பியவற்றைப் புசியுங்கள்; ஆனால் இவ் விருட்சத்தை மட்டும் அணுகாதீர்கள். அப்படி அணுகினால், நீங்களே உங்களுக்குத் தீங்கிழைத்துக்கொண்டவராவீர்கள்,'' என்று கூறி, ஒரேயொரு மரத்தின் கனியை மட்டும் விலக்கி வைத்தான். (2:35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளைக் கேட்டதும் நபி ஆதம் (அலை) அவர்கள் சந்தோஷப்பட்டார். இறைவன் இன்னும் அவருக்கோர் எச்சரிக்கை செய்தான். "ஆதமே! நிச்சயமாக இங்கு இப்லீஸ் ஆகிறவன் உமக்கும் உம்முடைய மனைவிக்கும் விரோதியாவான். உங்களிருவரையும் இச் சோலையிலிருந்து அவன் வெளிப்படுத்திவிடாது நீங்கள் மிகவும் ஜாக்கிரதை யாக இருங்கள்; தவறின், நீங்கள் கஷ்டத்துக்குள்ளாகி விடுவீர்கள். திண்ணமாக இச் சோலையில் நீங்கள் பசியாகவோ, நிர்வாணமாகவோ இருக்கமாட்டீர்கள். அத்துடன், நிச்சயமாக நீங்களிதில் தாகிக்காமலும் வெய்யிலால் தாக்கப்படாமலும் இருப்பீர்கள்," என்றும் கூறி சில நிபந்தனைகளை ஏற்படுத்தினன். (19: 117—119)

சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்ட நபி ஆதம் (அலை) அவர்கள், சந்தோஷத்தால் கையை நீட்டியவண்ணம் தன் மனைவியை நெருங்கினர். அப்பொழுது அமரர்கள் நபியவர்களை நோக்கி, "ஒரு பெண்மீது எவ்விதம் நீங்கள் கையை நீட்டுவீர்கள் ?" எனக் கேட்டனர், "எனக்காக, என்னிலிருந்து படைத்து, இறைவன் எனக்களித்த பெண்ணல்லவா இது? நான் கையை நீட்டுதல் குற்றமா"? என அமரர்களையே கேட்டார். "அது சரிதான், பெண்ணுடைய மஹரைச் செலுத்திவிட்டு கையை நீட்டுங்கள்," என்றனர் அமரர்கள். மஹராக தான் எதைக் கொடுக்கலாம் என மீண்டும் அமரர்களையே கேட்டார். அமரர்கள் எது மஹர் என அறிவித்தார்களோ அதைச் செலுத்திவிட்டு, நபி ஆதம் (அலை) அவர்கள் தன் மனைவி ஹவ்வா (அலை) அவர்களுடன் சொர்க்கலோகத்தில் சந்தோஷமாகச் சீவித்து வந்தார்.

சொர்க்கத்தின் வாயிலில் "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்ர சூலில்லாஹி" என்ற திருவசனம் எழுதியிருப்பதைக் கண்டு, ஒரு நாள் நபி ஆதம் (அலை) அவர்கள் இறைவனை நோக்கி, "என் இறைவனே! உனது திருநாமத்தின் பக்கத்திலே வேறு ஒரு நாமம் காணப்படுகிறதே, அது யார்?" என வினவினர். அப்பொழுது இறைவன், "ஆதமே! அவராகிறவர் உங்களிலிருந்து பிறக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பின்சந்ததிகளில் ஒருவர். உலகம் முடிவுறும் காலத்தில் அவரை நபியாகவும் றசூலாகவும் அனுப்புவேன். அவருக்குப் பின் யாதொரு நபியும் இருக்கமுடியாது. அவரை மிகவும் மேன்மையாக்கியுள்ளேன். அவர் படைக்கப்படாமலிருந்திருந்தால் நீங்களுமே படைக்கப்பட்டிருக்கமாட்டீர்கள் — அவ்வளவு மகத்துவம் பொருந்தியவர்—'' என விடையளித்தான்.

காலங்கள் சில கழிந்தன, அவர்களிருவரையும் இப்லீஸ் வழிகெடுக்க முனைந்தான். எவ்விதமெனில், இறைவன் விலக்கிவைத்த அவ் விருட்சத்தின் கனியைப் புசிக்கும்படி அவர்களைத் தூண்டினான். அவர்கள் அதைப் புசித்ததினால் இறைவனின் சொல்லுக்கு மாறுசெய்தவர்களானார்கள். எனவே, சொர்க்கத்தில் இருப்பதற்கு அவர்களுக்குத் தகுதியற்றுப்போய்விட்டது. இறைவன் அவர்களிருவரையும் நோக்கி, "இவ்விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கூடாதென உங்களை நான் தடுத்ததல்லவா? இப்லீஸ் ஆகிறவன் நிச்சயமாக உங்களிருவருக்கும் பகிரங்கமான விரோதி என்றும் உங்களுக்கு அறிவித்தேனல்லவா?'' எனக்கேட்டான். அதற்கவர்கள், "எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக்கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள்புரி; இல்லாவிட்டால் நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகிவிடுவோம்,'' என இறைவனைக் கெஞ்சினர். இறைவனோ அவர்களை நோக்கி, "இதிலிருந்து நீங்கள் வெளியேறிவிடுங்கள். உங்களில் ஒருவர் மற்றவருக்கு விரோதியாகிவிடுவீர்கள். பூமிதான் உங்களுக்குத் தங்குமிடம். அதில் ஒரு காலம்வரை சுகம் அனுபவித்து ஜீவிக்கலாம்; பின் அதிலேயே மரணிப்பீர்கள். ஈற்றில் அதிலிருந்தே எழுப்பப்படுவீர்கள்,'' என்று கூறி பூலோக வாழ்க்கையை நிர்ணயித்தான். (2:36, 7:22-25)

இப்லீசை நோக்கி, ''நீ இங்கிருந்து அப்புறப்பட்டுவிடு. நிச்சயமாக எம் சந்ததியிலிருந்து நீ வெருட்டப்பட்டுவிட்டாய். அன்றியும், விசாரணை நாள் வரும் வரையில் நிச்சயமாக உன்மீது என் சாபம் உண்டாவதாக,'' என்று கூறி சபதம் செய்தான். அதற்கவன், ''என் இறைவனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ என் வழியைத் தடுத்துக்கொண்டாய். ஆகையினால், நான் பூமிக்குச் சென்று, அதிலுள்ள பொருட்களை மக்களுக்கு அழகாகக் காண்பித்து, அவர்களை வழிகெடுக்க முனைவேன். இதற்காக, இறந்தோர் உயிர்பெற்றெழும்பும் நாள் வரும் வரையில் எனக்கு அவகாசம் அளிக்கவேண்டும்,'' எனக் கேட்டான். ''என்னிடம் வருவதற்கு அது தான் சரியான வழி. ஆனால் எனது நல்லடியார்களை உன்னால் வழிகெடுக்க முடியாது. உன்னைப் பின்பற்றிய யாவருக்கும் வாக்களிக்கப்படும் இடம் நிச்சயமாக நரகமேயாகும்,'' என்று கூறி இறைவன் இப்லீசுக்கு அவகாசம் கொடுத்தான். (15:34-43)

நபி ஆதம் (அலை) அவர்களும், அவர் மனைவி ஹவ்வா (அலை) அவர்களும் தண்டனை பெற்றவர்களாகப் பூமிக்கு இறக்கப்பட்டார்கள். அவ் வேளையில் இத் தரணியில் யாருமே இருக்கவில்லை. காடு, மலை, கடல், ஆதிய இயற்கை வஸ்துகள்தாம் காணப்பட்டன. இருவரும் வெவ்வேறு இடங்களிலே இறக்கப்பட்டதால் ஒருவரையொருவர் காணாது கண் கலங்கினர். தாங்கள் செய்த ஒரேயொரு தவறுக்காக சொர்க்க வாழ்வை இழந்ததையிட்டு, இரவு பகலாகக் கண்ணீர் விட்டனர். அத் தவறை மன்னிக்கும் படி பல வருட காலமாக, சிந்திய கண்களுடன் இறைவனைக் கெஞ்சினார்கள். மன்னிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஈற்றில், இறைவனை நோக்கி, ''எங்கள் இறைவனே! பாவங்களை மன்னிப்பவனே! உலகம் முடிவுறும் காலத்தில் என் சந்ததியில் நின்றும் ஒரு நபி பிறக்க இருப்பதாகவும், அவர் சிருஷ்டிருக்கப்படாதிருந்தால் நானும் சிருஷ்டிருக்கப்பட்டிருக்கமாட்டேன் — அவ்வளவு மகத்துவம் பொருந்தியவர் எனவும் எனக்கு நீ அறிவித்தாயே, அந்த நபியாகிய எனது பிள்ளையின் பொருட்டைக்கொண்டாவது எங்கள் தவறை மன்னித்தருள்,'' என வேண்டினார். எல்லாம்வல்ல இறைவன் அவர்களிருவரையும் மன்னித்து, அவர்களுக்கருள் புரிந்தான். அவரின் தவறை மன்னித்து விட்டதாக குர்ஆன் மூலமே எமக்கு அறிவிக்கின்றான். (2: 37)

பூமியில், ஓரிடத்திலே அவர்களிருவரையும் இறைவன் சந்திக்கச் செய்தான். அன்பின் காணிக்கையாக கண்கள் கண்ணீரைக் கொட்டின. தவறு இழைக்குமுன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த நிலையையும், தவறு இழைத்தபின் இருந்த நிலையையும் எண்ணியெண்ணி ஏங்கினர். தங்களுக்கு நேர்ந்த கதியையும் கஷ்டங்களையும் மனதிற்கொண்டு, வேதனைப் பட்டார்கள். பூமியில், எதை, எங்கே, எப்பொழுது, செய்வது என்பன ஒன்றுமே தெரியாதவர்களாயிருந்தனர்.

உடுப்பதற்கு உடை இல்லாததால் இலைகளைக்கொண்டு மர்மஸ்தானங்களை மறைத்தவண்ணம் காட்சியளித்தனர். ஆட்டின் உரோமத்திலிருந்து உடை நெய்யும் முறையைக் கற்பிக்கும்படி அமரர் ஜிப்ரீல் (அலை) அவர்களை இறைவன் ஏவினன். அதன்பிரகாரம் அவ் வமரர் பூமிக்கு வந்து, நபி ஆதம் (அலை) அவர்கட்கு உடை நெய்யும் முறையைச் சொல்லிக்கொடுத்தார். நெய்த உடையை இருவரும் அணிந்தார்கள்.

தங்களுக்குப் பசிப்பதாக அவ்வமரரிடம் அவர்கள் முறையிட்டனர். உடனே இறைவன் அவ் வமரரை நோக்கி, பயிர் செய்யும் முறையை அவருக்குக் காண்பிக்கும்படி கட்டளையிட்டான். பூமியைப் பண்படுத்துதல் தொடக்கம், தானியத்தைக் கையில் பெறும் வரையுமுள்ள கமத்தொழில் வேலைகள் அனைத்தையும் அவ் வமரர் நபியவர்கட்குப் பழக்கிக் கொடுத்தார். தானியத்தைக் கண்டதும், பசி மிகுந்த நபியவர்கள் அமரரை நோக்கி, "இதைச் சாப்பிடலாமா?" எனக்கேட்டார். இல்லை யெனக் கூறிவிட்டு, தானியத்தை மாவாக்கி உரொட்டி சுடும் முறையைச் சொல்லிக்கொடுத்தார். உரொட்டியைக் கண்டதும், "சாப்பிடலாமா?" எனக் கேட்டார். முடியாதென அமரர் கூறிவிட்டு, அவர்களைக் குளித்துவிட்டு வரும்படி ஏவினர். குளித்துவிட்டு வந்ததும், "சாப்பிடலாமா?" என்று கேட்டார். "ஆம். இறைவனின் நாமத்தைக் கூறிவிட்டு உண்ணுங்கள்," என்று அமரர் கூறுயதும்; பூமியில் முதலாவது உணவை அவர்களிருவரும் உண்டனர். பின், தொழுகையை இறைவன் அவர்கட்குக் கடமையாக்கி, தொழும் முறையையும் அமரர் மூலம் அவர்களுக்குப் பழக்கிக் கொடுத்து, தொழும் நேரத்தை அறிவதற்காக ஒரு வசதியையும் ஏற்படுத்தினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வாழ்க்கையை அவர்கள் மேற்கொண்டார்கள். வாழ்க்கையில் அவர்களுக்கு எவை யெவை புரியாது இருந்தனவோ, அல்லது எவை யெவை கஷ்டமாக இருந்தனவோ, அவைகளை யெல்லாம் இறைவன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக அறிவித்தும் இலேசாக்கியும் வந்தான்.

சில காலம் கடந்ததும் அவர்களுக்குப் பிள்ளைகள் பிறந்தன, பிள்ளைகளெல்லாம் இரட்டைக் குழந்தைகளாகவே பிறந்தன. நபி ஆதம் (அலை) அவர்களுக்கு இருபது சூலிலே மொத்தம் முப்பத்தொன்பது பிள்ளைகள் பிறந்தன. அவர்களில் *ஷீத் என்பவர் மட்டும் தனியே பிறந்தார். ஒவ்வொரு சூலிலும் ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாகப் பிறந்தன. முதலாவது சூலிற் பிறந்த ஆணின் பெயர் காபீல், பெண்ணின் பெயர் இக்லீமா. இரண்டாவது சூலிற் பிறந்த ஆணின் பெயர் ஹாபீல், பெண்ணின் பெயர் அமதுல் முகீது. பிள்ளைகள் வளர்ந்து பருவ வயதையடைந்தால், ஒரு சூலில் பிறந்த ஆணும் பெண்ணும் அடுத்த சூலிற் பிறந்த பெண்ணுக்கும் ஆணுக்கும் முறையே திருமணம் செய்து வைக்கப்பட்டனர்.

நபி ஆதம் (அலை) அவர்களுடைய புதல்வர்களில் ஹாபீல் என்பவர் விவசாயம் செய்பவராகவும் காபீல் என்பவர் மந்தைமேய்ப்பவராகவுமிருந்தனர். ஒரு நாள், ஹாபீல் தன்னுடைய விளைச்சலிலிருந்து ஒரு சிறு பாகத்தையும், காபீல் தன்னுடைய மந்தைப் பெருக்கத்திலிருந்து ஒரு சிறு பாகத்தையும் எடுத்துவந்து ஓரிடத்திலே வைத்து, இறைவனுக்கு நன்றி செய்யும் நோக்கமாக அதை அர்ப்பணம் செய்தார்கள். ஹாபீலுடைய காணிக்கை இறைவனால் அங்கீகரிக்கப்பட்டது; ஆனால் காபீலுடைய காணிக்கை அங்கீகரிக்கப்படவில்லை. இதனால் மூத்த சகோதரன் மீது தம்பிக்குக்கோபமுண்டானது. இறுதியில், காபீல் தன் சகோதரன் ஹாபீலைக் கொலைசெய்தான். (5:27–30)

பிரேதத்தை என்ன செய்வதென்றே அவனுக்குத் தெரியாது. அதைத் தன் தோள்மீது சுமந்துகொண்டு அலைந்து திரிந்தான். களைப்படைந்த அவன், இளைப்பாறுவதற்காக ஒரு மரத்தின்கீழ் உட்கார்ந்தான்.

*உலகில் இரண்டாவது நபி. இவருடைய சரித்திரம் மிகவும் குறுகியது. ஆகவே இங்கு சேர்க்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை அவன் கண்முன்னே இரண்டு காகங்கள் சண்டை செய்தன. அவைகளில் ஒன்று இறந்துவிட, மற்றது காலால் மண்ணைக் கிண்டி, அதனுள் இறந்ததை வைத்து குழியை மூடியது. இதைக் கண்ட காபீல் கண் கலங்கினான். ''ஐயோ! இக் காகம் செய்த வேலையைக் கூட என் சகோதரனுக்கு என்னால் செய்யமுடியாமற்போய் விட்டதே!'' என்று கூறி, பெரிதும் மனம் கலங்கினான். (5:31) காகத்தின் செயலைப் பின்பற்றிய காபீல், உலகிலே முதலாவதாகத் தோன்றிய அப் பிரேதத்தை, பூமியில் அடக்கம் செய்தான். தொடர்ந்து அவ்விடத்திலே சீவிக்க அவன் விரும்பவில்லை. ஆதலால், தன் சகோதரி இக்லீமாவைக் கூட்டிக்கொண்டு, * அதன் இராச்சியத்திலே குடியேறினான். அவர்களிருவருக்கும் அங்கே சந்ததி உண்டானது.

நபி ஆதம் (அலை) அவர்கள் கமத்தொழிலையே செய்துவந்தார். இறைவனிடமிருந்து அருளப்பட்ட 10 சுஹுபுகளைக் கொண்டு தன் பிள்ளைகளை நேர்வழியில் நடாத்திவந்தார்.

ஒரு நாள், அவர் மரணிக்கும் காலம் நெருங்கிவிட்டதாக நபி ஆதம் (அலை) அவர்களுக்கு இறைவன் அறிவித்தான். அதற்கவர் இறைவனை நோக்கி, ''என் இறைவனே! மரணமென்றால் என்ன? நான் அதை அறியேன்,'' எனக் கேட்டார். அதற்கு இறைவன், ''ஆதமே! அதுதான் இவ்வுலக வாழ்வின் முடிவு. மரணம் வந்துவிட்டால் உனக்கும் இவ் வுலகிற்கும் ஒரு விதத் தொடர்புமே யிருக்கமாட்டாது. அந்த மரணம், உலகில் உண்டாகக்கூடிய எல்லா உயிர் வஸ்துகளின்மீதும் திணிக்கப்பட்டிருக்கிறது,'' என விடையளித்தான். இவைகளைக் கேட்டதும், நபி ஆதம் (அலை) அவர்களுடைய மனதிலே ஒருவித திடுக்கம் ஏற்பட்டது. இறைவனின் வேண்டுகோளின்படி, தனது மகன் ஷீத் அவர்களுக்கு மரணசாசனம் கூறினார்.

உயிரை எடுப்பதற்காக இஸ்ராயீல் (அலை) அவர்கள், நபியவர்களை அணுகினார். அந்த வேளை, அவர் தன்னையே மறந்தார். மரணவேளையில் ஓர் உயிர் அனுபவிக்கும் இன்னலையும் அவஸ்தையையும் அறிந்தார். இஸ்ராயீல் (அலை)

* ஆதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை நோக்கி, ''இறைவனின் அமரரே! இப்பேற்பட்ட கஷ்டமான மரணம் எனக்குமட்டுமா அல்லது என்னிலிருந்து பிறக்கும் சகல பிள்ளைகளுக்குமா,?'' என்று கேட்டார். ''உங்களின் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, சிற்றெறும்பைக்காண சிறிய வஸ்துகளுக்கும் இவ்வித மரணம் வந்தே தீரும்,'' என அவர் விடையளித்தார்.

ஒரு வெள்ளிக்கிழமை, மதிய வேளை, எம் தகப்பனார் நபி ஆதம் (அலை) அவர்களுடைய உயிர் இவ்வையகத்தை விட்டும் நீங்கியது. (இன்னாலில்லாஹி......) அமரர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் சொல்லிக்கொடுத்த முறைபோல் ஷீத் (அலை) அவர்கள் தகப்பனாரின் உடலைக் குளிப்பாட்டி, சொர்க்கலோகத்திலிருந்து அமரர்கள் கொண்டுவந்த சீலையினால் பிரேதத்தை உடுப்பாட்டினார். பிரேதத் தொழுகையை அவரே தலைமை தாங்கி நடாத்த; பின்னால் ஆயிரக்கணக்கான அமரர்கள் அணியணியாக நின்று தொழுகையில் கலந்துகொண்டனர். தொழுகை முடிந்ததும், நபியவர்களுடைய உடல் மண்ணிலே அடக்கம்செய்யப்பட்டது. மொத்தம் 1000 வருடங்கள் அவர் பூமியில் சீவித்தார்.

---

**
*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி இத்ரீஸ் (அலை)

நபி ஆதம் (அலை) அவர்கள் மரணமானதின்பின், அவருடைய மகன் ஷீத் (அலை) அவர்கள் நபியாகப் போதனை செய்து, தனது எழுநூற்றுப் பத்தாவது வயதிலே மரணமானார். அவரிலிருந்து ஐந்தாவது தலைமுறையில் நபி இத்ரீஸ் (அலை) அவர்கள் அவதரித்தார். இவருக்கு உகுநூகு என்ற வேறொரு நாமமும் இருந்தது.

இவர், நபி ஷீத் (அலை) அவர்களுடைய தோற்றத்தைப்போன்றிருந்தார். கையினால் சீலையைத் தைத்து, அதிலே கிடைக்கக்கூடிய வருமானத்தைக்கொண்டு ஜீவியம் கழிப்பவராக யிருந்தார். முதன் முதலாக எழுதுகோல் கொண்டு எழுதியதும், நட்சத்திரங்களைப் பற்றி கருத்துக்கள் வெளியிட்டதும் இவரேதான்.

மார்க்க விஷயங்களில் சிந்தனை செய்வதிலும், இறைவனை வணக்கம் செய்வதிலும் இளமையிலிருந்தே அக்கறை காட்டிவந்தார். வாலிபமானதின்பின், தனித்து வணக்கம் செய்பவராகக் காணப்பட்டார். மக்களிடையே மிகவும் கீர்த்தியுடையவராக யிருந்தார். உரிய வயதை யடைந்ததும், காபீலுடைய பின்சந்ததியி லுதித்த ஒரு வகுப்பினருக்கு நபியாக அனுப்பப்பட்டார். நபி ஷீத் (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட ஐம்பது சுஹுபுகளைக்கொண்டு மக்களை நேர்வழியில் அழைத்தார். அத்துடன், அவருக்கும் அவருடைய மக்களுக்குமென முப்பது சுஹுபுகளை அல்லாஹுதஆலா அருளினன்.

நபி இத்ரீஸ் (அலை) அவர்கள், இறைவனை வணங்குவதில் மிகவும் போற்றப்படுபவராக யிருக்கிறார். சுருங்கக்கூறின், தைப்பதற்காக ஊசியை ஒரு முறை குத்தினல், அதை இழுப்பதற்கு முன் இறைவனை ஒரு முறை துதிசெய்பவராக யிருந்தார். ஆனல் அவருடைய மக்களோ, வீண் விளையாட்டுகளில் அதிகம் ஈடுபடுகிறவர்களாகவும், சதா இசை பாடுகிறவர்களாகவும் இருந்தனர். அதுமட்டுமல்ல, விபச்சாரம் செய்து அவர்களிடையே ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையாக யிருந்தது. இதற்குத் தாய், சகோதரி, மகள் என்ற வேறுபாடே இல்லாமலிருந்தனர். இப்படியான மாக்களிடையே அவர் நபியாகப் போதனை செய்தார். ஒரு கிழமையில் மூன்று நாட்களில் மக்களை நேர்வழியில் அழைப்பதும், எஞ்சிய நான்கு நாட்களிலும் தனி வணக்கம் புரிவதும் அவரின் வழக்கமாக யிருந்தது.

ஒரு நாள், அழகான ஒரு மனிதன் அவரிடத்திலே வந்தார். நபியவர்கள் அதற்கு முதல் அம் மனிதனைக் கண்டதே யில்லை. எனவே, அவர் யாரெனவினவினர். அதற்கவர் விடையாக, ''இறை தூதரே! அல்லாஹ்வின் படைப்புகளில் நானும் ஒருவன்; இறை வணக்கத்தில் உங்களைப்போன்று அதிகம் பற்றுள்ளவன். எனினும், உங்கள் முறைப்படி, உங்களுடனிருந்து வணக்கம் புரிய மிகவும் ஆசைகொண்டுள்ளேன்,'' எனக் கூறினர். நபியவர்களும் அதற்கிசைந்தார்.

அன்றையத் தினம் அவர்களிருவரும் நெடுந்தூரப் பிரயாண மொன்று செய்தனர். சாயங்கால வேளையாகி விட்டது. மேய்ந்துவிட்டு வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓர் ஆட்டு மந்தையைக் கண்டார்கள். கூடச் சென்ற அம் மனிதன் ஓர் ஆட்டுக் கடாயைப் பிடித்தறுத்து, இறைச்சியை நபியவர்கள் முன் கொண்டு வந்து, ''பிரயாணத்தில் நாம் மிகவும் களைப்படைந்துவிட்டோம். இரவைக்குச் சாப்பிடுவதற்குக்கூட நம்மிடத்தில் ஒன்றுமில்லை. ஆகையினல், இதைச் சமைத்து உண்போம். பாவம் தீருவதற்காக அதிலிருந்து நோன்பும் நோற்போம்,'' என்று கூறினர். அதற்கு நபியவர்கள், ''யாது சொன்னீர்கள்? அனுமதியின்றிப் பிறருடைய பொருளை நாம் தொடுவதா?'' என்று, கேள்வியால் அவரைக் கண்டித்தார். கூடச்சென்ற அம் மனிதன், தன்னல் இயன்றளவு பல காரணங்களைக் காட்டி அதைச் சமைப்பதற்கு உத்தரவு கோரினர். நபியவர்கள் அதற்கு இடம் கொடுக்கவே யில்லை.

இரவு வேளையானதும், அவர்களிருவருக்கும் இறைவன் வேறு வழியால் உணவளித்தான், ஆனல் கூடச்சென்ற அம் மனிதன் உண்ணவில்லை. அன்றிரவெல்லாம் அவர்களிருவரும் வணக்கத்தில் ஈடுபட்டார்கள். மறு நாள் விடிந்ததும், மீண்டும் இறைவனிடமிருந்து அவர்களுக்கு உணவு கிடைத்தது. அதிலிருந்தும் அம் மனிதன் ஒன்றையும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புசிக்கவில்லை. மூன்றும் நாளும் இறைவனிடமிருந்து அவர்களுக்கு உணவு கிடைத்தது. அன்றையத் தினமும் அம்மனிதன் அதிலிருந்து கொஞ்சத்தையாவது புசிக்கவில்லை. வியப்படைந்த நபியவர்கள் அம் மனிதனை நோக்கி, ''மூன்று நாட்களாக என்னுடன் இருக்கின்றீர்கள், ஆனால் ஒன்றையுமே நீங்கள் சாப்பிட்டதாக நான் காணவில்லை. அப்படியிருந்தும் மிக உற்சாகமாகக் காணப்படுகின்றீர்கள். அதுமட்டுமல்ல, உங்கள் முகத்தில் ஒரு விதமான வாட்டத்தையுமே என்னால் கண்டுகொள்ள முடியாமலிருக்கிறது... நீங்கள் யார்?'' என்று கேட்டார். ''நான்தான் இஸ்ராயீல்,'' என விடையளிக்கப்பட்டது.

உடனே நபி இத்ரீஸ் (அலை) அவர்கள் திடுக்கிட்டு, ''என்னுடைய உயிரைக் கைப்பற்றும் நாள் வந்துவிட்டதா?'' என பதபதைப்புடன் கேட்டார். அதற்கு அமரர், ''இல்லை நபியே! அப்படியாக இருந்திருந்தால் ஒரு நொடிப் பொழுது நேரத்தைக்கூட நான் பிற்படுத்தியிருக்கமாட்டேன். எனினும் ஒரு சோதிப்புக்காக உங்களுடன் இருக்கும்படி இறைவன் என்னை ஏவினன்,'' என்று விடையளித்தார்.

ஒரு விஷயத்தில் சற்று ஐயம் கொண்ட நபியவர்கள் மீண்டும் அவ் வமரரை நோக்கி, ''மரணத்தையிட்டும் சாட்டப்பட்ட அமரரே! மூன்று நாட்களாக

7573

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் நீங்கள் இருக்கின்றீர்களே, இதற்கிடையில் ஒரு வஸ்துவின் உயிரும் உங்களால் எடுக்கப்படவில்லையா?'' என வினவினார். அதற்கு அமரர், ''அல்லாஹ்வின் தூதரே! இவ் வுலகிலுள்ள உயிர்வஸ்துகளை யெல்லாம், ஒரு தட்டத்திலே யுள்ள பொருட்களைப் பார்ப்பதுபோன்று பார்க்கக்கூடிய ஒரு சக்தியை இறைவன் எனக்குத் தந்துள்ளான். எதனுடைய உயிரைக் கைப்பற்ற வேண்டுமோ, அதனுடைய உயிரை அப்படியே வெகு இலகுவில் எடுத்துக் கொள்கின்றேன்,'' என விடை யளித்து மறைந்தார்.

ஒரு நாள் நபி இத்ரீஸ் (அலை) அவர்கள் அதே அமரருடன் உரையாடிக்கொண் டிருந்தார். பேச்சு முடிந்ததும் அமரரை நோக்கி, ''அல்லாஹ்வின் அமரரே! மரண வேளையிலுள்ள இன்னல்களை அறிவதற்கு நான் மிகவும் ஆசைப்படுகின்றேன். எனவே, என்னை ஒரு முறை மரணிக்கச் செய்து, மறு கணமே உயிர் பெற்றெழும்படி செய்கின்றீர்களா?'' எனக் கேட்டார். இக் கேள்வி அமரரை வியப்பில் ஆழ்த்தியது. அவர் நபியை நோக்கி, ''இறைவனின் தூதரே! அதனுடைய பாரதூரத்தை அறியாததினால்தான் இப்படியெல்லாம் நீங்கள் கேட்கின்றீர்கள். எனினும், அது இறைவனின் பொருத்தத்தைப் பொறுத்துள்ளது,'' என விடை யளித்தார்.

அதே வேளையில், அவருடைய ஆசையை நிறைவேற்றும்படி இறைவனிடமிருந்து அமரருக்கு உத்தரவு பிறந்தது. அதன்படியே அமரர் இஸ்ரயீல் (அலை) அவர்கள், நபி இத்ரீஸ் (அலை) அவர்களின் உயிரைக் கைப்பற்றி, சற்று நேரத்திற்குப் பின் உட்புகச் செய்தார். மரண வேளையின் கொடுமைகளை அறிந்த அவர், அன்றையத் தினத்திலிருந்து மிக வணக்கம் செய்பவராகவும், கூடுதலாக நோன்பு நோற்பவராகவும் காணப்பட்டார்.

மரணத்தின் கொடுமைகளை அறிந்த அவர், தான் இன்னும் ஒரு முறை மரணிக்கக் கூடாது என்பதற்காகத் தான் என்னவோ, ஓர் உபாயம் செய்தார். அந்த உபாயத்தின் முதலாம் அங்கமாக அதே அமரரை நோக்கி, ''இறை அமரரே! நரகத்தைப் பார்ப்பதற்கு நான் மிகவும் ஆசைப்படுகின்றேன், அதை உங்களால் காட்டமுடியுமா?'' எனக் கேட்டார். அதற்கு அமரர், ''நபியே! நீங்கள் விசித்திரமான ஓர் ஆசையைக் கொண்டுள்ளீர்கள். அதைப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பார்ப்பதைவிட, அதன் அருகில் செல்லவும் யாரும் விரும்புவதில்லையே! உங்களுக்கு ஏன் இந்த ஆசை?'' எனக் கேட்டார். அப்படி இருக்கும்பொழுதே, இறைவனின் உத்தரவும் கிடைத்தது. அமரர் இஸ்ரூயீல் (அலை) அவர்கள் நபியவர்களைச் சுமந்துகொண்டுபோய் நரகத்தின் வாயிலிலே நிறுத்தினர். அதற்கு அதிபதியாகிய அமரர் மாலிக் (அலை) அவர்கள், நபியவர்களைக் கூட்டிக்கொண்டு போய் நரகத்திலுள்ள எல்லாவிதமான கொடிய காட்சிகளையும் காட்டினர். எல்லாம் முடிந்ததும், இஸ்ரூயீல் (அலை) அவர்கள் நபியவர்களைப் பூலோகத்திற்குக் கொண்டுவந்தார். அன்றையத் தினத்திலிருந்து, நபி இத்ரீஸ் (அலை) அவர்கள் நரக வேதனையை நினைவுகூர்ந்து மிகவும் அச்சம் கொள்பவராகக் காணப்பட்டார். தொழுகையிலும் ஏழைவரி கொடுப்பதிலும் கூடிய அக்கறை காட்டும்படி மக்களுக்குப் போதனை செய்தார்.

உபாயத்தின் இரண்டாவது அங்கமாக ஒரு நாள் அவர், இஸ்ரூயீல் (அலை) அவர்களை நோக்கி, ''அல்லாஹ்வின் அமரரே! சொர்க்கத்தையும் அதிலுண்டான சோபனங்களையும் காண்பதற்கு நான் மிகவும் ஆசைப்படுகின்றேன்; உங்களால் காண்பிக்கமுடியுமா?'' எனக் கேட்டார். அவரால் ஒரு முடிவுமே சொல்லமுடியாமற் போய்விட்டது. அதற்கிடையில், அவருடைய ஆசையை நிறைவேற்றி வைக்கும்படி அல்லாஹ்விடமிருந்து அமரருக்கு ஆணையும் கிடைத்தது. எனவே, இஸ்ரூயீல் (அலை) அவர்கள், நபியவர்களை விண்ணுலகிற்குச் சுமந்து சென்று, சொர்க்கத்தின் வாயிலில் நிறுத்தினர். அதற்கு அதிபதியாகிய அமரர் றிழ்வான் (அலை) அவர்கள், நபியவர்களை அழைத்துச் சென்று, அங்குள்ள எல்லா விதமான பாக்கியங்களையும் காட்டினர். யாவும் முடிந்ததும், றிழ்வான் (அலை) அவர்கள் நபியவர்களைப் பார்த்து, ''அனைத்தையும் காட்டினேன், இனி நீங்கள் ஏகலாம்,'' என வேண்டினர்.

அப்பொழுது நபியவர்கள் அந்த அமரரை நோக்கி, ''அல்லாஹ்வின் அமரரே! இறைவன் எனக்கு அருளிய வேதத்தில் மக்கள் மரணிப்பாரென்றும், பாவம் செய்திருந்தால் நரகத்தில் தங்கி பின்பு சொர்க்கம் புகுவாரென்றும், அதில் புகுந்தவர் ஒருநாளும் அதைவிட்டும் வெளியேறுவதில்லை எனவும் கூறியுள்ளானே; அஃது அப்படியிருக்க மேற்கூறியவைகளைக் கடந்து சொர்க்கம் புகுந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை எவ்விதம் வெளியேறச் சொல்வீர்கள்?'' எனக் கேட்டார்.

உடனே றிழ்வான் (அலை) அவர்கள் இவ் விஷயத்தை இறைவனிடம் முறையிட, அவரை அங்கேயே விட்டுவிடும் படி இறைவனும் கட்டளையிட்டான். அதன் பிரகாரம் அவர் அங்கேயே விட்டுவைக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி நூஹ் (அலை)

நபி இத்ரீஸ் (அலை) அவர்களி லிருந்து இரண்டாவது தலைமுறையில் லாமக் என்னும் ஒருவர் பிறந்தார். வாலிப வயதிலே ஒரு நாள் லாமக் அவர்கள் காட்டினூடாகப் போய்க்கொண்டிருக்கும் பொழுது, ஆடு மேய்த்துக்கொண் டிருந்த ஒரு பெண்ணை அவ் வழியிலே கண்டார். அவர் அவளுடைய பெயரை வினவ, கைனூஸ் என விடை யளித் தாள். வயதையும் கேட்க நூற்றெண்பது என விடை கொடுத்தாள். லாமக் சற்று நேரம் அவளை ஏறெடுக்கப் பார்த்துவிட்டு, ''நீ பக்குவமடைந்த பெண்ணு?'' உனக்குத் திருமணம் முடிந்துவிட்டதா?,, என்று கேட்டார். பயத் தாலும் நாணத்தாலும் அவள் ஒன்றுமே பேசவில்லை.

லாமக் அப் பெண்ணை நோக்கி, ''பயம் கொள்ளாதே! நீ தன்னையறிந்த பெண்ணாக யிருந்தால் உன்னைத் திரும ணம் செய்துகொள்ள நான் விரும்புகின்றேன்,'' என்றார். அவருடைய முகப்பாவனையிலும் பேச்சிலும் அவரோர் தீங்கற்றவர் என்பதை யறிந்த கைனூஸ், அவரை நோக்கி, ''எனது கற்புக்குப் பங்கம் விளைவிப்பீர்கள் என்றெண்ணி உங்களோடு பொய் உரைத்தேன். எனக்கு வயது இருநூற் றிருபது; நான் பக்குவமடைந்த பெண். என்னை நீங்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டுமாயின், என் தகப்பனி டம் வந்து பெண் – பேசிக் கொள்ளுங்கள்,'' என்று கூறினாள்.

அதன்படியே லாமக் அவர்கள், அப் பெண்ணின் தகப்பனைச் சந்தித்து, பெண்பேசி, அப் பெண்ணைத் திரு மணம் செய்தார். கைனூஸ் கர்ப்பவதியாகி, உரிய காலத் தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். பிள்ளைக்கு நூஹ் என நாமமிட்டு அன்பாக வளர்த்து வந்தார்கள்.

நூஹ் அவர்கள் வாலிபமானார்கள். கூரிய புத்தியும், தெளிவான பேச்சும், இனிமையான தொனியும் அவருக்குப் பிறவிக்குணமாய் அமைந்திருந்தன. இதே காலத்தில் லாமக் அவர்கள், தனது எழுநூற் றெழுபத்தேழாவது வயதில் மரணமானார். எனவே, இளம் நூஹ் அவர்கள் கூலிக்கு மந்தை மேய்த்துத் தன் தாயையும் காப்பாற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். பின் தச்சுவேலை பழகி அதிலே பாண்டித்தியம் பெற்றார். ஊர்மக்களின் போக்கு அவருக்குப் பிடித்துக் கொள்ளாததினால், இடையிடையே கானகம் சென்று தனிமையிலும் வாழ்ந்து வந்தார்.

முன்னூற்றைம்பது வயது நிரம்பியதும் அவருக்கு நபித்துவம் கிடைத்தது. எனவே, நபி நூஹ் (அலை) அவர்கள், மக்களை நல்வழியில் அழைக்கும் பணியில் இறங்கினார்.

அதே காலத்தில், தர்மசீல் என்னும் ஓர் அரசன் அவ் ஊரை ஆண்டுவந்தான். அவன் மிகவும் கொடியவன். மதுபானம் அருந்துவதில் தனி இன்பம் கொள்பவன். அவனும் அவனுடைய குடிமக்களும்; ஐந்து பெரிய விக்கிர கங்களையும், பற்பல உருவங்களையுடைய ஆயிரத்து எழு நூறு சிறு விக்கிரகங்களையும் வணங்கி வந்தார்கள். பொன்னாலும் வெள்ளியினாலும் தர்மசீல் ஒரு மேடை செய்வித்து, விலையுயர்ந்த விரிப்புகளை அதன் மீது விரித்து, பெரிய விக்கிரகங்கள் ஐந்தையும் அந்த மேடையிலே அமர்த்தி, அவைகளுக்குப் பணிவுடை செய்வதற்காக நாளொன்றுக்கு ஒருவன் வீதம் குடிமக்களிற் சிலரை நியமித்திருந்தான்.

நபி நூஹ் (அலை) அவர்கள் மக்கள் உள்ள இடங்களுக்குச் சென்று, ''மக்களே! நிச்சயமாக உங்களுக்கு நான் பகிரங்கமாகவே அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றேன். அல்லாஹ்வை யன்றி மற்றெதையும் நீங்கள் வணங்காதீர்கள். அப்படி வணங்குவீர்களாயின், துன்புறுத்தும் நாளின் வேதனை நிச்சயமாக உங்களுக்கு வந்து சேரும் என நான் அஞ்சுகிறேன்,'' என்று கூறினார். *(11: 25, 26; 23: 23; 7: 59—63)* எனினும் மக்கள் அவரை நம்பவில்லை.

இன்னும், ''அல்லாஹ்வுக்கு நீங்கள் பயப்படவேண்டாமா? மெய்யாகவே நான் உங்களுக்கென இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட நம்பிக்கையான ஒரு தூதன். அல்லாஹ்வுக்குப் பயந்து எனக்கு நீங்கள் வழிப்படுங்கள். இதற்காக உங்களிடம் நான் யாதொரு கூலியும் கேட்கவில்லை. என்னுடைய கூலி யாவும், உலகத்தாரைப் படைத்து இரட்சித்து வளர்க்கும் றஹ்மானிடமே இருக்கின்றன. ஆதலால், அல்லாஹ்வுக்குப் பயந்து எனக்கு வழிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுங்கள். (24: 106—110; 11: 29) அவ்வாறு நீங்கள் நடந்தால், உங்களுடைய குற்றங்களை இறைவன் மன்னித்து, குறிப்பிட்ட காலம் வரை பூமியில் உங்களை அமைதியாக வாழச் செய்வான். வேதனைக்காக இறைவன் குறிப்பிட்ட தவணை வரும் பட்சத்தில், நிச்சயமாக அது தாமதியாது என்பதையும் நம்புங்கள்,'' என்றெல்லாம் கூறினர். (71: 2 - 4)

இவைகளைக் கேட்டபின் இரண்டொரு பேர் அவரை விசுவாசித்தனர். ஏனையோர் நபியவர்களை நோக்கி, ''உன்னை நாம் எம்மைப்போன்ற சாதாரண மனிதனாகவே காண்கின்றோம். அன்றியும், நீ எவ் வகையிலும் எம்மை விட உயர்ந்தவருமல்ல. ஆகையினால், உயர்ந்த பதவியை வகிக்க நீ விரும்புகின்றாய்போலும்! தூதரை அனுப்ப இறைவன் நாடியிருந்தால், மலக்குகளையே அனுப்பி யிருப்பான். நாங்கள் இதற்கு முதல் இப்படி ஒன்றைக் கேள்விப்பட்டதே யில்லை. உன்வார்த்தைகளை நம்பி உன்பக்கம் வருவோரெல்லாம் வசதியற்ற ஏழைகளாகவே யிருக்கின்றனர்,'' என்று கூறினர். (11: 27; 23: 24; 24: 111, 112)

அதற்கு நபி நூஹ் (அலை) அவர்கள், ''ஒருவர் செய்யும் வேலை இழிவானதோ புகழானதோ என்பதைப் பார்ப்பது எனது கடமை அல்ல, அது இறைவனின் கடமையாகும். விசுவாசம் கொண்டவர் எவராயிருந்தாலும் சரி, அவரை என்னால் விரட்ட முடியாது. நிச்சயமாக அவர்கள் தங்கள் இறைவனைச் சந்திப்பவர்களாகவே யிருக்கின்றனர். நீங்களோ மூடர்களாகக் காணப்படுகின்றீர்கள்,'' என்று கூறினர். (11:29, 24:12) நபியவர்களுடைய இவ் வார்த்தைகளை அந்த மக்கள் கேட்டதும், அவரைப் பைத்தியக்காரன் என அழைத்தனர். (23:25)

ஒரு நாள், அவ்வூர் மக்களுக்குப் பெருநாளாக இருந்தது. ஆலயத்தினுள்ளே யிருந்த விக்கிரகங்களை யெல்லாம் வெளியே எடுத்து, அவைகளைப் புது மேடைகளிலே நிறுத்தி, அவைகளின்முன் ஆடு மாடுகளைப் பலி கொடுத்து, மாமிசத்தை நெருப்பிலிட்டு எரித்துக்கொண்டிருந்தார்கள். கொடுத்த பலி எரிந்ததும், விக்கிரகங்களின் முன்னே வந்து, அவைகளை வணங்கிவிட்டு மதுபானம் அருந்தினார்கள். வெறியின் போதையால் மதிமயங்கிய அம் மக்கள், ஆடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் செய்துகொண்டு, பெண்களுடன் புணர்கிறவர்களாகவும் இருந்தார்கள்.

அதே வேளையில் நபி நூஹ் (அலை) அவர்கள் அங்கே வந்தார். வெறியால் ஈசல்போல் சிதறிக்கிடந்த மக்களூடாகச் சென்று, விக்கிரகங்கள் இருந்த மேடைக்குப் பக்கத்திலே போய் நின்றார். இறைவனின் நாமத்தை மனதிலே நினைவுகூர்ந்து, ''ஓ மனிதர்களே! இறைவனின் உண்மைத் தூதனுகிய யான் இதோ உங்களை நேர்வழியில் அழைக்கின்றேன். இறைவனை வணங்குவதிலும், இறைவனின் கட்டளைக்கு பணிந்து நடப்பதிலும் மனம் திரும்புங்கள். இதோ நீங்கள் செய்யும் இப்படியான தீய வேலைகளிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். நம் எல்லோரையும் படைத்து, நம்மை ஆட்சி செய்கின்ற ஒரே இறைவனை வணங்குங்கள். அந்த ஒரே இறைவனுக்கே பயப்படுங்கள்......'' என்று சத்தமிட்டுக் கூறினார்.

மதிமயங்கி மண்ணிலே புரண்டுகொண்டிருந்த தர்மசீலின் காதுகளிலே இவ் வார்த்தைகள் விழுந்தன. அவன், சற்று அறிவு பெற்றவன்போல் தனது தலையை உயர்த்திய வண்ணம் சேவகர்களை நோக்கி, ''இஃதென்ன அழைப்பு?'' என வினவினான். அதற்குச் சேவகர்கள், ''அரசே! இது லாமக்குடைய மகன் நூஹ் என்பவனுடைய அழைப்பாகும் இவனுக்கு முன்பு பைத்தியம் பிடித்திருந்தது; இப்பொழுது அது அதிகரித்துவிட்டதுபோலும்! ஒரேயொரு தெய்வத்தை வணங்கும்படியும், விக்கிரக வணக்கத்தை விட்டுவிடும்படியும் கத்துகிறான்......'' என்று கூறினர்.

கோபமடைந்த தர்மசீல், நபியவர்களை இழுத்துவரும்படி கட்டளை இட, அதன்படியே அவர் அவனிடம் கொண்டு வரப்பட்டார். ''எங்களுடைய விக்கிரகங்களை நீ ஏன் இழிவாகப் பேசினுய்'' என்று சொல்லிய வண்ணம் அரசன் அவரை அறைந்துவிட்டு, ''நீ யார்?'' எனக் கேட்டான். நபி நூஹ் (அலை) அவர்கள் அதைச் சகித்துக்கொண்டு, ''நான் லாமக்குடைய மகன் நூஹ், உலகத்தைப் படைத்து அதைப் பேணி வளர்க்கிற அல்லாஹ்வின் தூதுவன். தீய வழியிலிருந்து மக்களை மீட்டு, நேரான வழியில் எடுத்துச் செல்வதற்காக இறைவனுல் அனுப்பப்பட்டுள்ளேன். எவ்வித கஷ்டம் நேரிடினும், மக்களை நற்பாதையில் அழைப்பதே எனது கடமை'' என விடையளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலைக் கேட்டு அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்த தர்மசீல், ஒருவாறு தன்னை அடக்கிக்கொண்டு, ''நூஹே! நீ பைத்தியக்காரன் என நான் கேள்விப்படுவதினால் இப்பொழுது நீ பேசியவைகளை மன்னித்துவிடுகின்றேன். உமக்குப் பண வசதி இல்லாவிட்டால் எனது பணத்தைக் கொண்டு உன் நோய்க்கு வைத்தியம் செய்கிறேன்; இணங்கிவிடு. இல்லாவிட்டால், இப்படி எங்கள் விக்கிரகங்களை இழிவாகப் பேசும் பழக்கத்தை விட்டுவிடு,'' என்று கூறினான்.

இவைகளைக் கேட்டதும் நபி நூஹ் (அலை) அவர்கள் அரசனை நோக்கி, ''அரசே! உண்மையாகவே எனக்குப் பைத்தியமில்லை; உங்கள் பணத்தில் ஆசையுமில்லை. அன்றியும், உங்கள் பணம் எனக்காகச் செலவிடப்படுவதையும் நான் விரும்பமாட்டேன். ஆனால் நான் விரும்புவது ஒன்றேயொன்றுதான். அதாவது, நான் இறைவனின் தீர்க்கதரிசி என்று என்னை நீங்கள் விசுவாசிப்பதையும், என் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்பதையுமே விரும்புகின்றேன்,'' என்றார். கோபம் கொண்ட அரசன் நபியவர்களை மிகவும் கடிந்துபேசி, போகும்படி கட்டளையிட்டான். அவ்விடத்திலே, உம்ருத் என்ற ஒரேயொரு பெண் மட்டும் அவரை விசுவாசம் கொண்டாள். அப் பெண்ணையும் கூட்டிக்கொண்டு நபியவர்கள் அவ்விடத்தை விட்டகன்றார்.

நபி நூஹ் (அலை) அவர்கள் அந்தப் பெண்ணையே மணக்கவேண்டியதாயிற்று. எனவே, அப் பெண்ணை அவர் தனது மனைவியாக ஏற்றெடுத்தார். அவர்களிருவருக்கும், ஹாம், சாம், யாபிது என்னும் மூன்று ஆண்களும் இன்னும் மூன்று பெண்களும் பிறந்தனர். சில வருடங்கள் சென்றதும், வாயிலா என்ற இன்னுமொரு பெண்ணும் அவரை விசுவாசித்தாள். அந்தப் பெண்ணையும் அவரே மணந்துகொள்ள வேண்டியதாயிற்று. அப் பெண், கன்ஆன் என்ற ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டு, விசுவாசத்தை யிழந்து, பழைய மார்க்கத்திற் சேர்ந்தாள்.

நபி நூஹ்(அலை) அவர்கள் தொடர்ந்து மார்க்கப் போதனை செய்துகொண்டே வந்தார். அவருடைய போதனைகளெல்லாம் மலைமேற் பொழிந்த மழைபோலாயின. அவைகளை யாருமே கேட்பதில்லை. அதற்குப் பதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாக அவரைக் கொடுமைப்படுத்தினர். கம்பு, கல் போன்றவைகளைக் கையில் வைத்துக்கொண்டு அவரைத் துரத்தித் துரத்தி அடித்தனர். அப்படியிருந்தும் சகித்துக்கொண்டு போதனை செய்தார். கால் கைகளைக் கட்டிவிட்டு வீதிகளிலே போட்டு மிதித்தார்கள். ஆனால், மண்ணைத் துடைத்துக்கொண்டு எழும்பும்பொழுது, "இறைவா! இம் மக்களுக்கு நல்ல அறிவைக்கொடு" என்றே துஆ கேட்பார். இப்படியாக 300 வருடங்கள் வரை தர்மசீலுடைய மக்கள் அவரைத் துன்புறுத்தினர்.

தர்மசீல் இறந்ததும் அவனுடைய மகன் தௌலீல் அரசனானன். அவனுடைய காலத்திலும் அவர் மார்க்கப் போதனை செய்து மக்களை நேர்வழிக்கு அழைத்தார். அவ்வேளைகளி லெல்லாம் விரல்களைக் காதுக்குள் வைத்துக்கொண்டு கூக்குரல் எழுப்பியவர்களாக அம் மக்கள் அவரைப் புறக்கணித்தனர். கல், மண் ஆகியவைகளை அள்ளியள்ளி அவரின் முகத்திலே எறிந்தனர். உயிர்போகக் கூடிய நிலைமையை அவர் அடையும்வரை அவரை அடித்துப் பாழ்வளவுகளிலே எறிந்தனர். தெளிவுபெற் றெழும்பியதும் போதனை செய்வார். இதைக் கண்ணுற்ற அம் மக்கள் அவரை நோக்கி, "அடா பைத்தியக்காரனே! உனக்கு நாங்கள் செய்யும் அட்டூழியங்களைப் பார்த்தால் எங்களுக்கே மன வருத்தமாக இருக்கிறது. திரும்பத் திரும்ப இவைகளைச் சொல்லி அலைகிறுயே, உனக்கு வெட்கமில்லையா?" எனக் கேட்பர்.

அதற்கவர், "என்னுடைய ஜனங்களே! உங்களிடத்தில் நான் இருப்பதும், அல்லாஹ்வின் வசனங்களை ஓதிக்காண்பிப்பதும் உங்களுக்குக் கஷ்டமாகத் தோன்றி; அதற்காக நீங்கள் எனக்கு ஏதும் தீங்குசெய்யக் கருதினால் நான் அல்லாஹ்வையே நம்பி யிருக்கின்றேன் (10: 71) அல்லாஹ்வுடைய பொக்கிஷங்கள் யாவும் என்னிடம் இருக்கின்றன என்றும் நான் கூறவில்லை; மறைவானவற்றை நான் அறிந்தவனுமல்ல; என்னை ஒரு மலக்கு என்றும் நான் கூறவில்லை. ஆனால் நேரான மார்க்கத்தில் சேரும்படி உங்களை அழைக்கிறேன்," என்று கூறினர். (11: 31) இப்படியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னல்களைச் சகித்தவண்ணம் தௌலீலுடைய காலத்தி லும் முன்னூறு வருடங்கள் மக்களை நற்பாதையி லழைத் தார். விரல்விட் டெண்ணக்கூடிய ஒரு சிறு தொகையினரே அவரை விசுவாசித்தனர்.

தௌலீல் இறந்ததும் அவனுடைய மகன் தப்றதூஸ் என்பவன் அரசனானன். அவனுடைய காலத்திலும் அவர் மார்க்கப்போதனை செய்து மக்களை நல்வழியி லழைத்தார். அந்த மக்கள் அவருடைய நீண்ட தாடியைப் பிடித்திழுத்து கன்னத்திலே அறைந்தார்கள். சுருங்கக் கூறின், அவர்க ளால் என்னென்ன இன்னல்களை அவருக்குச் செய்ய முடிந் ததோ, அவைக ளெல்லாவற்றையும் செய்தார்கள். அவரு டைய ஆயுட்காலமும் நீண்டுகொண்டு சென்றது. பின்சந் ததியினராவது அவருடைய மார்க்கத்தை அங்கீகரித்துவி டுவார்கள் என்றெண்ணிய அம் மக்கள், மரணவேளையில் தங்கள் குடும்பத்திலுள்ள சிறியோர்களைப் பக்கத்தே அழைத்து, ''நூஹுடைய மார்க்கத்தை நீங்கள் யாருமே பின்பற்றக்கூடாது. இதை உங்களிலிருந்து பிறக்கும் பின் சந்ததியினர் ஒவ்வொருவருக்கும் எத்திவைக்கவேண்டும்,'' என மரணசாசனம் கூறிவைத்தார்கள். இதனால் நபி நூஹு (அலை) அவர்களை மக்கள் விசுவாசிப்பது மிகவும் கடினமாகவே யிருந்தது.

ஒரு நாள், ஒரு கிழவன் தன்னுடைய மகனை நபிய வர்களிடம் கூட்டி வந்து, ''மகனே! நூஹ் என்பது இம் மனிதனைத்தான். இவன் பெரிய வஞ்சனைக்காரன்; நமது தெய்வங்களைப் பழித்துக்கொண்டு, புதியதோர் மார்க்கத் திற் சேரும்படி மக்களை அழைக்கின்றான்......'' என அறிமு கப்படுத்தினன். அப் பையன் இவைகளைக் கேட்டதுதான் தாமதம், மண்ணை யள்ளி நபி நூஹ் (அலை) அவர்களு டைய இரு கண்களிலும் வீசிவிட்டு வேடிக்கை பார்த்தான். அவ்விடத்தே நபியவர்கள் பெரிதும் துன்பப்பட்டார்.

அவ்வளவு காலமும் மக்கள் செய்த இன்னல்களைச் சகித்துவந்த நபி நூஹ் (அலை) அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவா! இம் மக்கள் நிச்சயமாக என்னைப் பொய் யாக் கிவிட்டார்கள். ஆதலால், எனக்கும் அவர்களுக்குமிடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ ஒரு தீர்ப்புச் செய்து, என்னையும் என்னுடனுள்ள விசுவாசிகளையும் நீ இரட்சித்துக்கொள். (24: 117, 118) இறைவா! நிச்சயமாக நான் இந்த மக்களை இரவுபகலாக அழைத்தேன். அவர்கள் வெருண்டோடுவதை யன்றி வேறொன்றையும் நான் காணவில்லை. உன்னிடத்தில் மன்னிப்புக்கோர அவர்களை நான் அழைத்தபோதெல்லாம், தங்கள் விரல்களைக் காதுக்குள் புகுத்திக்கொண்டு ஆடைகளால் தங்களை மறைத்தார்கள். பெரும் பிடிவாதத்தில் நிலைத்திருக்கிறார்கள். அவர்களை நான் பகிரங்கமாகவும் இரகசியமாகவும் அழைத்தேன்; சத்தமிட்டும் அழைத்தேன். நிச்சயமாக அனேகரை அவர்கள் வழிகெடுத்துவிட்டார்கள். இறைவா! இந் நிராகரிப்போரில் ஒருவரையுமே பூமியில் வைத்துவிடாதே. அப்படி விட்டுவைப்பாயானால், உன்னுடைய நல்லடியார்களைத் திண்ணமாக வழிகெடுத்துவிடுவார்கள். நிராகரிப்போர்களை யன்றி வேறு எவரையும் குழந்தைகளாகப் பெற்றெடுக்கமாட்டார்கள்......'' என இறைவனை வேண்டினார். (71: 5—27)

கிட்டத்தட்ட அறுநூற்றைம்பது வருடங்கள் பொறுமை சாதித்த புண்ணிய நபி அல்லவா அவர்? எனவே, அவருடைய வேண்டுகோளை இறைவன் அங்கீகரித்தான். ''ஒருவரையும் விட்டுவைக்காதே'' என்ற வார்த்தை அவருடைய வேண்டுகோளில் இடம் பெற்றதற்காக, அந்த மக்களைப் பூண்டோடு அழித்துவிட இறைவன் நாடினான். அந்த மக்களெல்லாம் ஒரு ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட இருப்பதாகவும், ஆகவே (இறைவன்) அறிவிக்கின்றபிரகாரம் ஒரு நீர்க் கப்பலைச் செய்துகொள்ளும்படியும் நபி நூஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் முன்னறிவித்தல் கொடுத்து; அந்த ஜலப்பிரளயம் வருவதற்குரிய ஓர் அடையாளத்தையும் அறிவித்தான். (11: 37, 23: 27)

இறைவன் அறிவித்ததின் பிரகாரம் அந்தக்கப்பலைச் செய்வதற்கு அவர் ஆயத்தமானார். அவ் விஷயத்தில் அவருக்கு உதவிபுரியும்படி ஜிப்ரீல் (அலை) அவர்களை இறைவன் ஏவினான். மனித உருவத்தில் அந்த அமரர் வந்து, நபியவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். அந்தக் கப்பலைச் செய்வதற்குக்கூட அம் மக்கள் விட்டார்களில்லை. அது பூர்த்தியாக்கப்படாமலிருப்பதற்காக எத்தனையோ சூழ்ச்சிகள் செய்தார்கள். ......த்தால் எங்களையா நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கப்போகின்றாய்?'' என்று கேட்டு அவரைப் பரிகாசம் செய்தனர். அதற்கவர், ''நீங்கள் இப்பொழுது எங்களைப் பரிகசிக்கும் இவ்வாறே, நாங்கள் வெகு சீக்கிரத்தில் உங்களைப் பரிகசிப்போம்,'' என்று கூறினார். (11: 38) எத்தனையோ இன்னல்களுக்கிடையில் அரும்பெரும் பாடுபட்டு, அதிக நாட்கள் கழிந்ததின்பின் அக் கப்பலைச் செய்து முடித்தார்.

ஒரு நாள், அறிவிக்கப்பட்ட அந்த அடையாளம் தென்பட்டது. இறைவன் நபி நூஹ் (அலை) அவர்களை நோக்கி, ''ஒவ்வொரு ஜீவப்பிராணியிலிருந்தும் ஆண் – பெண் கொண்ட ஒரு ஜோடியை கப்பலில் ஏற்றிக்கொள். அழிந்து விடுவார்கள் என நம் வாக்கு ஏற்பட்டுவிட்டவர்களைத் தவிர; உம்முடைய குடும்பத்தினரையும், விசுவாசிகளையும் அதில் ஏற்றிக்கொள்,'' என அறிவித்தான். (11: 40, 23: 27)

எல்லாம்வல்ல இறைவனின் நாமத்தைக் கூறிக்கொண்டு அந்தக் கப்பலிலே ஏறும்படி நபி நூஹ் (அலை) அவர்கள் தன்னுடனிருந்த விசுவாசிகளை வேண்டினார். (11: 41) அந்த அறுநூறு வருட காலத்திலும், ஆக எண்பது பேர்கள் மட்டுமே அவரை விசுவாசித்தார்கள். அந்தக் கப்பல் ஏழு அடுக்குகளைக் கொண்டதாக இருந்தது. அதில், ஆண்களை ஒரு தட்டிலும், பெண்களை ஒரு தட்டிலும், பறவைகளை ஒரு தட்டிலும், ஊர்வனவற்றை ஒரு தட்டிலும், கொடிய விலங்குகளை ஒரு தட்டிலும், சாதாரண விலங்குகளை ஒரு தட்டிலும் ஏற்றினார். வணக்கம் புரிவதற்காக ஒரு தட்டை வேறுபடுத்தி வைத்தார்.

எல்லா வேலைகளும் முடிந்ததின் பின், தானும் கப்பலில் ஏறினார். ஏறியதும் இறைவனை நோக்கி, ''அக்கிரமக்கார இந்த ஜனங்களிலிருந்து எங்களை இரட்சித்துக்கொண்ட அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். இறைவனே! நீ என்னை மிக்க பாக்கியமுள்ளவனாக, பாக்கியம் பெற்ற இடத்தில், உன் விருந்தாளியாகக் கப்பலிலிருந்து இறக்கிவைப்பாயாக! நீயோ விருந்தாளிகளை வரவேற்று உபசரிப்பதில் மிக்க மேலானவன்,'' எனக் கூறினார். (23: 28, 29)

திடீரென வானம் கறுத்தது. ஒரே மின்னல், ஒரே இடிமுழக்கம். மழைபொழிய ஆரம்பித்தது. சாதாரண மழை அல்ல அது. ஒரு ... ஓயாமல் தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெய்யத் தொடங்கியது. ''நாலைந்து நாட்களால் மழை நின்றுவிடும்,'' என்றெண்ணிய அவிசுவாசிகள் இலவு காத்த கிளியானார்கள். பல நாட்களாக மழை பெய்து கொண்டே சென்றது. நீரின் மட்டமும் வரவர உயர்ந்து கொண்டே சென்றது. மலையைப் போன்ற உயர்ந்த அலைகளும் எழும்பலாயின. ஊர்மக்களெல்லாம் உயர்ந்த மலைகளின்மீது ஏறி, தங்கி வதியும் ஏற்பாடுகளைச் செய்தார்கள். அந்தக் கப்பல் நீரோட்டத்தினால் இழுத்துச்செல்லப் படவுமில்லை, ஓரிடத்திலே நிற்கவுமில்லை. அந்த அலைகளுக்கூடாக அவர்களைச் சுமந்து கொண்டு சாதாரணமாகச்சென்றது. அப்படிச் செல்லும்பொழுது, தன்னுடைய மகன் கன்ஆன் அவிசுவாசிகளுடன் சேர்ந்துகொண்டு ஒரு மலையின்மீது இருப்பதை நபி நூஹ் (அலை) கண்டு, ''மகனே! இப்பொழுதாவது என்னை விசுவாசம் கொண்டுவிடு; வெள்ளம் இன்னும் அதிகரிக்கப்போகிறது......'' என்று கூறினார். அவனோ தகப்பனாரை நோக்கி, ''வெள்ளத்திலிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடிய ஒரு மலையின்மீது நான் ஏறியுள்ளேன். இதற்கு மேலாற் செல்லக்கூடிய வெள்ளம் வருவதாயிருந்தால் அது வரட்டும்; ஆனால் உமது மார்க்கத்திற் சேரமாட்டேன்,'' என்று கூறி அவிசுவாசத்தில் குரங்குப்பிடியாய் நின்றான். அவன் கூறியதுதான் தாமதம், பெரியதொரு அலை எழும்பி அவர்கள் அனைவரையும் அப்படியே வாரிக் கொண்டு சென்றுவிட்டது. நீரில் மூழ்கியோர்களுடன் அவனும் மூழ்கிவிட்டான். (11: 42, 43)

அவரின் கண்முன்னே அவரது மகனை அலை அள்ளிக் கொண்டு சென்ற காட்சி, அவரை வாட்டி வதக்கிக்கொண்டிருந்தது. மிகவும் மனம் புழுங்கியவராக இறைவனை நோக்கி, ''இறைவா! என் குடும்பத்தை இரட்சித்துக் கொள்வதாக நீயோ முன்பு வாக்களித்துள்ளாய். என் மகனும் எனது குடும்பத்தைச் சேர்ந்தவன்தானே........'' என மகனுக்காகப் பரிந்து பேசினார். உடனே இறைவன் நபியவர்களை நோக்கி, ''நூஹே! நிச்சயமாக அவன் உமது குடும்பத்தில் உள்ளவன் அல்ல. ஏனெனில், அவன் ஒழுங்கீனமான காரியங்களையே செய்துகொண்டிருந்தான். ஆதலால், உமக்குத் தெரியாத விஷயங்களைப்பற்றி என்னிடம் நீர் தர்க்கித்துக் கேட்கவேண்டாம். அறியாதோரில் நீரும் ஒருவராகிவிடவேண்டாம் என உமக்கு நான் நல்லுபதேசம் செய்கின்றேன்,'' என்று கூறி எச்சரிக்கை விடுத்தான். இவைகளைக் கேட்டதும் நபி நூஹ் (அலை) அவர்கள் பயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு, "என் இறைவனே! நான் அறியாத விஷயங்களைப்பற்றி இனிமேல் உன்னிடம் கேட்காது என்னைக் காப்பாற்றுமாறு உன்னை வேண்டுகின்றேன். என் தவறை மன்னித்து எனக்கு நீ கிருபை செய். இல்லாவிட்டால், நஷ்டமடைந்தோரில் நானும் ஒருவனாகிவிடுவேன்," எனப் பிரார்த்தனை செய்தார். (11: 45 — 47)

எந்த மலையினது உச்சம், மரத்தினுடைய நுனி, யாதொன்றுமே தென்படவில்லை. தொடர்பாக நாற்பது நாட்கள் மழை பெய்ததால், இரவு பகல் ஒன்றுக்குமே அவர்களால் வேறுபாடு காணமுடியாமற் போய்விட்டது. அந்தக் கப்பல் எந்தெந்த ஊர்களுக்கூடாகச் சென்றதோ, எந்தெந்த மலைகளைக் கடந்து சென்றதோ, அந்தந்த ஊர்களினதும் மலைகளினதும் நாமங்களை எல்லாம்வல்ல இறைவன் அவர்களுக் கறிவித்தான். மக்காவிலுள்ள கஃபாவுக்கு மேலால் அக் கப்பல் செல்லும்பொழுது, அதை ஏழு முறை வலம்வந்தது.

குறித்த நாட்களுக்குப் பின் மழை ஓய்ந்தது, வெள்ளம் வடிந்துகொண்டு செல்கின்றதா என்பதை அறிவதற்காக நபி நூஹ் (அலை) அவர்கள் ஒரு புறாவை வெளியே விட்டார். அது பறந்து திரிந்து, தங்குவதற்குப் பூமியில் ஓர் இடமும் இல்லாததால் கப்பலையே வந்தடைந்தது. இரண்டொரு நாட்களுக்குப் பின், மீண்டும் அப் பறவையை அனுப்பினார். அது பறந்து திரிந்து வெகு நேரமானதின் பின், அழகிய ஓர் இலையைச் சொண்டில் கௌவிக்கொண்டு கப்பலை வந்தடைந்தது. வெள்ளம் வடிந்துகொண்டு சென்றதை அந்த இலையே அவர்களுக்கறிவித்தது. ஜலம் முற்றாக வற்றியதும், மக்கமா நகரிலுள்ள "ஜூதி" என்னும் மலையடிவாரத்தில் கப்பல் தங்கியது. (11: 44) நபி நூஹ் (அலை) அவர்களை விசுவாசம் கொள்ளாது புறக்கணித்த அந்த அக்கிரமக்கார ஜனங்களை இவ்வாறே இறைவன் அழித்தான். (7: 64, 10: 73, 24: 119, 29: 14)

நபி நூஹ் (அலை) அவர்கள் விசுவாசிகளுடன் கப்பலை விட்டும் கீழே இறங்கி, அதனுள் இருந்த ஜீவப்பிராணிகளை வெளியே விட்டார். மனிதர்களுடன் அந்நியோன்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகப் பழகக்கூடிய பிராணிகள் அவர்களைச் சூழ இருந்தன; ஏனைய கொடிய மிருகங்கள் அவர்களைவிட்டும் தூரத்தே ஜீவிக்கலாயின. புதிய மரஞ்செடிகளை உண்டாக்குவதற்காக நபியவர்கள் தான் முன்பு சேகரித்து வைத்திருந்த விதைகளைப் பூமியிலே நாட்டினார். சொற்ப காலத்தில் பயன் தரக்கூடிய செடிகளிலிருந்து அவர்கள் தீன் பொருட்களைப் பெற்றார்கள். அந்த ஜூதி மலையடிவாரத்திலேயே அவர்கள் புதிய வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். இதன் காரணமாகத்தான் நபி நூஹ் (அலை) அவர்களுக்கு ''குட்டி ஆதம்'' என ஒரு காரணப் பெயரும் வழங்கி வருகிறது.

ஒரு நாள் நபியவர்களிடம் இஸ்ராயீல் (அலை) அவர்கள் வந்து, சலாம் கூறி, ''உங்களின் உயிரைக்கைப்பற்ற வந்துள்ளேன்,'' எனக் கூறினார். அதைக் கேட்டதும் நபியவர்களுடைய முகம் கறுத்தது; நா தடுமாறியது. அவரின் நிலையைக் கண்ட அமரர், "இறைவனின் தூதரே! இவ்வளவு நீண்ட காலம் உலகில் ஜீவித்தும் உலகப் பற்று உங்களை விட்டு இன்னும் நீங்கவில்லையா?'' எனக் கேட்டார். அதற்கவர் விடையாக, "உலகம் என்ற அறைக்குள் ஜனனம் என்ற வாயிலால் உட்பிரவேசித்து, மரணம் என்ற வாயிலால் அதைவிட்டும் வெளியேறுகின்றேன்,'' என்று மட்டும் கூறினார். அத்துடன் அவரது உயிரும் வாங்கப்பட்டுவிட்டது. (இன்ஜீல்வாஹி)

மொத்தம் 950 வருடங்கள் அவர் பூமியில் சீவித்தார் (29: 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி சாலிஹ் (அலை)

நபி நூஹ் (அலை) அவர்களுடைய மகன் சாம் என்பவருக்கு, அர்பகசத் என நாமம் கொண்ட ஒரு மகனிருந்தார். அவர், உபைத் எனவும் மக்களால் அழைக்கப்பட்டார். வாலிப வயதை யடைந்ததும், ஜஹூம் என்றழைக்கப்பட்ட ஒரு பெண்ணைத் திருமணம் செய்து; கோயிலொன்றில் பூசாரியாகக் கடமை பார்த்து வந்தார்.

ஒரு நாள், உபைத் கோயிலினுள் இருக்கும்பொழுது அவருக்கோர் அசரீரி கேட்டது. ஆண் குழந்தை யொன்று அவருக்குப் பிறக்க இருப்பதாகவும், அந்தப் பிள்ளை மனிதர்களுக்கு நேர்வழியை அறிவிக்கு மெனவும் அவருக்குக் கூறப்பட்டது. இவ் வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்ட உபைத், பெரிய விக்கிரகத்தினிடம் ஓடினார். அது கீழே வீழ்ந்து நொறுங்கிக் கிடந்தது. யாதும் அறியாத உபைத், விழித்துப் பார்த்தார். ''உடைத்தவர்'' என்று சொல்வதற்கு வேறு ஒருவருமே அங்கு காணப்படவில்லை. ஊர்மக்கள் தனக்கு என்ன செய்வார்களோ என்றெண்ணிப் பயந்து நடுங்கினார்.

பெரிய தெய்வம் நொறுங்கிக் கிடந்த செய்தி காட்டுத் தீபோல் எங்கும் பரவியது. அவ்வூர் அரசனும் அதைக் கேள்விப்பட்டு, சில பொதுமக்களை யழைத்து, அப்படி நடப்பதற்குரிய காரணம் ஏதாவது இருந்தால் அதைத் தனக்குக் கூறும்படி கேட்டான். விடையாக மக்கள் அரசனை நோக்கி, ''அரசே! உபைத் கெட்டவனாக இருக்கின்றான் போலும்! ஆகையினாற்தான் அவனை விரும்பாது நம் தெய்வம் கீழே வீழ்ந்துவிட்டது,'' என்று கூறினர். ஆத்திரம் கொண்ட அம் மக்கள், அரசன் ஆணையிடுவதற்கு முன்னதாகவே கொல்லும் நோக்கத்துடன் அவரின் வீட்டை நோக்கிப் பாய்ந்தனர்.

உபைத் மிகவும் பயந்தவராக வீட்டினுள்ளே ஒழித்துக் கொண்டிருந்தார். ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரின் வீட்டை அடைவதற்கு முன்பதாகவே அவரைக் கொண்டுபோய் ஓரிடத்திலே விட்டுவிடும்படி அமரரொருவரை இறைவன் ஏவினான். அதன்படியே அவர் பழ மரங்கள் நிறைந்த ஓர் ஓடைக்கரையிலே விடப்பட்டார். வெய்யிலின் அகோரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாக இருந்தபடியினால், பக்கத்தே யிருந்த ஒரு குகை யினுள் படுத்துறங்கினார். அவருடைய தூக்கத்தை இறைவன் நீடிக்கச் செய்தான். அதிக நாட்களாக அவர் அங்கு தூக்கத்தில் கிடந்தார்.

தன் கணவன் காணாமற்போனதையிட்டு ஜஹூம் எந்நேரமும் அழுதுகொண்டே யிருந்தாள். ஒரு நாள் இரவு, காகமொன்று கரையும் சத்தத்தைக் கேட்டு ஜஹூம் வெளியே வந்தாள். காகத்தைக் காணவில்லை; ஆனால், அழகான பலவர்ணப் பறவை யொன்று அங்கே நின்றுகொண்டிருந்தது. அந்தப் பெண்ணைக் கண்டதும் அது அவளை நோக்கி, ''உன் முகத்திலே கவலையின் குறி தோன்றுகின்றது. சதா அழுகிறவளாகக் காணப்படுகின்றாய். உனக்கென்ன நேர்ந்தது சொல்?'' எனக் கேட்டது.

தன்னுடன் பறவை யொன்று பேசுவதையிட்டு ஜஹூம் பயமும் வியப்பும் அடைந்தாள். என்றாலும், அவளுடைய இன்னலைப் போக்கடிக்கக்கூடிய முறையில் அக்கேள்விகள் கேட்கப்பட்டிருப்பதை அவள் உணரும் பொழுது; அப் பறவைக்கு பதில் அளிப்பதைத் தவறிவிட அவள் விரும்பவில்லை. எனவே, தனக்கு நேர்ந்த யாவற்றையும் அதற்குக் கூறிவிட்டு, ''எனக்கு அவரைக் காண்பிக்க உம்மால் முடியுமா?'' என்று கேட்டாள். ''ஆம்'' எனப் பறவை கூறிவிட்டு, தன்னைப் பின்தொடரும்படி வேண்டியது. ஜஹூம் மேலும் பீதி கொண்டு, தயங்கினாள். எனினும், அவளின் உள்ளக்கொதிப்பு அவளை யறியாமலே கால்களை முன் தூக்கி வைத்தது.

பறவை மிகவும் தாழ்ந்து, பூமியைத் தொடுவதுபோல் பறந்து சென்றது. ஜஹூம் அதனைப் பின்தொடர்ந்தாள். அந்தப் பறவை, அன்றிரவு விடிவதற்கு முன்னதாகவே அப் பெண்ணை அந்த மலையடிவாரத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தது. பொழுது விடிந்ததும், குகை ஒன்றினுள்ளே படுத்துக்கொண்டிருந்த தன் கணவனை ஜஹூம் கண்டாள். அவரைத் தட்டி யெழுப்பி, நடந்தவைகளைக் கூறினாள். ஒருவரை யொருவர் கட்டி அணைத்துக் கண்ணீர் விட்டனர். இருவரும் ஸ்நானம் செய்துவிட்டு, அங்கு கிடைக்கப்பட்ட கனிவர்க்கங்களை உண்டனர். வீடு சேர்வதற்குரிய வழி ஒருவருக்குந் தெரியாது. எனவே, அன்றிரவை அவர்களிருவரும் அவ்விடத்தே கழித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜஹ்றாமுடைய வயிற்றில் அன்றிரவே ஒரு கர்ப்பம் தரிபட்டது.

பொழுது விடிந்ததும், சற்று நேரத்தால் உபைத் மரணமானார். அவ்வேளை, அவர் நானூற்று முப்பத்தெட்டு வயதுடையவராக இருந்தார். என்ன செய்வதென்றே ஜஹ்றாமுக்குத் தோன்றவில்லை; தன்னந்தனியே அழுது கொண்டிருந்தாள். இறைவனருளால் அப் பறவையின் உதவி மீண்டும் அவளுக்குக் கிடைத்தது. ஜஹ்றாம் இலகுவில் வீட்டை யடைந்து வாழ்ந்து வரலானாள்.

உரிய காலம் வந்ததும், அவள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அது பிறந்த அதே வேளையில், கோயிலினுள் இருந்த விக்கிரகங்கள் அனைத்தும் தானாகவே வீழ்ந்து நொறுங்கின. அதன் இரகசியத்தை அப்பொழுது யாருமே அறியவில்லை. பிள்ளைக்கு சாலிஹ் என நாமமிட்டு, ஜஹ்றாம் அதை அன்பாக வளர்த்து வந்தாள்.

ஒழுக்கமான பிள்ளையாக அது வளர்ந்து வந்தது. வயதும் பதினைந்தாகிவிட்டது. ஓர் இரவு நடு வேளையில், அபயக் குரல்களும் கூக்குரல்களும் கேட்டன. அந்தப் பிள்ளை, துயில் கொண்டிருந்த தன் தாயாரை எழுப்பி, அவை என்ன என்பதை வினவியது. அதற்குத் தாய், ''மகனே! நவ்வாறு எனப் பெயர்கொண்ட ஒரு கொள்ளைக்காரன் இருக்கின்றான். அவனிடம் பெரியதொரு கொள்ளைக்கூட்டம் இருக்கிறது. ஏழு வருடங்களுக் கொரு முறை அவனுடைய பட்டாளம் இவ்வூருக்குள் நுழைந்து, பொருட்களைச் சூறையாடிப்போவது வழக்கம். அதேபோல் அவன் இன்று வந்துள்ளான்போலும்!'' என விடையளித்தாள்.

பொழுது புலர்ந்ததும், அவர் ஒரு குழலை எடுத்துக் கொண்டுபோய் நவ்வாறுடைய கொள்ளைக்கூட்ட மிருந்த இடத்திற்குச் சென்று ஒரு முறை அதை ஊதினார். அதோர் மாயமான ஓசையாக யிருந்தது. அந்த ஓசையைக் கேட்டதும், நவ்வாறுடைய கூட்டத்தில் அதிகமானோர் அவ்விடத்தே மாண்டனர். எஞ்சியோர்களின் மனதிலே ஒருவித பயம் ஏற்பட்டது. யாதும் செய்யமுடியாத நிலமைக்கு அவர்கள் தளர்ச்சியுற்றார்கள். எனவே, சூறையாடிய பொருட்களை அவ்விடத்திலே விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதை யறிந்த அவ்வூர் மக்கள் அவரின் செயலையிட்டும் வியப்படைந்து, அவரை மிகவும் சங்கையாக்கி வைத்தார்கள். நேர்மை யுடையவராகவும் நல்ல குணசாலியாகவும் அவர் வளர்ந்துவரலானார். உரிய வயதை யடைந்ததும், அவரை இறைவன் நபியாகத் தேர்ந்தெடுத்தான். எனவே, நபி சாலிஹ் (அலை) அவர்கள் மக்களை நேர்வழியில் அழைக்கும் பணியில் அன்றுமுதல் ஈடுபடலானார்.

அவர், முரடான தன் ஜனங்களை நோக்கி, ''என்னுடைய ஜனங்களே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். உங்களுக்கு அவனைத் தவிர வேறு நாயன் இல்லை. அவனே பூமியிலிருந்து உங்களைச் சிருஷ்டித்து, அதிலேயே உங்களை வசிக்கவும் செய்தான். ஆதலால், அந்த ஒரே இறைவன் பக்கம் மனம் திரும்பி, அவனிடமே மன்னிப்புக் கோருங்கள். நிச்சயமாக என்னுடைய இறைவன் உங்களுக்கு மிகச் சமீபமாகவும், பிரார்த்தனைகளை அங்கீகரிப்பவனாகவும் இருக்கின்றான்,'' என்று கூறினார். (அல்குர்ஆன் 7: 73, 11: 61)

அவர்களோ, அவரை நம்பவில்லை. மேலும் அவர் தன் ஜனங்களை நோக்கி, ''என்னுடைய ஜனங்களே! நிச்சயமாக நான் உங்களிடம் அனுப்பப்பட்ட மிக்க நம்பிக்கையான தூதனாவேன். ஆதலால், நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து எனக்கு வழிபட்டு நடங்கள். நீங்கள் பாவத்தையிட்டும் விலகிக்கொள்ள வேண்டாமா? தோட்டந்துரவுகளிலும், குலைகுலையாகத் தொங்கும் பேரீச்சந் தோப்புகளிலும், விவசாயப் பண்ணைகளிலும், மலைகளைக் குடைந்து வசிக்கும் வீடுகளிலும் என்றென்றுமே நீங்கள் நிலையாகச் சீவிப்பீர்களா? ஆகவே, வரம்புமீறுவோரின் கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படியாதீர்கள். அவர்கள் பூமியில் விஷமம் செய்வார்களே யன்றி, நன்மை செய்யமாட்டார்கள்........'' என்று கூறினார். (24: 142—152)

இவைகளைக் கேட்டதும் அவர்கள், ''சாலிஹே! இதற்கு முன்பெல்லாம் நீர் எங்களுடைய நம்பிக்கைக்கு ஆளாக இருந்தீர். ஆனால், எங்கள் மூதாதைகள் வணங்கிக் கொண்டிருந்த தெய்வங்களை நாங்கள் வணங்கக் கூடாதென்று எங்களை நீர் இப்பொழுது தடைசெய்கின்றீரா? அது முடியவே முடியாது. எதனளவில் நீர் எங்களை அழைக்கின்றீரோ, அதனளவில் நாங்கள் சந்தேகம் கொள்கின்றோம். உமக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ சூனியம் செய்துவிட்டார்கள்; ஆகையினால் உமது புத்தி தடுமாறிவிட்டது. நீர் எம்மைப்போன்ற ஒரு மனிதனே யன்றி வேறில்லை.........'' என்று கூறினார்கள். (11: 62, 24: 153, 154)

நபி சாலிஹ் (அலை) அவர்கள் ஒரு நாள், அவ்வூர் அரசனும் குடிமக்களும் கூடியிருந்த ஓர் இடத்திற்குச் சென்றார். ஜுன்தகு என நாமங்கொண்ட அவ் வரசனின் அருகே சென்று, ''அரசே! இவ்வளவு காலமும் நான் உங்களோடு மிகவும் ஐக்கியமாக இருந்துவந்தேன். அதுமட்டுமல்ல, பல விஷயங்களில் உங்களுக்கு நான் ஒத்தாசையும் புரிந்துவந்தேன். இறைவன் இப்பொழுது என்னைத் தீர்க்கதரிசியாகத் தேர்ந்தெடுத்துள்ளான். இதை நீங்களும் குடிமக்களும் விசுவாசித்து, எனக்கு வழிபடவேண்டும்,'' எனக் கூறினார்.

அதற்கு அரசன், ''சாலிஹே! உம்மைப்போன்ற மனிதன் தெய்வத்தின் ஊழியக்காரனாக வருவதை நானோ அல்லது என் குடிமக்களோ நம்புவதற்கில்லை. காரணம், உன் தகப்பனும் இப்படியான ஒரு பணியில் ஈடுபட்டு, இறுதியில் தெய்வத்திற்கே துரோகம் செய்தான். எனினும், இதை நான் மக்களுடன் கலந்தாலோசித்து ஒரு முடிவு சொல்லுகின்றேன்; போ,'' என்றான். அரசன் சபையைக் கூட்டி, விடயத்தை ஆலோசனைக்கிட்டான். எதிர்ப்பான முடிவு கிடைக்கவே, நபியவர்கட்கு அதை அறிவித்தான்.

மக்கள் குழுமியிருந்த இடங்களுக்குச் சென்று நபியவர்கள் போதனைசெய்துகொண்டே வந்தார். ஒன்றிரண்டு பேர்கள் அவரை விசுவாசங்கொண்டனர். ஏனையோர்கள் அவரையும் அவருடைய சொற்ப விசுவாசிகளையும் துற்சகுனமாக மதித்தனர். (27: 47) அதுமட்டுமல்ல, ''நம்மிலுள்ள ஒரு மனிதனையா பின்பற்றுவது? இவர்மீதுதானா வேதம் இறக்கப்படவேண்டும்? இவர் பெரும் பொய் சொல்லும் இறுமாப்புக்கொண்டவர். இவரைப் பின்பற்றினால், திட்டமாக நாம் வழிகேட்டிற் சென்று பித்தர்களாகிவிடுவோம்,'' என்றும் கூறினார்கள். (54: 24, 25)

நபி சாலிஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து மார்க்கப் போதனை செய்துகொண்டே வந்தார். ஒரு நாள் சில மக்கள் அவரிடம் வந்து, ''காட்டு மிருக மொன்று இங்கு வந்து, எமது முன்னிலையில் நின்று, நீர் நபி என்பதை உண்மைப் படுத்தினால், திட்டமாக உம்மை நாங்கள் விசுவாசிப்போம்,''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினர். நபியவர்கள் காட்டிலிருந்து ஒரு புலியை அழைத்தார். அது பாய்ந்தோடி வந்து அவர் முன்னே நின்று, அவரைக் கனம்பண்ணியது. அதை அவர்கள் நம்பாமல், அவரின் மந்திரவேலை என்றனர். உடனே அந்தப் புலி மக்கள் மத்தியிற் பாய்ந்து, ஒரு சத்தம் போட்டது. அந்தச் சத்தத்தின் கோரத்தால் சிலர் அவ்விடத்தே மாண்டனர். அப்பொழுதுங்கூட அவர்கள் விசுவாசம் கொள்ளவில்லை.

இன்னும் ஒரு நாள், அரசனுக்குத் தம்பி முறையான ஹுதைல் என்பவன் நபியவர்கள் முன்வந்து, ''ஓய் சாலிஹே! நீ எங்களைப் புதியதொரு மதத்திற்கு அழைக்கின்றீரே, எம்மைப்போன்ற உயர்ந்தவர்கள் அதைக் கேட்பது கூட இல்லையே ... ...'' என்று கூறி அவரைப் பரிகாசம் செய்தான். அதற்கவர் அவனை நோக்கி, ''ஹுதைலே! நீ சொல்பவை ஒரு புறம் இருக்கட்டும்; நான் சொல்வதைக் கொஞ்சம் கேள். இன்றைக்கு நீயும் உன் மனைவியும் இறந்துவிடுவீர்கள். நாளைக்கு உன் தாயும் தகப்பனும் இறந்துவிடுவார்கள். இவ்வேளையிலாவது என்னை விசுவாசம் கொள்ளுங்கள்,'' என்றார். அதைக் கேட்ட அவன், அவரைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துவிட்டு, அவரை விட்டகன்றான்.

நபியவர்கள் கூறிய பிரகாரம் அவர்களிருவரும் அன்று மரணித்தார்கள். அவரும் அந்த வீட்டிற்குச் சென்றார். அழுதுகொண்டிருந்த வீட்டார்களையும் அரசனையும் நோக்கி, ''இப் பிரேதங்களி லொன்றை உயிர்பெற்றெழும்பி பேசும்படி செய்கின்றேன்; அதனைக் கண்டாவது என்னை விசுவாசிப்பீர்களா? எனக் கேட்டார். எல்லோரும் சம்மதித்தனர். நபி சாலிஹ் (அலை) அவர்கள் இறைவனைத் தொழுதுவிட்டு, ஹுதைலின் சடலத்திற்கருகே போய், ''பிரேதமே! அல்லாஹ்வின் உத்தரவைக்கொண்டு எழுந்திடு,'' என மொழிந்தார். ''இதோ எழும்புகின்றேன் நபியே,'' எனக் கூறிக்கொண் டெழுந்தது அப் பிரேதம். எழுந்ததும், ''வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; சாலிஹ் ஆகிறவர் அல்லாஹ்வின் திருத்தூதராவார்,'' எனக் கூறிவிட்டு, பிரேதம் முன்புபோல் படுத்துக்கொண்டது.

எல்லோரும் வியப்படைந்தார்கள். எனினும், அவர்களுடைய பிடிவாதத்தினால் ஒருவருமே விசுவாசம் கொள்ளவில்லை. அது அவரின் மாய வேலை எனக் கூறினர். அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்குச் சென்ற அம் மக்கள், அந்த அதிசயச் செய்தியை பெரிய விக்கிரகத்தினிடம் முறையிட்டார்கள். ஷைத்தான் அங்கே மறைந்துகொண்டு அவர்கட்கு ஓர் உபாயம் கூறினன். அது பிரமாண்டமான ஒரு வேலை யல்ல என்றும், முந்திய தீர்க்கதரிசிகள் அநேகக்காண அற்புத வேலைகளைச் செய்தார்க ளென்றும், எனவே வேறொரு விநோத வேலையை அவரிடம் கேட்கும்படியும் கூறினன்.

மக்கள் சந்தோஷமாக ஆரவாரித்துக்கொண்டு நபியவர்களை நோக்கி ஓடினர்கள். அவர்கள் அனைவரும் விசுவாசம் கொள்ளவேண்டுமாயின், வேறொரு அற்புத வேலையைச் செய்துகாட்டும்படி வேண்டினர். "இறந்தவன் பேசியது உங்கட்குப் போதாதா? இன்னும் எதைக் கேட்கின்றீர்கள்?" எனக் கேட்டார். எதைக் கேட்பதென்றே தெரியாது மக்கள் அங்கு மிங்கும் திரும்பினர். அவர்களுடைய பார்வைக்கு சற்று தூரத்திலே ஒரு வெள்ளைக் கல் தென்பட்டது. உடனே அவர்கள் நபியவர்களை நோக்கி, "அதோ தெரிகின்ற கல்லிலிருந்து ஓர் ஒட்டகை வெளியாக வேண்டும். வெளியான மறுகணமே அது கன்று ஈன வேண்டும்," எனக் கேட்டனர். அது எவ்விதமான ஒட்டகையாக இருக்கவேண்டு மென நபியவர்கள் கேட்டார். அதனுடைய விபரங்களை மக்கள் கூறினர். அரசனும் தனக் கிஷ்டமான சில விபரங்களைக் கூறினன். நபியவர்கள் யாவற்றையும் கேட்டுவிட்டு, "அப்படியான ஒட்டகையாக இருந்தால் விசுவாசம் கொள்வீர்கள்தானே?" என்று கேட்டார்.

அவர் கேட்ட கேள்வியிலிருந்து, அந்த வேலையும் அவருக்கு இலேசு என்பதை யறிந்த மக்கள்; இயற்கைக்கு மாறான இன்னும் சில விஷயங்கள் அவ் வொட்டகையில் அமைந்திருக்கவேண்டும் என வேண்டினர். அவைகளைச் சொல்லும்படி நபியவர்கள் கூறவே, அவர்களும் சொல்லலாயினர்.

(1) அதனுடைய பால் தேனைக்காண இனிமையாக இருக்கவேண்டும்.

(2) அதனுடைய பால் சூடான நேரத்தில் குளிர்ந்தும், குளிரான நேரத்தில் சூடாகவும் இருக்கவேண்டும்.

(3) அதனுடைய பாலை நோயாளி பருகினல் நோய் தீரவேண்டும், ஏழை பருகினல் கஷ்டம் தீரவேண்டும்.

(3) வருடத்தில் ஒரு நாளாவது தவருமல் அது பால் தரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) இரவு காலங்களில் அவ் வொட்டகை ஒவ்வொரு வீடாகச் சென்று, அவ் வீட்டுக்காரனுடைய பெயரைச் சொல்லி எழுப்பி, ''பால் வேண்டுமானல் வாருங்கோ'' என்றழைக்க வேண்டும். வீட்டுக்காரன் ஒரு பாத்திரத்தை அதன் மடியின்கீழ் வைத்ததும், தானகவே பால் கறக்கப்பட்டு பாத்திரம் நிறையவேண்டும்.

''இவ்வித்மாக அவ் வொட்டகை இருக்குமேயானல், கண்டிப்பாக நாங்கள் விசுவாசிப்போம்,'' எனக் கூறினர். அதற்கு நபியவர்கள் அந்த மக்களை நோக்கி, ''நீங்கள் விரும்புகிறபிரகாரம் இறைவன் அக் கல்லிலிருந்து அந்த ஒட்டகையை வெளிப்படுத்துவான். ஆனல் சில விஷயங்களை நீங்கள் கையாளவேண்டும்,'' என்றார். மக்கள் அதற்கு இணக்கம் தெரிவித்துவிட்டு, அவைகளைக் கூறும்படி நபியவர்களை வேண்டவே, அவரும் கூறலானர்.

(1) அவ் வொட்டகையின்மீது நீங்கள் யாருமே ஏறக்கூடாது.
(2) எவ்வகையிலும் நீங்கள் அதைத் துன்புறுத்தக் கூடாது.
(3) அதன் பாலைத் தவிர வேறு எதையுமே நீங்கள் அதிலிருந்து புசிக்கக்கூடாது.
(4) உங்களுடைய கால்நடைகளுடன் அது நீர் அருந்தாது, அதற்கெனவேருக ஒரு நாள் ஒதுக்கப்படல்வேண்டும்.
(5) அந்த ஒட்டகை இறைவனிடமிருந்து அத்தாட்சியாக அனுப்பப்படுகிறது. எனவே, அதை மிகவும் தூய்மையாக நீங்கள் பாவித்துக்கொள்ளவேண்டும். அதன் உயிருக்கு நீங்கள் ஆபத்து விளைவிப்பீர்களாயின், இறைவனின் சாபம் உங்கள்மீது உண்டாகிவிடும்,

என்று நிபந்தனைகளைக் கூறிமுடித்தார்; மக்கள் அதை ஒப்புக்கொண்டனர். நபி சாலிஹ் (அலை) அவர்கள் இறைவனைத் தொழுதுவிட்டு, அப்படியான ஓர் ஒட்டகையை அக் கல்லிலிருந்து வெளியாக்கும்படி வேண்டினர்.

அவர்கள் குறிப்பிட்ட அந்த வெள்ளைக் கல்லிலே பெரிய வெடிப்பொன் றுண்டாகி, அதனுள்ளிருந்து பிரமாண்டமான ஓர் ஒட்டகை வெளியானது. வெளியானதும், ''வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை: சாலிஹ் ஆகிறவர் அல்லாஹ்வின் திருத்தூத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராவார்,'' என மொழிந்தது. மொழிந்த மறுகணமே ஒரு கன்று ஈன்றது. இவைகளைக் கண்டதும் அரசன் உடனே நபி சாலிஹ் (அலை) அவர்களைக் கட்டித் தழுவி முத்தமிட்டவனாக மக்களை நோக்கி, ''என் பிரஜைகளே! இவர் உண்மையான மார்க்கத்தையே நமக்குக் கொண்டுவந்துள்ளார். இதோ அதை நான் அங்கீகரித்து அவரை விசுவாசித்துவிட்டேன்,'' எனக் கூறி நேர்வழியிலானான். அதைத் தொடர்ந்து அதிகமானோர் அவ்விடத்தே விசுவாசம் கொண்டனர்.

அரசன் புதிய மார்க்கத்தில் சேர்ந்ததை விரும்பாத அவிசுவாசிகள் பெரும் ஆத்திரம் கொண்டு, அரசனின் தம்பியாகிய சிஹாப் என்பவனை மன்னனாக்கினார்கள். அரசன் அதனைப் பொருட்படுத்தாது, தான் சேர்ந்த புது மதத்தில் ஊறியவனாகக் காணப்பட்டான். மதத்தின் வளர்ச்சிக்காகச் செலவு செய்யும்படி தன்னிடமிருந்த பணத்தை நபியவர்களிடம் கொடுத்துவிட்டு, அவருக்கு உற்றதுணையாகவு மிருந்தான்.

நபி சாலிஹ் (அலை) அவர்கள் அந்த மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி அந்த ஒட்டகை இரவு வேளைகளில் முறை முறையாக வீடுகளுக்குச் சென்று பால் கொடுத்துவந்தது. அந்தப் பாலிலிருந்து அவர்கள் எவைகளை எதிர்பார்த்தார்களோ, அவைகளெல்லாம் அவர்களுக்குக் கிடைத்தன. விநோதமான அவ்வொட்டகைக்குத் தீங்கு செய்ய அதிகமானோர் அஞ்சியிருந்தபோதிலும்; சிலர் இடையிடையே அதைத் துன்புறுத்தினர். அவ்வேளைகளிலெல்லாம் நபியவர்கள் மக்களை நோக்கி, ''இது அல்லாஹ்விடமிருந்து அத்தாட்சிக்காக அனுப்பப்பட்டது. இதற்குத் தீங்கு செய்யவேண்டாம். அப்படிச் செய்தால் அல்லாஹ்வின் வேதனை கிடைக்கும்,'' என்று பல முறை எச்சரிக்கை செய்தார். (7: 73, 11: 64, 24: 155, 156, 54: 27)

அப்படி யிருந்தும் சிலருக்கு அவ்வொட்டகையின் மீது கோபம் எழுந்தது. எனவே, அதைக் கொல்லுவதற்குச் சிலரை ஏவினார்கள். அவர்கள் ஒரு நாள், சமயம் பார்த்துக்கொண்டிருக்கவே ஒட்டகையும் அந்த வழியால் வந்துகொண்டிருந்தது. அவர்கள் அதன் காலைத் தறித்து அவ்விடத்தே கொன்றார்கள். (11: 65, 24: 157, 54: 30, 91: 14) தாய் கொல்லப்பட்டுவிட்டதை யறிந்த அக் கன்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வெள்ளைக் கல்லை நோக்கி விரண்டோடியது. கன்று கல்லின்மீது ஏறவே, அது இரண்டாகப் பிளந்து, கன்றைத் தனக்குள்ளே அடக்கிக்கொண்டு, தானுகவே ஒட்டிக்கொண்டது.

ஒட்டகம் கொல்லப்பட்டுவிட்டதை யறிந்த நபியவர்கள் அவ்விடத்திற்கு விரைந்தோடினூர். மூன்று நாட்களால் அம் மக்கள் அழிக்கப்பட யிருப்பதாகவும், எனவே விசுவாசிகளைக் கூட்டிக்கொண்டு வேறு தேசம் போகும்படியும் இறைவன் அவ்விடத்தே நபியவர்கட்கு அறிவித்தான். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் ஓடியது.

குறிப்பிட்ட மூன்று நாட்கள் கழிந்ததும், இடிமுழக்கத்தால் அவ்வூர் மக்கள் அழிக்கப்பட்டனர். (7: 78, 11: 67, 24: 158, 27: 51, 54: 31) விசுவாசிகளைக் கூட்டிக்கொண்டு பலஸ்தீன் தேசத்திற்குச் சென்ற நபியவர்கள், மனவேதனையால் தனது ஊரைத் திரும்பிப் பார்த்து, "என்னுடைய ஜனங்களே! உங்களுக்கு நான் நல்லுபதேசம் செய்தேன்; நீங்களோ என்னை விசுவாசிக்கவில்லை........" என்று கூறி அவர்களின் அழிவையிட்டு மிகவும் துயரப்பட்டார்.

மக்களிடையே தனது சேவையைச் செய்து வரும் நாளில், நபி சாலிஹ் (அலை) அவர்கள் தனது நானூற்று முப்பத்துமூன்ருவது வயதிலே இறையடி சேர்ந்தார். (இன்னுலில்லாஹி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி இப்ராஹீம் (அலை)

★

நபி சாலிஹ் (அலை) அவர்களுக்கு, ஆமிர் எனப் பெயர் கொண்ட ஒரு மகன் இருந்தார். அவர், நானூற் றறுபத்து நான்கு வருடங்கள் பூமியில் ஜீவித்து மரணமானர். அவரிலிருந்து ஐந்தாவது தலைமுறையில், ஆசர் எனப் பெயர் கொண்ட ஒருவ ரிருந்தார். வயதானதும் திருமணம் செய்தார். அவர் ஒரு தச்சன். மரத்தினுல் விக்கிரகங்கள் செய்து, அதிலே கிடைத்த வருமானத்தைக் கொண்டு தனது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்.

அதே காலத்தில், நம்றூத் என நாமங்கொண்ட ஓர் அரசன் அந் நாட்டை ஆண்டுகொண் டிருந்தான். அவன் ஒரு பெரிய சக்கரவர்த்தி. அவனுக்கு அரண்மனை ஜோசியர்கள் ஒன்பது பேர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒரு நாள் அரசனை நோக்கி, "அரசே! இவ் வருடத்தில் நமது இராஜ்யத்திலே ஓர் ஆண் குழந்தை பிறக்க இருக்கிறது. அக் குழந்தை உங்களுக் கெதிர்ப்பாகத் தோன்றி, உங்களை முறியடிக்கும்," என்று ஜோசியம் கூறினுர்கள்.

இவைகளைக் கேட்டதுதான் தாமதம், நம்றூத் அளவில்லா ஆத்திரம் கொண்டான். "நான்தான் இறைவன். அனைவரும் என்னையே வணங்கவேண்டும்" என்று சொல்லி, அதன்படியே மக்களைச் செய்வித்து வந்த, சர்வாதிகார நம்றூதுடைய இரத்தம் கொதித்தது. அன்று தொடக்கம் ஒரு வருட காலம் முடியும்வரை அந்த நாட்டிற் பிறக்கும் சகல ஆண் குழந்தைகளை யெல்லாம் கொன்றுவிடும்படியும்; குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள், எந்த ஆணும் எந்தப் பெண்ணையும் நெருங்கக்கூடா தென்றும், அன்றே பெரியதொரு சட்டம் பிறப்பித்தான். அத்துடன் அவனது இரத்தக் கொதிப்பு நின்றுவிடவில்லை. நாட்டிலுள்ள ஆண்களை யெல்லாம் வேருகவும் பெண்களை யெல்லாம் வேருகவும் பிரித்து வைத்து, இடையே காவலாளிகளையும் நியமித்தான்.

தனது நாட்டில் எந்த ஆண் குழந்தை பிறக்கக் கூடா தென அவன் நினைத்து சட்டங்கள் இயற்றினுனே; அதே ஆண் குழந்தை ஆசருடைய மனைவியின் கர்ப்பத்தில் சிசுவாக அமைவதை அந்தச் சட்டங்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுமே செய்யமுடியாமற் போய்விட்டது. பிரகடனம் செய்யப்பட்ட கால எல்லை முடிவடைந்த சில நாட்களால் அந்தப் பிள்ளை பூமியிலே ஜனனமானது.

குழந்தைக்கு இப்ருஹீம் என நாமமிட்டார்கள். பத்துப் பன்னிரண்டு வயதுடைய பாலகனாக இருந்த காலத்தில் ஒரு நாள், அக் குழந்தை பெற்றோர்களுடன் வீதியால் சென்றுகொண்டிருந்தது. வழியிலே, விதம் விதமான கால் நடைகளையும் பூச்சிபுழுக்களையும் கண்டு, "இப்படியான படைப்புகளை சதா படைத்துக்கொண்டேயிருக்கும் ஓர் இறைவன் இருக்கத்தானே வேண்டும்?" என்று பெற்றோர்களைக் கேட்டது. அவர்கள் சிந்திக்கலாயினர்.

பிள்ளை இன்னும் வளர்ந்து சற்று வாலிபமானது. ஒரு நாள் அது தன் தாயை நோக்கி, "என் தெய்வம் எது தாயே?" என்று கேட்டது. "நான்தான் மகனே," என விடையளித்தாள். "உனது தெய்வம் எது தாயே?" என்று கேட்டது. தனது கணவன் என விடையளித்தாள். அவருடைய தெய்வம் எது எனக் கேட்டது. "நம்றூத் அரசன்" என விடையளித்தாள். அரசனுடைய தெய்வம் எது என்பதை வினவியது. தாய்க்கோ ஒன்றும் கூற முடியாமற் போய்விட்டது.

ஒரு நாள் ஆசர், தன் மகன் இப்ருஹீம் வசம் சில விக்கிரகங்களைக் கொடுத்து, அவைகளை விற்றுப் பணம் பெற்றுவரும்படி ஏவினர். தகப்பனுடைய கண்காணிப்புக்குக் கீழ்ப் பட்டவரல்லவா அவர்? எனவே, அதைச் செய்யவேண்டியதாயிற்று. ஆகையினுல், அவைகளைச் சுமந்துகொண்டு, "மனிதனுக்கு ஒன்றுமே செய்யமுடியாத—மரத்தால் செய்யப்பட்ட தெய்வம் யாருக்கும் வேண்டுமோ?" எனக் கூவிக்கொண்டு வீதிகளிலே சென்றுர். விற்பவரே அதை இழிவு படுத்தியதால், வாங்குவதற்கு யாருமே முன்வரவில்லை. விஷயத்தைப் புரிந்துகொண்ட ஆசர், தன் மகனைக் கடிந்து பேசினுர்.

அவர் வளர்ந்து, உரிய வயதை அடைந்ததும், அவரை இறைவன் நபியாகத் தேர்ந்தெடுத்தான். எனவே, மக்களிடம் சென்று நேர்வழியைக் காண்பித்து, அவர்களை அதன் பால் அழைப்பது அவரின் கடமையாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனவே, நபி இப்ருஹீம் (அலை) அவர்கள், தவறிய வழியிலிருந்த தன் தகப்பனுரிடம் முதலிற் சென்று, ''என் தந்தையே! உங்களுக்குக் கிடைக்காத கல்வி ஞானத்தை இறைவனருளால் நான் பெற்றுள்ளேன். உங்களை நான் நேரான வழியில் நடத்துகின்றேன், என்னை நீங்கள் பின் பற்றுங்கள். என் தந்தையே! யாதொன்றைப் பார்க்கவும் கேட்கவும்; ஒரு திங்கைத் தடைசெய்யச் சக்தி அற்றது மான தெய்வங்களை ஏன் நீங்கள் வணங்குகின்றீர்கள்? என் தந்தையே! ஷைத்தானை வணங்காதீர்கள்; நிச்சயமாக அவன், இறைவனுக்கு மாறு செய்பவன். இவைகளின் நிமித்தம் றஹ்மானுடைய வேதனை உங்களைப் பிடித்துக் கொள்ளும் என்று நான் மெய்யாகவே பயப்படுகின்றேன்,'' என்று கூறினுர். அதற்கவர், ''இப்ருஹீமே! நீ என்னுடைய தெய்வங்களைப் புறக்கணித்துவிட்டீரா? நீ இதிலிருந்து விலகிக்கொள்ளாவிடில், உன்னைக் கல்லெறிந்து கொன்றுவிடுவேன். இனிமேல் என்னை விட்டும் நீ விலகிக்கொள்,'' எனப் பதில் அளித்தார். அதைக் கேட்ட நபியவர்கள் தன் தகப்பனுரை நோக்கி, ''உங்களுக்குச் சாந்தி உண்டாவதாக! இதோ நான் உங்களைவிட்டும் செல்கின்றேன். பின்பு ஒரு காலத்தில், உங்களுக்காக நான் இறைவனிடம் மன்னிப்புக் கோருவேன்,... '' என்று கூறி, தன் தகப்பனுரை விட்டும் பிரிந்து சென்றுர். (அல்குர் ஆன் 19: 42—47)

தகப்பனுரை விட்டுப் பிரிந்த நபியவர்கள், தன்னந்தனியே தனது கடமைகளைக் கூறிக்கொண்டு, மக்களை நேர் வழியில் அழைக்கலானுர். இரகசியமான முறையிற் சிலர் சூரியனையும், சிலர் சந்திரனையும், சிலர் மாலை — வெள்ளியையும் தெய்வங்களாகக் கொண்டு; அவைகளை வணங்கி வந்தனர். கள்வனுகியே கள்வனைத் திருத்தவேண்டும் என்பதற் கொப்ப, நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் ஒரு நாள், நட்சத்திரத்தை வணங்குபவர்களிடம் சென்று, ''இது எனக்கும் தெய்வமாக இருக்கட்டும்,'' என்று கூறி அவர்களுடன் அமர்ந்தார். சிறிது நேரம் சென்றதும் அது அஸ்தமித்துவிட்டது. நபியவர்கள் அக் கூட்டத்தினரை நோக்கி, ''நம்மை விட்டும் மறைந்துபோகக்கூடியதை நான் தெய்வமாகக் கொள்ளமாட்டேன்,'' என்று கூறி அவர்களைவிட்டும் பிரிந்து சென்றுர். (6: 76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு, சந்திரனை வணங்குவோர்களை அணுகி, "இது எனக்கும் தெய்வமாக இருக்கட்டும்," என்று கூறி அவர்களுடன் அமர்ந்தார். அதுவும் மறைந்துபோகவே, முன்புபோல் கூறிவிட்டு, அவர்களையும் விட்டகன்றார். போகும் வேளையில், "எனது இறைவன் எனக்கு நேரான வழியை அறிவித்திராவிடில், வழி தவறிய ஜனங்களில் நிச்சயமாக நானும் ஒருவனாகியிருப்பேன்," என்று கூறினார். (6: 77)

பின்பு ஒரு நாள், சூரிய வணக்கம் புரிபவர்களிடம் சென்று, "இது மிகப் பெரிதாக இருக்கிறது. எனவே, இது எனது தெய்வமாக இருக்கட்டும்," என்று கூறி அவர்களுடன் அமர்ந்தார். மாலையில் அதுவும் மறைந்து போகவே, அவர்களிடமும் முன்புபோல் கூறினார். கூறிவிட்டு, அந்த ஜனங்களை யெல்லாம் நோக்கி, "என் ஜனங்களே! நீங்கள் இறைவனுக்கு இணையாக்கும் இவை ஒவ்வொன்றிலிருந்தும் நிச்சயமாக நான் விலகிக்கொண்டேன். வானங்களையும் பூமியையும் எவன் சிருஷ்டித்தானோ — அந்த ஒருவனின் பக்கமே நான் முற்றிலும் நோக்குகின்றேன். அந்த இறைவனுக்கு நான் எதையும் இணைவைப்போன் அன்று." எனக் கூறினார். (6: 78, 79) அப்படி அவர் இணை வைத்து வணங்குபவராக இருக்கவில்லை என இறைவனே குர்ஆன் மூலம் நமக்கு அறிவிக்கின்றான்.

தாங்கள் வழிபடும் தெய்வங்களை நபியவர்கள் அவ்விதம் இழிவு படுத்தியது, அவர்களுக்குக் கோபமாக இருந்தது. எனவே அவர்கள் நபியவர்களிடம் வந்து, அந்தத் தெய்வங்களால் அவருக்கு ஏதும் தீங்கு நேரக்கூடுமெனப் பயமுறுத்தினர். அல்லாஹ்வின் அருளால் அப்படியான தீங்கு எதுவும் அவரை அணுகாது என்று கூறி, பிழையான வழியில் இருப்பதையிட்டு யார் பயப்படவேண்டும் எனவும் அவர்களிடம் கேட்டார். (6: 80, 81)

நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் ஒரு நாள், இறைவனின் ஒரு செயலையிட்டு நேரிலே காண்பதற்கு ஆசை கொண்டு, இறைவனை நோக்கி, "என் இறைவனே! இறந்த உயிர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கின்றாய்? அதை எனக்கு சற்று காண்பி," என வேண்டினார். அதை அவர் நம்பவில்லையா என இறைவன் எதிர்க் கேள்வி கேட்டான். உடனே நபியவர்கள் பயந்து, அவர் நம்பாமல் இருக்கவில்லை யென்றும்; ஆனால், அதைக் காண்பதற்கு அவர் ஆசை கொண்டுள்ளதாகவும் எடுத்துக் கூறினார். அப்பொழுது இறைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியவர்களை நோக்கி, "நான்கு பறவைகளை நீர் பழக்கியெடுத்து, பின்னர் அவைகளைத் துண்டுதுண்டாகக்கிழித்து, கிழிபட்ட ஒவ்வொரு துண்டையும் ஒவ்வொரு மலையின் மீது வைத்துவிட்டு, ஓர் இடத்திலே நின்று நீர் கூப்பிடும். அவை பறந்து வந்து உம்மிடம் சேரும்," என அறிவித்தான். அவ்வாறு அவர் செய்துபார்த்து இன்பம் கொண்டபின், "நிச்சயமாக அல்லாஹ் வல்லோனும் நுண்ணறிவோனுமாய் இருக்கின்றான் என்பதை உறுதியாக அறிந்துகொள்" என்ற வாக்கியத்தை அருளினான். (2: 260)

நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தொடர்ந்து மக்களை நேர்வழியில் அழைத்துக் கொண்டே வந்தார். ஒரு நாள் தன் தந்தையையும் சில ஜனங்களையும் நோக்கி, "நீங்கள் எதை வணங்குகின்றீர்கள்?" எனக் கேட்டார். சிலைகளை வணங்குவதாகக் கூறினர். அந்தச் சிலைகளை அவர்கள் அழைத்தால், அவைகள் விடை கொடுக்கின்றனவா எனக் கேட்டார். அத்துடன், அந்தச் சிலைகள் அவர்களுக்கு ஏதும் நன்மையோ தீமையோ செய்கின்றனவா என்றும் கேட்டார். இரண்டு கேள்விகட்கும் இல்லையென விடையளித்து, அவர்களுடைய மூதாதைகள் அவைகளை வணங்கி வந்ததற்காக அவர்களும் அதன்படி செய்வதாகக் கூறினர். (26: 70—74)

எனவே, நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் அந்த ஜனங்களை நோக்கி, "அல்லாஹ் ஒருவனையே நீங்கள் வணங்குங்கள்; அவனுக்கே பயப்பட்டு நடங்கள். அல்லாஹ்வை யன்றி நீங்கள் வணங்கும் விக்கிரகங்களெல்லாம், நீங்களே பொய்யாகக் கற்பனைசெய்தவையாகும். ஆகவே, உங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அல்லாஹ்விடம் கோரி, அவன் ஒருவனையே வணங்கி, அவனுக்கு நன்றி செலுத்தியும் வாருங்கள். ஈற்றில் அவனிடமே நீங்கள் கொண்டுசெல்லப் படுவீர்கள். இதுவே உங்களுக்கு மிக்க நல்லதாகும்," என்று உபதேசம் செய்தார். (29: 16, 17)

மேலும் அவர், "இந்த விக்கிரகங்கள் எனது விரோதிகளே. உலகத்தாரைப் போஷிப்பவனே எனது இறைவன். அவன் தான் என்னைப் படைத்தான். அவனே என்னை நேரான வழியில் நடத்து கின்றான். அவனே எனக்குப் புசிக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிக்கவும் தருகின்றான். நான் நோயுற்ற தருணத்தில் அவனே என்னை சொஸ்தப்படுத்துகின்றான். அவனே என்னை மரிக்கச் செய்வான. பின்னர், மறுமையில் அவனே என்னை உயிர்ப்பிப்பான். கூலி கொடுக்கும் மறுமை நாளில் எனது குற்றங்கள் மன்னிக்கப்பட அவனையே நான் நம்பியிருக்கின்றேன்,'' என்று கூறி; ''இறைவனே! எனக்கு நீ ஞானத்தை அருள்புரிந்து, நல்லோர்களுடன் என்னைச் சேர்த்துவிடுவாயாக! பிற்காலத்தில் நற்பெயரையும் கீர்த்தியையும் எனக்குத் தந்தருள்வாயாக! இன்ப சுகத்தையுடைய சுபனபதியை அனந்தரங்கொள்வோரில் என்னையும் நீ ஆக்கிவைப்பாயாக! என்னுடைய தந்தையையும் நீ மன்னித்தருள். நிச்சயமாக அவர் வழிதவறிவிட்டார். உயிர் கொடுத்து எழுப்பப்படும் மறுமை நாளில் என்னை நீ இழிவுக்குள்ளாக்காதே!.........'' என்று பிரார்த்தனையும் செய்தார். (26: 77—88)

முன்பு தனது தந்தைக்குக் கொடுத்திருந்த ஒரு வாக்குறுதிக்காக, நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தன் தகப்பனாரின் தவறை மன்னிக்கும்படி இறைவனை இரந்து கேட்டார். ஆனால், தனது தந்தை அல்லாஹ்வுக்கு முற்றிலும் விரோதி என்பதை அறிந்ததும், அவருக்காக மன்னிப்புக் கோருவதிலிருந்து அவர் விலகிக்கொண்டார். நபி இப்ராஹீம் (அலை) அவர்கள், மிக்க இரக்கமும் அடக்கமும் உடையவராக இருந்தார். (9: 114)

இவ்விதமாக நபியவர்கள் மக்களை நற்பாதையில் அழைத்துக்கொண்டு வருவதைக் கண்ட நம்றூத், அதன் பக்கம் மக்கள் மனம்திரும்பிவிடுவார்கள் என்றெண்ணி, பொது மக்களைத் தனது அரண்மனைக் கழைத்து, பெரியதோர் உபாயம் செய்தான். அஃதாவது:— நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் வர்ணிக்கும் இறைவன் ஆகாயத்தில் இருப்பதாக அவன் அர்த்தம் கொண்டு, அக்காலத்தில் வசித்த ஒரு பெரிய பறவையின்மீது ஏறி உயரப் பறந்து சென்று, அங்கிருந்து ஓர் அம்பை * எய்தான். இறைவனுடைய சக்தியால் அது இரத்தம் தோய்ந்ததாக அவனையே வந்தடைந்தது. அந்த அம்பை பூமிக்கு எடுத்துவந்து, மக்கள் முன்னிலையிற் காட்டி, ''இதோ என் அம்பைப் பாருங்கள்.

*இதே நம்றூத் ஆங்கிலத்தில் Nimrod என அழைக்கப்படுகின்றான். நமது இச்சரித்திரத்தை ஆதரித்து, A Great Hunter Against God என இவனைப்பற்றி ''என்சைக்ளோபீடியா'' கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ருஹீம் கூறும் தெய்வத்தைக் கொன்றுவிட்டேன்,'' என்று கூறினான். மக்களிற் சிலர் அவனின் செயலை நம்பினர்.

மார்க்க உபதேசம் செய்வதிலிருந்து அவர் சற்றேனும் தளரவில்லை. ஒரு நாள் நம்றூத், நபி இப்ருஹீம் (அலை) அவர்களை அரண்மனைக் கழைத்தான். அவன் அவரைக் கர்வமாகப் பார்த்துவிட்டு, ''ஒரு புது மார்க்கத்திற்கு அழைக்கின்றீரே, ஒரேயொரு இறைவனை வணங்கும்படி சொல்கின்றீரே, அந்த இறைவன் யார்?'' எனக் கேட்டான். ''வானம், பூமி, இவைகளி லுள்ளவை, அனைத்தையும் படைத்துப் பரிபாலனஞ் செய்து; உயிர்வஸ்துகளை இறக்கச் செய்து, இறந்தவர்களை உயிர்ப்பிக்கின்றானே! அந்த ரஹ்மான் ஆகிய அல்லாஹ்தான் நான் கூறும் இறைவன்,'' என விடையளித்தார். இறந்தவர்களைத் தானும் உயிர்ப்பிப்பதாக நம்றூத் நபியவர்களிடம் வாதாடினான். அது எவ்வித மென நபியவர்கள் கேட்டார்.

செய்த குற்றத்திற்காகச் சிலர் மரணதண்டனை பெற்று, மன்னிப்புக்காக அவன் முன்னிலையிற் கொண்டுவரப்பட்டால், அவன் விரும்பியவர்களை விடுவித்து, மரணிக்கவிருந்த அவர்களை அவன் உயிர்ப்பிப்பதாக விளக்கிக் கூறினான். நபியவர்கள் நகைத்துவிட்டு, ''அது அவ்வாறன்று. அவரவர் செய்த நன்மை தீமைகளை விசாரிப்பதற்காக, இறந்தோர்களை இறைவன் நியாயத்தீர்ப்பு நாளில் உயிர்ப்பிப்பான்,'' என்று கூறினார். கூறிவிட்டு, ''அரசே! எனது இறைவன் சூரியனைக் கிழக்குத் திசையில் உதிக்கச்செய்கின்றான், நீங்கள் மேற்குத்திசையில் உதிக்கச்செய்யுங்களேன்,'' என்றார். ஒன்றும் கூறமுடியாமல் அரசன் திணறினான். (2: 258)

மக்களுக்கு அவர் எவ்வளவோ கூறியும், விக்கிரக வணக்கத்தை அவர்கள் விடவேயில்லை. எனவே, அவர்கள் வழிபடும் விக்கிரகங்கள் ஒரு வேலையும் செய்யச் சக்தியற்றவை என்பதை அந்த மக்களுக்கு நிரூபித்துக்காட்டவேண்டுமென அவர் எண்ணினார். இதற்காக, அவர்களின் பெருநாள் ஒன்றை எதிர்பார்த்திருந்தார். பெருநாள் வந்ததும், அன்று மக்களெல்லாம் கோயிலுக்குச் சென்றார்கள். அங்கே, ஆடு மாடுகளைத் தெய்வங்களுக்குப் பலிகொடுத்துவிட்டு, அவைகளின் மாமிசத்தைச் சமைத்து தெய்வங்களுக் கெதிரே குவித்தார்கள். சோற்றையும் ஒரு பக்கத்திலே குவித்தார்கள். இவைகளைச் செய்துவிட்டு, தேவைரோர் கடமையை முடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்காக எல்லோரும் சற்று தூரத்தே சென்றனர்.

தருணம் பார்த்து நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் கோயிலுக்குள்ளே சென்ருர். ஒரே வரிசையில் சிறிய விக்கிரகங்கள் எழுபதும், அவை மத்தியிலே ஒரு பெரிய விக்கிரகமும காணப்பட்டன. தங்கத்தால் வர்ண – வேலைகள் செய்யப்பட்டிருந்த ஒரு மேடையின்மீது அந்தப் பெரிய விக்கிரகம் வைக்கப்பட்டிருந்தது. அங்கு கிடந்த கோடரி யொன்றை எடுத்து நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் சிறிய விக்கிரகங்கள் அனைத்தையும் அதனுல் அடித்து உடைத்து விட்டு, கோடரியைப் பெரிய விக்கிரகத்தின் கழுத்திலே கொழுகிவிட்டு, அதற்கு மட்டும் யாதொன்றும் செய்யாமல், சீக்கிரமாக வெளியேறினுர்.

கிரியைகள் முடிந்ததும் மக்கள் கோயிலுக்குத்திரும்பினுர்கள். சிறிய விக்கிரகங்கள் யாவும் தகர்க்கப்பட்டிருந்தன. அவர்கள் அடைந்த ஆத்திரத்திற்கோ அளவில்லை. "இது ஆசருடைய மகன் இப்ருஹீமுடைய வேலையாகத்தானிருக்கவேண்டும்'' என்று சொல்லி எல்லோரும் ஆரவாரித்தனர். உடனே நபியவர்கள் தேடிப்பிடித்துவரப்பட்டு, ஒரு சபையிலே நிறுத்தப்படலானுர்.

"நீதானு விக்கிரகங்களை உடைத்தது?'' என்று கேட்டான் அரசன். நபியவர்கள் இல்லையெனக் கூறிவிட்டு, "அப்படி நான்தான் அதை உடைத்ததாக நீங்கள் எண்ணினுல், பெரிய விக்கிரகத்தினிடம் கேட்டுப்பாருங்கள். அது உண்மையான தெய்வமாக இருந்தால், நடந்ததைச் சொல்லுந்தானே,'' என விடையளித்தார். (37: 91—98)

அவர் அளித்த விடை எரியும் நெருப்பிலே எண்ணெய் வார்த்ததுபோ லிருந்தது. "அச்சமற்றவனே! செய்த குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்பதுபோக இன்னுமா உன் வீரும்பைக் காட்டுகின்ருய்'' என்ருன் ஒருவன். "நமது தெய்வங்களை இவன் சிறுமையாகவே எண்ணி வருகின்ருன். இனி மேல் இவனைச் சும்மா விடக்கூடாது, இவனைக் கொல்ல வேண்டும்,'' என்ருன் இன்னெருவன். "இல்லை. சாதாரண கொலை இவனுக்குத் தகுதியன்று. இவனை நெருப்புக் கிடங்கிலே எறியவேண்டும்,'' என்றது ஒரு குரல். அதை ஆயிரம் குரல்கள் "ஆம்'' என அங்கீகரித்தன. அதற்கென ஒரு தினத்தையும் அரசன் குறிப்பிட்டான்; சபையும் கலைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பெரிய அகழி யொன்றை வெட்டி அதை விறகு கொண்டு நிரப்பினர்கள். ''இந்தக் காரியம் நிறைவேறி ஞல் இப்ருஹீமை எரிக்கும் குழியிலே இவ்வளவு விறகு போடுவேன்'' என நேர்ந்த விறகு காணிக்கையும் அதிற் போடப்பட்டிருந்தது. உரிய நாள் வந்ததும் நெருப்பை எரியச்செய்து, நபி இப்ருஹீம் (அலை) அவர்களை அதிலே எறிந்தார்கள். (29: 24)

எல்லாம்வல்ல இறைவனின் சக்தியால் எரிந்துகொண்டிருந்த அந்த நெருப்புக் கிடங்கு, குளிர்ந்த சோலைவனமாக மாறியது. அந்தக் கிடங்கினுள்ளே, நாற்பது முழச் சதுரமான ஒரு பூந்தோட்டம் உண்டா யிருந்தது. பூந்தோட்டத்தின் மத்தியில், பத்து முழச் சதுரமான ஒரு மணற்றரை காணப்பட்டது. அதிலே, கட்டில் போன்ற ஒரு மேடையில் நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் உல்லாசமாக வீற்றிருக்க, பக்கத்தே இருவர் நின்று வீசிக்கொண்டிருந்தனர். வெளித் தோற்றத்திற்கு, கிடங்கு எரிந்து கொண்டே யிருந்தது.

ஏழு நாட்கள் கழிந்ததின்பின், அரசனும் குடிமக்களும் அங்கே வந்தார்கள். அங்கு அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திகைப்படையச் செய்தது. மேற்கூறிய சோலையில் நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் பழம் அருந்திக்கொண்டிருந்ததைக் கண்டார்கள். அந்த அதிசயத்தை அவர்கள் பொருட்படுத்தாதவர்கள் போன்று நபியவர்களை நோக்கி, ''இப்ருஹீமே! உனது தெய்வம் உன்னை நெருப்பிலிருந்து காப்பாற்றிவிட்டது; ஆனல் கிடங்கிலிருந்து எப்படிக் காப்பாற்றும்?'' என்று கேட்டார்கள். ''இறைவனருளால் வர முடியும்'' என்று கூறியதுதான் தாமதம், உடனே அவர் தரையிற் காணப்பட்டார். நபியவர்களுடன் வார்த்தைகள் பரிமாறிக்கொண்ட நம்றூத், அங்கு அவருக்குப் பக்கத்தே யிருந்த இருவரும் யாரென வினவினுன். ''மனித உருவம் பெற்றுவந்த இரு அமரர்கள்,'' என விடையளித்தார்.

இவைகளைக் கேட்ட நம்றூத், நபியவர்களை நோக்கி, ''இப்ருஹீமே! நீ வழிபடும் தெய்வம் பெரும் சக்தியுடையது போன்றுதான் தோன்றுகிறது. ஆகவே, உமது தெய்வத்திற்கு அனேக ஆடுமாடுகளை நான் பலிகொடுக்கப்போகின்றேன்,'' என்று கூறினுன். அதற்கு நபியவர்கள், ''ஒரே இறைவனுகிய அல்லாஹ்வை விசுவாசித்து, அந்த இறைவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணை வையாமல் தீர்க்கதரிசிகளையும் விசுவாசித்து, அவர்கள் இடும் கட்டளைப்படி நடப்பவர்களுடைய பலியைத் தான் எனது இறைவன் ஒப்புக்கொள்வான்,'' என்று கூறினார்.

அதற்கு அரசன் நபியவர்களை நோக்கி, ''என்னையே தெய்வமாக மக்கள் கொண்டுள்ளபோது நானா வேறொரு தெய்வத்தை வணங்குவது? அது முடியாத காரியம். உனது இறைவன் ஏற்றுக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் சரியே; நான் அவைகளைப் பலிகொடுப்பேன். அதுமட்டுமல்ல, அனேக பொன்னும் வெள்ளியும் கொடுப்பேன்,'' என்று கூறி, நபியவர்களைப் போகவிட்டான்.

அப்பொழுது அவனுடைய நண்பர்களில் ஹாருன் என்பவன் அவனெதிரே வந்து, ''அரசே! இப்ருஹீம் நெருப்பை வணங்குகின்றான்போலும்; ஆகையினாற்தான் அது அவனைத் தீண்டவில்லை,'' எனக் கூறினான். கூறிய அதே கணம், மேகத்திலிருந்து ஒரு நெருப்புக் கனல் இறங்கி அவனுடைய கண்களைக்கரித்தது. அவன் தரையிலே விழுந்து, உருண்டு புரண் டழுதான்.

இவைக ளெல்லாவற்றையும் நம்றூதுடைய மகள் அரண்மனையி லிருந்த வண்ணம் கவனித்துக்கொண்டிருந்தாள். நபியவர்களுடைய போதனைகளைக் கேட்டும், அவருக்கு நெருப்புக் கிடங்கில் நடந்த அற்புதங்களைக் கண்டும், நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் கொண்டுவந்த வேதம் உண்மையானதாகத்தா னிருக்கவேண்டும் என்றெண்ணி, மனதிலே அதைப்பற்றி அலசிக்கொண்டிருந்தாள். அதே வேளையில் அரசனும் அங்கு வந்து, நபியவர்கட்குத் தான் செய்த வேலையைப் பெருமையாகப் பேசும் நோக்கமாக தன் மகளை நோக்கி, ''எப்படி மகளே எனது வேலை?'' எனக் கேட்டான். தகப்பன் செய்த சூழ்ச்சியிலிருந்தே நபியவர்களின் கனதியை எடுத்துக்காட்டவேண்டும் என்றெண்ணிய அவ் வரசிளங் குமரி தன் தகப்பனை நோக்கி, ''தந்தையே! எரிந்து சாம்பலாகவேண்டுமென நினைத்து நீங்கள் நெருப்பிலே எறிந்த இப்ருஹீம் அதனுள்ளே எவ்வளவோ உல்லாசமாக இருந்தார்; ஆனால் அவரைப்பற்றிப் பொய் கூறிய ஹாருன் நெருப்புக்கு இரையாகி அதோ துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கின்றான். இப்ருஹீம் வழிபடும் இறைவன் உண்மையான தென்று இதிலிருந்து அறிந்துகொள்ள முடியாதா?'' எனக் கேட்டாள். மகளைக் கடிந்து பேசிவிட்டு, நம்றூத் ஹாருனிடம் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்புக் கிடங்கிலிருந்து மீட்சி பெற்ற நபியவர்கள் அதோ போய்க்கொண்டிருந்தார். இளவரசி அரண்மனையை விட்டும் வெளியேறி நபியவரை நோக்கி ஓடினாள். தான் அவருடைய மார்க்கத்தில் சேர விரும்புவதாகவும், தனக்கு உதவி செய்யும்படியும் நபியவர்களிடம் கூறினாள். உடனே அவர் விசுவாச வாக்கியங்களைச் சொல்லிக்கொடுத்தார். தான் விசுவாசியானதைப் பெற்றோர்கட்கு அறிவித்துவிட்டு, அவர்களையும் தன் பக்கம் இழுத்துப் பார்த்துவிட்டுவர அனுமதி பெற்றுக்கொண்டு இளவரசி அரண்மனையை அடைந்தாள். அங்கு சென்றதும் தன் தகப்பனை நோக்கி, "தந்தையே! இப்றாஹீம் நபி வழிபடும் தெய்வம் உண்மையானது என்பதற்கு ஐயமே இல்லை. நானே அதைத் தழுவி விட்டேன். நீங்களும் அப்படிச் செய்வதற்கு இன்னும் ஏன் தாமதம்?'' என்று கேட்டாள்.

நம்றூத் கோபங்கொண்டு, மகளைக் கொல்லுவதற்காக அருகே சென்றான். எதிர்பாராத விதமாக ஒரு மேகம் தோன்றி அவளைச் சுமந்துகொண்டுபோய், நடந்து சென்றுகொண்டிருந்த நபி இப்றாஹீம் (அலை) அவர்கள்முன் நிறுத்தியது. இவ் வாச்சரியமான செய்தியைக் கேட்ட ஊர் மக்கள், சிறிது சிறிதாக அவரை விசுவாசிக்கலாயினர். எனினும், அரசனுக்குப் பயந்ததினால் அதிகமானோர் உள்-விசுவாசிகளாக யிருந்தனர்.

நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு இருசகோதரர்களிருந்தனர். ஒருவர் திருமணம் செய்து, * லூத் என்னும் மகனை மட்டும் பெற்றபின் மரணமானார். மற்றவர் விவாகம் செய்து பிள்ளைப் பேறுடன் ஜீவித்து வந்தார். இவர்கள் அனைவரும் விசுவாசிகளாயினர். அவர்களுக்கு நம்றூத் பல இன்னல்களைச் செய்ததினால் அங்கு வாழ்வது அவர்களுக்குப் பெரும் கஷ்டமாக யிருந்தது. எனவே, நபியவர்கள் தனது விசுவாசிகளுடன் ஹிறான் என்றழைக்கப்பட்ட ஓர் ஊரிலே குடியேறினார்.

அங்கு சென்று சிறிது காலம் கழிந்ததின் பின், அவ்வூர் அரசனின் மகளை நபியவர்கள் திருமணம் செய்யவேண்டிய ஒரு கட்டம் ஏற்பட்டது. இதனால், சாறா எனப் பெயர் கொண்ட அந்த இளவரசியை அவர் மணம் செய்து வாழ்க்கை நடாத்தி வந்தார். சில வருடங்கள் கழிந்தபின், மனைவி உட்பட விசுவாசிகளுடன் ஈராக் தேசத்திற்குப் புறப்பட்-

* நபி லூத் (அலை) அவர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டார். அங்கே பஞ்ச மொன்று உண்டானதால் அனைவரும் எகிப்து தேசத்திற்குக் குடிபெயர்ந்தார்கள்.

அஃது வேளை, பிர்அவ்ன் என்றோர் கொடிய அரசன் எகிப்தை ஆண்டுவந்தான். பிறர் மனைவியைத் தீண்டுவதில் பெரும் பேராசை யுள்ளவன். அழகுள்ள அன்னிய பெண் களைக் கண்டால் அதை அரசனுக் கறிவிப்பது அவ்வூர் மக்களின் முக்கிய கடமையாக இருந்தது. நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் தனது மனைவியுடனும் ஏனைய விசுவாசி களுடனும் எகிப்தினுட் பிரவேசித்ததை அவன் அறிந்ததும், அவர்களை அரண்மனைக் கழைப்பித்தான். நபியவர்களின் மனைவியைச் சுட்டிக்காட்டி, அப் பெண் அவருக்கு யாரென வினவினன். சகோதரி எனக் கூறினல் சிலவேளை அவன் யாதும் செய்யாமல் விட்டுவிடக்கூடும் என்றெண்ணிய நபி யவர்கள், ''என் சகோதரி,'' என விடையளித்தார்.

மிருக உள்ளம் கொண்ட அவன், ஆசையினல் உந்தப் பட்டு, நபியவர்களின் முன்பாகவே அவரின் மனைவியின் மீது கையை நீட்டினன். உடனே அவனுடைய கை சூம்பி யது. கதறியவண்ணம் மன்னிப்புக் கோரினன்; கை சொஸ் தமானது. ஆசையின் கைப்பொம்மையாகக் காட்சியளித்த அவன், நபியவர்களின் மனைவியின்மீது இரண்டாம் முறை யாகக் கையை நீட்டினன். உடனே கை சூம்பியது. மன் னிப்புக் கோரினன்; கை சொஸ்தமானது. சிறிது பேச்சுக் கொடுத்துவிட்டு மூன்றும் முறையாகக் கையை நீட்டினன். முன்புபோல் நடக்கவும் மன்னிப்புக் கோரவே, கை சொஸ் தமானது.

தான் நெருப்புடன் விளையாடுவதை அப்பொழுதுதான் அவன் உணர்ந்தான். ஈற்றில், அவர்களிடம் உண்மையான மன்னிப்புக் கோரி, அதிலிருந்தும் விடுபட்டான். ஒரு சகோ தரன் முன்னிலையில், ஒரு சகோதரியை மானபங்கம் செய் யத் தொடங்கியதையிட்டு; அதிலும், அப்படிப்பட்ட பத்தி னித் தன்மை கொண்டவர்களிடம் அவன் கீழ்த்தரமாக நடந்ததையிட்டுப் பெரிதும் மனம் வருந்தியதுடன் வெட்க மும் அடைந்தான். அதனை நிவர்த்திசெய்வான் பொருட்டு அந்தச் சகோதரனுக்கு ஓர் அன்பளிப்புச் செய்ய அவனுள் ளம் நாடியது. எனவே, தனது மகளின் அரண்மனைத் தோழியர்களில் கற்புநெறி தவருத ஹாஜரு என்ற ஓர் அழகிய பெண்ணை, நபியவர்களுக்கு அவன் அன்பளிப்பாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கொடுத்தான். இதனால், நபி இப்றுஹீம் (அலை) அவர்களுக்கு ஹாஜறுவும் உரிய மனைவியானார்.

தொடர்ந்து எகிப்திலே இருப்பதற்கு அவர் விரும்பாததினால் அரேபியா தேசத்திற்குப் புறப்பட்டார். அங்கேயே நிலையான வாழ்க்கையை ஆரம்பித்தார். அவருக்கு ஏராளமான கால்நடைகள் உற்பத்தியாகின. அவரோடு கூடச் சென்ற லூத் என்பவர் வளர்ந்து உரிய வயதை யடைந்ததும், அவரை இறைவன் நபியாகத் தேர்ந்தெடுத்தான். பக்கத்தேயிருந்த 'சோதோம்' என்றோர் ஊர் பிழையான வழியில் சென்றுகொண் டிருந்ததால், நபி லூத் (அலை) அவர்கள் அங்கு அனுப்பப்பட்டார். பிள்ளைப் பாக்கியத்தை மட்டும் தவிர ஏனைய அனைத்தையும் பெற்று, நபி இப்றுஹீம் (அலை) அவர்கள் தன் இரு மனைவிகளுடனும் அங்கு சீவித்து வரலானார்.

[பின் வருவோர்களுடைய சரித்திரங்களிலும் இவரைப்பற்றி அறியலாம்]

* மனிதர்களை விற்பதும் அன்பளிப்பதும் அப்போதைய வழக்கமாயிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி இஸ்மாயீல் (அலை)

நபி இப்ருஹீம் (அலை) அவர்களிடம் ஒரு விசேச குணம் காணப்பட்டது. அதாவது, விருந்தாளி ஒருவராவது இல்லா விட்டால் அவர் உணவருந்தமாட்டார். எனவே, விருந்தி னர் இல்லாததினுல் தொடர்பாக மூன்று வேளை உணவு உட்கொள்ளாம லிருந்த நபி இப்ருஹீம் (அலை) அவர்கள், பாதையில் யாராவது வழிப்போக்கர்கள் வருவார்கள் என்ற எண்ணத்துடன் வீட்டை விட்டும் வெளியே வந்தார். மூன்று வயோதிபர்கள் அவ் வழியால் வந்துகொண்டிருந்த னர். அவர்களின் வருகையால் ஆனந்தமடைந்த நபியவர் கள், அவர்களை யணுகி மரியாதை செய்து, ''சாப்பிடுவதற் காக என்னுடைய வீட்டிற்கு நீங்கள் வரவேண்டும்,'' என வேண்டினுர். அவர்களும் அதற் கிசைந்தனர்.

முதியோர்கள் நபியவர்களுடைய வாசஸ்தலத்தை அடைந்ததும் ''சலாம்'' கூற, அவரும் அதற்குப் பிரதிப லன் கூறிவிட்டு, முதியோர்களை அமரச் செய்தார். நபிய வர்கள் தாமதியாமல் வீட்டினுட் சென்று, கன்றுக்குட்டி யின் மாமிசத்தாலான ஒருவித உணவை எடுத்து வந்து, முதியோர்கள்முன் வைத்தார். வெகு நேரமாகியும் அவர்கள் அதை உண்ணுதலைக் கண்ட நபியவர்கள், ''ஏன் நீங்கள் சாப்பிட மாட்டீர்களா?'' என்று கேட்டார். மீண்டும் வெகுநேரம் போய்விட்டது; ஆனுல் அவர்கள் உண்ணத் தொடங்கவில்லை. எனவே, அவர்கள் யாராக இருக்கலா மென்றெண்ணி நபியவர்கள் மனதிலே பீதிகொண்டார். அதையறிந்த முதியோர்கள் நபியவர்களை நோக்கி, ''இப் ருஹீமே! நீங்கள் பயப்பட வேண்டாம். நிச்சயமாக நாங் கள் லூத் நபியுடைய மக்களை அழித்துவிடுவதற்காக இறை வனுல் அனுப்பப்பட்ட அமரர்கள்,'' என மொழிந்தார் கள். (அல்குர்ஆன் 11: 69, 70; 51: 24 – 28)

அந்த ஊர் மக்கள் அழிக்கப்பட விருப்பதைக் கேள்வி யுற்ற நபியவர்கள் பெரிதும் மனம் வருந்தி, ''அவ்வூரில் நல்ல மனிதர்கள் ஐம்பது பேர்களாவது இல்லையா?'' என அமரர்களைக் கேட்டார். இல்லையென அவர்கள் விடைய ளித்தனர். ''நாற்பது பேர்களாவது இல்லையா?'' என மீண் டும் கேட்டார்; இல்லையென அவர்கள் விடையளித்தார்கள். இவ்விதமாகக் கேட்டுவந்து, ''ஐந்து பேர்களாவது இல்லை யா?'' எனக் கேட்டார். நபி லூத் (அலை) அவர்களையும்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவருடைய இரு குமாரத்திகளையும் தவிர அவ்வூரில் வேறு நல்லவர்க ளில்லை,'' என அவர்கள் விடையளித்தனர். அவ்வூர் அழிக்கப்படுவதையிட்டு நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் அமரர்களிடம் மீண்டும் பரிந்து பேசினார். அது முடியாத ஒரு வேலை யென்றும், அப்படி அழிக்கப்படுவது இறைவனால் தீர்ப்பாகிவிட்டது என்றும் அவர்கள் பதிலளித்தனர். (11: 75, 76)

இன்னும் அமரர்கள் அவரை நோக்கி, ''நீங்கள் எங்களைப்பற்றிப் பயப்படவேண்டாம். நிச்சயமாக உங்களுக்கு மிக்க ஞானமுடைய ஒரு குமாரனின் பிறப்பையிட்டு நன்மாராயம் கூறுவதற்காகவும் இங்கு நாம் வந்துள்ளோம்,'' என்றும் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் புன்முறுவல் பூத்தவராக அமரர்களை நோக்கி, ''இம் முதுமையிலா எனக்குக் குமாரனைக்கொண்டு நன்மாராயம் கூற நீங்கள் வந்தீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அமரர்கள், அது பரிகாசமல்ல என்றும், அதையிட்டு அவநம்பிக்கை கொள்ளவேண்டா மென்றும் கூறினார்கள். (15: 53-55; 51: 28)

இவைகளைக் கேட்டுக்கொண்டு வீட்டினுள் இருந்த சாரு (அலை) அமரர்கள்முன் வந்து, நாணம் அடைந்தவராகத் தனது கை யொன்றைக் கன்னத்திலே வைத்தவண்ணம் அமரர்களை நோக்கி, ''நாங்கள் இருவரும் முதுமை அடைந்தவர்களாக இருக்கும்பொழுது, நான் கர்ப்பவதியாகி ஒரு பிள்ளையைப் பெறுவது, எனக்கே வியப்பாக இருக்கிறது,'' என்று கூறி அதிசயப்பட்டார். அதைக் கேட்ட அமரர்கள், அது இறைவனுடைய வேலையாக இருப்பதால் அதையிட்டு ஆச்சரியப்படத் தேவையில்லை யென்றும், இறைவனுடைய அருள் அவ் வீட்டிலுள்ளோர்கட்குக் கிடைத்துவிட்டதென்றும் கூறி மறைந்தார்கள். (11: 72, 73; 51: 29, 30)

அமரர்கள் இந்தச் செய்தியை அறிவித்துப் பல மாதங்கள் கழிந்ததின் பின்னும், அவருக்குப் புத்திர சந்தானம் இல்லாமலே யிருந்தது. அதையிட்டு ஒரு நாள் நபியவர்கள் துக்கத்திலாழ்ந்தார். இறைவன் அவரை நோக்கி ''இப்ருஹீமே'' என அழைத்து, அவரைச் சஞ்சலப்படவேண்டா மென்றும், வானத்து நட்சத்திரங்களைப்போன்று எண்ணிலடங்காத மனிதர்களை அவரிலிருந்து தோற்றுவிப்பான் என்றும் ஆறுதல் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில காலங்கள் கழிந்ததின்பின், ஹாஜரு (அலை) அவர்களால் நபி இப்ருஹீம் (அலை) அவர்கட்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அப்பொழுது அவர் எண்பத்தாறு வயதுடையவராக யிருந்தார். அவ்வளவு காலத்திற்கும் பிள்ளைப் பாக்கியம் இல்லாதவரல்லவா? பெரும் சந்தோஷமடைந்தார். பிள்ளைக்கு இஸ்மாயீல் எனப் பெயரிட்டு, தன் கண் மணிபோல் வளர்த்து வந்தார்.

அக் குழந்தை பிறந்து சிறிது மாதங்கள் சென்றதின் பின், நபியவர்கட்கு இறைவன் ஒரு கட்டளை யிட்டான். அவருடைய வீட்டிலிருந்து பல மைல்களுக்கு அப்பாலுள்ள பாலைவனத்திலே ஓர் இடத்தைக் குறிப்பிட்டு, அந்தப்பிள்ளையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டுபோய் அங்கே விட்டுவிட்டு வரும்படி ஏவினான். கவலையால் நபியவர்கள் மனம் கலங்கினர்.

மறுநாட் காலை நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் கொஞ்ச ரொட்டியை எடுத்தார்; தோலால் செய்யப்பட்ட ஓர் உறையிலே கொஞ்சம் தண்ணீரை எடுத்தார். பிள்ளையைத் தூக்கித் தன் தோள்மீது வைத்தவண்ணம் மனைவி ஹாஜருவையும் கூட்டிக்கொண்டு அவ்விடத்தை நோக்கிச் சென்றார்.

அந்த இடமோ, கால்களைக் கருகவைக்கும் கடும் பாலைவனம். மனித சஞ்சாரமற்ற, கொடிய மிருகங்களையுடைய இடம். அங்கே அவர்கள் எங்ஙனம் இருக்கமுடியுமென நினைத்து மனம் பதறினர். ஆனால், 'இறைவனின் கட்டளை' எனில் அதற்கு எதுவித கருணையும் காட்டாதவர். எனவே, மரத்தின் கிளைகளால் அவர்கட்கொரு நிழலை உண்டாக்கி, அதன்கீழே அவர்களிருவரையும் அமரச் செய்துவிட்டுத் திரும்பினர். சற்று தூரம் நடந்துசென்றதின்பின், மனைவியையும் மகனையும் நபியவர்கள் திரும்பிப்பார்த்தார். சோகக் கடலின் சோர்வு அலைகள் அவர் முகத்திலே காட்சியளித்துக்கொண் டிருந்தன.

விஷயத்தைப் புரிந்துகொள்ளாத ஹாஜரு (அலை), தங்களைவிட்டும் வெகுதூரம் சென்றுகொண்டிருந்த நபியவர்களைக் கூப்பிட்டு, "பயமாக இருக்கிறது நீங்கள் எங்கு செல்கின்றீர்கள்?" எனக் கேட்டார். அந்தக் கேள்வியிலுள்ள ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வோர் அம்பாகச் சென்று அவரின் உள்ளத்திற் றைத்ததுபோன் றிருந்தது. அவர் ஒன்றுமே பேசவில்லை. அவர் எது காரியம் செய்தாலும் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் ஏவலாகத்தா னிருக்கும் என்பதில் பூரண நம்பிக்கையுள்ள அப் பெண்மணி நபியவர்களைக் கூப்பிட்டு, ''இப்படித் தனிமையில் எங்களை விட்டுவிட்டுப் போகும்படி இறைவன் உங்களை ஏவினனு?'' என்று கேட்டார். அழுகையின் மத்தியிலே அவர் ''ஆம்'' என மட்டும் விடையளித்தார்.

நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் சிறிது தூரம் சென்று இறைவனை நோக்கி, ''இறைவனே! மனித சஞ்சாரமில்லாத, குடிப்பதற்கே நீர் அற்ற, இக் கொடிய பாலைவனத்திலே; உன் ஏவலுக்குத் தலைசாய்த்து என் பிள்ளையையும் என் மனைவியையும் இங்கு விட்டுச் செல்கின்றேன். அவர்கட்கு ஆபத்து ஏதும் வராமல் நீர் காப்பாற்று நாயனே,'' என வேண்டிக்கொண்டு வீடு திரும்பினர்.

தாயும் குழந்தையும் காட்டிலே தனிமையி லானார்கள். ''இறைவனின் ஏவுதல்'' என்பதை உணர்ந்ததும், அப் பெண்மணி தைரியத்தை வரவழைத்து க்கொண்டார். இரண்டொரு நாள் கழிந்ததின் பின், எடுத்துச் சென்ற ரொட்டியும் தண்ணீரும் முடிவடைந்தன. பசி ஒருபுறமிருக்க, தாகம் அவர்களை வாட்டியது. அதைத் தாங்கமுடியாத அந்தப் பிள்ளை; அம்மா, அம்மா, என்றழைப்பதுபோன்று கால்களைப் பூமியிலே அடித்துக்கொண் டழுதது. பிள்ளையின் அந்தக் கோரக் காட்சியை ஹாஜருவால் தாங்கமுடியாமற் போய்விட்டது.

நிமிர்ந்து பார்த்தார். கண்ணீரைக் கசியச்செய்து கொண்டிருந்த தனது கண்களுக்கு, அங்கு உண்டான கானல், நீராகவே காட்சியளித்தது. அவ்விடத்திற்கு ஓடினர்; நீரைக் காணவில்லை. கொடிய விலங்குகளின் எண்ணம் மனதிற் தோன்றவே, பிள்ளையிடம் ஓடிவந்தார். அது அழுதுகொண்டே யிருந்தது. மறுபக்கம் பார்த்தார்; மலையின்மீது உண்டான கானல், கண்களுக்கு நீராகவே தோன்றியது. அவ்விடத்திற் கோடினர், நீரைக் கண்டுகொள்ள முடியவில்லை. மீண்டும் பிள்ளையின் சூழ்நிலை ஞாபகத்திற்கு வரவே, அதனிடம் ஓடிவந்தார். ஹாஜரு (அலை) அவர்கள் இப்படியாகத் தண்ணீர் தேடி 'சபா' 'மர்வா' என்னும் இரு மலைகளுக் கிடையே ஓடி யலைந்து திரிந்தார்.

ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஒரு மனிதனின் உருவம் பெற்று வந்து ஹாஜருவை அணுகி, ''நீங்கள் யார்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வினவினார். நபி இப்றுஹீம் (அலை) அவர்களின் மனை வியர்களில் ஒருவர் என விடையளித்தார். அக் கொடிய காட்டிலே அவர்க ளிருவரையும் நபியவர்கள் யாரின் உதவியை நம்பி விட்டுச் சென்றாரென அமரர் கேட்டார். எல்லாம்வல்ல இறைவனின் உதவியை நாடி என விடை யளித்தார்.

ஜிப்ரீல் (அலை) அவர்கள் குழந்தையின் அருகே சென்று ஒரு காலின் பெருவிரலால் பூமியைக் கிண்டினார். உடனே அவ்விடத்திலிருந்து ஓர் ஊற்றுக்கண் உதித்தோடியது. தண்ணீரைக் கண்டதுதான் தாமதம், ஹாஜரு (அலை) அவர் கள் தன்னிடமிருந்த தோற் பையை எடுத்து வந்து நீரை அள்ளினார். குடம் நிறைந்த பின்னும் ஜலம் குபுகுபு எனப் பாய்ந்தோடிக்கொண் டிருந்தது. அதை யறிந்த ஹாஜரு (அலை) 'நில்' என அர்த்தம் தரக்கூடியதாகத் தனது பாஷை யிலே ''சம்'' ''சம்'' என மொழிந்தார்.

அதைக் கேட்ட அமரர் அப் பெண்மணியை நோக்கி, ''அவ்விதம் கூறுதீர்கள். இவ்விடத்திற் குடியேறி வசிக்கப் போகின்றவர்களுக்காகவும், ஒரு காலத்தில் இவ்விடத்தை நாடி வரும் விருந்தினர்களுக்காகவும் இவ் ஊற்றுக்கண்ணை உலகம் முடியும்வரை இறைவன் திறந்துள்ளான். இனிமேல் தாகத்திற்கு நீங்க ளிங்கு அஞ்சவேண்டியதே யில்லை,'' எனக் கூறி மறைந்தார். ''கஷ்டம் வரும்பொழு தெல்லாம் இதேவிதம் இறைவனின் கடாட்சம் நமக்குக் கிடைக்கும்,'' என எண்ணி, ஹாஜரு (அலை) அந்தக் கொடிய காட்டிலே தனது பிள்ளையுடன் தனிமையில் சீவித்து வரலானார்.

அதன் வழியே வேட்டையாடிக்கொண்டு வந்த சில மனிதர் அவ் ஊற்றுக்கண்ணைக் கண்டு அதனருகே குடியே றினார்கள். அவர்களைத் தொடர்ந்து அதிகமானோர் அங்கு குடியேறியதனால் வெகு சீக்கிரத்தில் அது ஒரு கிராமமா னது. ஹாஜரு (அலை) தனது மகன் இஸ்மாயீலுக்கு அக் கால கல்வி வித்தைகளைக் கற்பித்துக் கொடுத்தார். நீண்ட காலத்திற்குப்பின், நபி இப்றுஹீம் (அலை) அவர்கள் அந்த இடத்தைச் சென்று பார்த்தபொழுது, அதன் மாற்றத்தைக் கண்டு வியப்படைந்தார். மகனும் ஓரளவு பெருத்திருந்ததி னால் அவருக்கு விருத்தசேதனம் செய்துவிட்டுத் திரும்பினார்.

சில காலம் கழிந்ததின்பின், ஒரு பள்ளிவாசலைக் கட் டும்படி நபி இப்றுஹீம் (அலை) அவர்களை இறைவன் ஏவி-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சில காலம் கழிந்ததின்பின், ஒரு பள்ளிவாசலைக் கட்டும் படி நபி இப்றுஹீம் (அலை) அவர்களை இறைவன் ஏவினுன். அது எங்கே, எவ்விதம், அமையவேண்டுமென நபியவர்கள் கேட்க; ஒரு மேகம் வருமெனவும், அதைப் பின்தொடர்ந்து சென்று, அது தாமதிக்கும் இடத்திலே அதனுடைய நிழல் என்ன மாதிரி நிலத்தில் விழுகிறதோ, அதே மாதிரி அதன் சுவர்களை எழுப்பும்படிக்கும இறைவன் நபியவர்களை வேண்டினுன்.

இறைவன் கூறியபிரகாரம் ஒரு மேகம் தோன்றவே நபியவர்கள் அதைப் பின்தொடர்ந்தார். ஓரிடத்திலே அது போய்த் தரித்து நிற்க, அதன் அமைப்பை நபியவர்கள் நிலத்தில் கீறி எடுத்தார். அந்த இடத்தை அங்கும் இங்கும் சுற்றிப்பார்த்தார். அது வேறெந்தஇடமுமில்லை. முன்பு மகனையும் மனைவியையும் விட்டுச் சென்ற இடமாகவே தோன்றியது. எனவே, தன் மனைவியின் இடத்திற்குச் சென்று மகனைச் சந்தித்து, பள்ளி கட்டவேண்டிய பொறுப்பை எடுத்துக் கூறினுர். வேண்டுமாயின் தனது உதவியைத் தருவதாக மகன் வாக்களித்தார். எனவே, மகனின் உதவியுடன் நபி இப்றுஹீம் (அலை) அவர்கள் அந்தப் பள்ளிவாசலைக் கட்டிமுடித்தார்.

அது முடிவடைந்ததும் நபியவர்கள் தன் மகனைப் பக்கத்தே வைத்தவண்ணம் இறைவனை நோக்கி, ''எங்களுடைய இறைவனே! நாங்கள் உன்னை வணங்குவதற்காகக் கட்டிய இவ் வீட்டை எங்களிடமிருந்து நீ ஏற்றுக்கொள்வாயாக! எங்களிருவரையும் உனக்கு முற்றிலும் வழிபடும் முஸ்லீங்களாகவும், எங்களுடைய சந்ததியிலிருந்தும் ஒரு கூட்டத்தினரை முஸ்லீங்களாக ஆக்கிவைப்பாயாக! எங்கள் இறைவனே! ஹஜ்ஜி காலத்தில் நாங்கள் புரியவேண்டிய வணக்கங்களை எங்களுக்கு நீ அறிவிப்பாயாக! நாங்கள் தவறு இழைத்துவிட்டால் எங்களை நீ மன்னிப்பாயாக! நிச்சயமாக நீ மிக மன்னிப்போனும், அளவற்ற அன்புடையோனும், எங்கள் பிரார்த்தனையைச் செவியுறுவோனுமாக இருக்கின்ருய். எங்களின் இறைவனே! உனது திருவசனங்களை மக்களுக்கு ஓதிக் காண்பித்து, மற்றைய வேதங்களிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து, அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கக்கூடிய ஒரு தூதரை எனது பின்சந்ததியிலிருந்து எழுந்தருளச் செய்வாயாக! என இறைவனை வேண்டினுர். (2: 127—129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து "எங்கள் இறைவனே! மிக்க கண்ணியம் வாய்ந்த உனது வீட்டின் சமீபமாக என் சந்ததிகளை வசித்திருக்கச் செய்துவிட்டேன். இது விவசாயமற்ற ஒரு பள்ளத்தாக்கு. இறைவா! இதை அபயமளிக்கும் ஒரு பட்டணமாக ஆக்கிவைத்து, இதில் வசிப்பவர்களில் எவர் அல்லாஹ்வையும் இறுதி – நாளையும் விசுவாசிக்கின்றார்களோ அவர்களுக்கு ஆகாரமாகப் பலவகைக் கனிவர்க்கங்களை அளிப்பாயாக! நான் விட்டுச்செல்லும் எனது சந்ததிகளை அதிகமான மனிதர்களின் இருதயங்கள் நோக்கும்படி செய்வாயாக!..."என்றும் வேண்டினார். (2: 126, 14: 37,38)

யாவும் முடிவடைந்ததின்பின், நபியவர்கள் தன் மைந்தனை ஹாஜராவிடம் ஒப்படைத்துவிட்டு மறு இல்லம் சேர்ந்தார். ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்து நபியவர்கட்கு ஹஜ்ஜின் கிரியைகளைப் படிப்பித்துக்கொடுத்தார். உரிய காலம் வந்ததும், நபியவர்கள் அதை நிறைவேற்றி வரலானார்.

ஒரு நாள் இரவு நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் கனவொன்று கண்டார். அவரது மகன் இஸ்மாயீலை அறுக்கும்படி இறைவன் ஏவுவதாக அதிலே காட்டப்பட்டது. தொடர்பாக மூன்று இரவுகள் அதே கனவை அவர் கண்டார். அக் கனவு நபியவர்களைப் பெரும் யோசனையிலாழ்த்தியது. ஈற்றில், அது இறைவனின் உண்மையான வேண்டுகோள் என நபியவர்கள் முடிவுசெய்து, அவர் கண்ட கனவை நனவாக்க உறுதிபூண்டார்.

சோகமே உருவமாகக் காட்சியளித்த நபியவர்கள் தன் மனைவி ஹாஜராவின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். அங்கு சென்று, மகனின் ஆடையைக் கழுவிப்போடும்படி மனைவியை ஏவினார். அன்றையத் தினம் ஹஜ்ஜுடைய நாளாக யிருந்தது. புனித ஹஜ் வணக்கத்தை நிறைவேற்றிவிட்டு, மதியநேரத் தொழுகையையும் முடித்தார். மீண்டும் மனைவியின் இல்லம் சேர்ந்து, மகனைக் கூப்பிட்டு, ஒரு கயிற்றுத்துண்டுடன் தன்னைப் பின்தொடரும்படி வேண்டினார்.

தகப்பனாருடன் விறகுக்குப் போவதாக மகன் எண்ணிக்கொண்டு, பெரும் சந்தோஷத்துடன் அவரைப் பின்தொடர்ந்தார். போகும் வழியிலே, நபியவர்களின் மனதைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பிவிட இப்லீஸ் முயற்சி செய்தான். அவரோ, அணுவளவும் அசையவில்லை. ஜம்றதுல் உக்பா, ஜம்றதுல் வுஸ்தா, ஜம்றதுல் குப்ரு என்ற மூன்று இடங்களிலும் அவன் குறுக்கிட்டு, நபியவர்களின் மனதைத் திருப்பிவிட பெரும் முயற்சி செய்தான். அந்த மூன்று இடங்களிலும் நபியவர்கள் கற்களைப்பொறுக்கி, அவனை எறிந்து துரத்தினர்.

விறகு எடுக்கக்கூடிய இடங்களையெல்லாம் கழித்துவிட்டுத் தொடர்ந்து தகப்பனர் நடந்துசென்றுகொண்டிருந்ததைப் புரிந்துகொள்ளாத மகன், தகப்பனரைக் கூப்பிட்டு, ''நாம் எங்கே செல்கின்றோம் தந்தையே?'' என்று கேட்டார். மகனுடைய அந்தக் கேள்வி அவரை அப்படியே உருகச் செய்தது. அவர் ஒன்றுமே பேசவில்லை. இன்னும் சற்றுத் தூரம் நடந்து சென்று, தன் செல்வனை நோக்கி, ''என் அருமை மகனே! இந்த இடத்திலே வைத்து உன்னை அறுக்கும்படி இறைவன் என்னை ஏவியதாக நான் கனவு கண்டேன்,'' என்று கூறினர். அவரது தொனியில் சோகமும் பாசமும் கலந்திருந்தன.

மகனுக்கு ஒன்றுமே பேசமுடியாமற் போய்விட்டது. அவர் சிந்தனையில் ஆழ்ந்தார். காற்றில் அகப்பட்ட தூசி போல ஓயாது அவர் மனம் யோசிக்கத் தொடங்கியது. சற்று நேரம் கழிந்ததின்பின், ''அந்தக் கனவை எப்பொழுது கண்டீர்கள்?'' எனக் கேட்டார். மகனுடைய அந்தக் கேள்வியிலே ஏக்கமும் தவிப்பும் காணப்பட்டன.

அதற்குரிய விடையைத் தகப்பனர் கூறினர். மீண்டும் மகன் நபியவர்களை நோக்கி, ''என் அருமைத் தந்தையே! தீர்க்கதரிசிகளெல்லாம் மிகவும் பரிசுத்தமானவர்கள். அவர்களுடைய நித்திரை வணக்கமாகவே கணிக்கப்படுகிறது. ஆகையினல், நீங்கள் கண்ட கனவு, உண்மையாக இறைவன் ஏவியதே. அதைத் தாராளமாக நீங்கள் நிறைவேற்றுங்கள். இவ் விஷயத்தில் நிச்சயமாக என்னைப்பொறுமையாளனுகவே நீங்கள் காண்பீர்கள்,'' என்று கூறினர். *(37: 102)*

மகனுடைய இந்த வீர வாக்கியங்களைக் கேட்டதும், அவருள்ளம் மெழுகுபோல் உருகியது. கண்களும் தாரை தாரையாகக் கண்ணீரைக் கொட்டின. மீண்டும் மகன் யோசிக்கலானர். அவருடைய யோசனைகளெல்லாம் தாயைப்பற்றியதாகவே இருந்தன. கலங்கிய கண்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனுரை நோக்கி, ''என் தந்தையே! இவ் விஷயத்தை நீங்கள் முன்பே கூறியிருந்தால், என் தாய்க்கு நான் இறுதி மரியாதை செய்துவிட்டு விடையும்பெற்று வந்திருப்பேனே!'' என்று கூறினர். நபி இப்ருஹீம் (அலை) அவர்களுடைய மனம், வெய்யிலில் அகப்பட்ட புழுப்போல் துடித்தது.

அவருடைய நிலை என்னவாக இருந்தபோதிலும், கொள்கை அளவில் அவர் சற்றும் அசையவில்லை. மகனை அறுப்பதற்காக அவர் ஆயத்தப்பட்டார். அப்பொழுது மகன், ''என் தகப்பனுரே! நான் ஐந்து வேண்டுகோள் விடுகின்றேன். என்னை அறுப்பதற்கு முன் நான்கையும், அறுத்ததின்பின் ஒன்றையும் நீங்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும்,'' என்று கூறினர். தகப்பனின் நிலையை அறிந்த மகன், அவர் கேட்பதற்கு முன்பே அவைகளைக் கூறத் தொடங்கினர்.

1. நான் பதறித் துடியாமலிருப்பதற்காக எனது கால்களையும் கைகளையும் கட்டிவிடுங்கள். அப்படிப் பதறித் துடித்தால், இறைவனின் ஏவலுக்கு மாறுசெய்தவனுக நான் கருதப்படுவேன்.

2. அறுக்கும்பொழுது எனது முகத்தை நீங்கள் பார்க்க வேண்டாம். பார்க்க நேர்ந்தால், பாசத்தின் காரணமாகச் சிலவேளை என்னை அறுக்காமல் விட்டுவிடுவீர்கள்.

3. அறுக்கும்பொழுது வேகமாக அறுங்கள். இது எனக்கும் உங்களுக்கும் இலேசாக இருக்கும்.

4. இரத்தத்தில் நனையா வண்ணம் எனது உடைகளைக் காப்பாற்றியெடுங்கள்.

5. தாயாருக்கு எனது சலாம் கூறி, அந்த ஆடைகளை அவரிடம் ஒப்படையுங்கள்; எனது ஞாபகார்த்தமாக அவைகள் அவரிடம் இருக்கட்டும், என்று கூறி முடித்தார்.

ஆலையில் அகப்பட்ட கரும்புபோல் நபியவர்கள் மேலும் மேலும் துயரத்துக் குள்ளானுர். சிறிது நேரம் சென்றதும், கயிற்றை எடுத்து மகனுடைய கால் கைகளைக் கட்டினுர். உடைகளையும் பாதுகார்த்தெடுத்தார். கையிலே கத்தியை எடுத்து, தனது குறிக்கோளை மனதில் நினைவுகூர்ந்து, ''அல்லாஹு அக்பர்,'' என்று சொல்லிய வண்ணம் வேகமாக அறுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது, எல்லாம்வல்ல இறைவன் நபியவர்களைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, ''நிச்சயமாக இது மகத்தானதொரு பெரும் சோதனையாக இருக்கும். உம்முடைய கனவை உண்மையாகவே நீர் மெய்யாக்கி வைத்தீர். நன்மை செய்தோருக்கு இறைவன் இவ்வாறே கூலி கொடுக்கின்றான்,'' என அறிவித்தான். (37: 104–106) அவ்விதம் அறிவித்துவிட்டு, ஓர் ஆட்டுக் கடாயைக் கொடுத்தான்.

தன் மகனுக்குப் பதிலாக நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் அந்த ஆட்டுக் கடாயை அவ்விடத்தே அறுத்தார். (37: 107) இப்படியாக இறைவன் எவ்விதம் சோதித்த போதிலும் நபியவர்கள் அவைகளைப் பொருந்தினவராகவே காணப்பட்டார். (2: 124) ''மிக்க விசுவாசமுள்ள ஓர் அடியான்'' என்பதாகவும் அவரைப் பற்றி இறைவன் வர்ணிக்கின்றான். (37– 111)

தன் புதல்வன் பூரண வாலிபத்தை அடைவதற்கு முன்பே ஹாஜரு (அலை) அவர்கள் மரணமானுர். (இன்னலில்லாஹி) வெகு காலம் கழிந்ததின் பின், அந்நக் கிராமத்திலேயே அவர் திருமணம் செய்தார். அதன்பிறகு அவருக்கு ''நபித்துவம்'' கிடைத்தது. நபி இஸ்மாயீல் (அலை) அவர்கள் அவ்வூரிலேயே நபியாகப் போதனை செய்து வந்தார்.

நபி இப்ருஹீம் (அலை) அவர்களின் வேண்டுகோளின் பெயரில் மனைவியை விவாகரத்துச் செய்து, இரண்டாம் முறையாக ஒரு பெண்ணை மணம் செய்நார். அவர்களிருவருக்கும் பதிஞெரு குழந்தைகள் பிறந்தன.

நபி இஸ்மாயீல் (அலை) அவர்கள், நபியாக அவ்வூரிலே சேவை செய்து, தனது நூற்று முப்பத்து மூன்ருவது வயதிலே இறையடி சேர்ந்தார். (இன்னலில்லாஹி) மக்கமா நகரில் கஃபதுல்லா என்ற புனித ஸ்தலத்திலே, அவருடைய தாயார் ஹாஜரு (அலை) அவர்களுக்குப் பக்கத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி யாகூப் (அலை)

நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் பிர்அவ்னின் கையிலே சிக்குண்டு, ஹாஜரு என்ற பெண்ணையும் அன்பளிப்பாகப் பெற்று அரேபியா தேசத்திலே குடியேறியதின்பின் ஒரு நாள், அமரர்கள் என்பதை அறியாமல் அவர் மூவருக்கு விருந்து கொடுக்கும்பொழுது, ஒரு குழந்தையின் பிறப்பை யிட்டு அவருக்கு முன் அறிவித்தல் கிடைத்தது எமக்கு நினை விருக்கலாம். வயோதிப காலமென அவர்கள் நினைத்து சிரித் ததற்காகத்தான் என்னவோ, இறைவன் அந்தக் குழந்தை யின் பிறப்பை மேலும் தாமதித்து வைத்தான். நபி இஸ் மாயீல் (அலை) அவர்கள் அறுக்கப்பட்ட பின்னும், குறிப் பிட்ட அந்தக் குழந்தையின் பிறப்பையிட்டு நபியவர்கட்கு இறைவன் ஞாபகப்படுத்தினுன். (37: 112) நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் நூறு வயதுடையவராக இருக்கும்பொ ழுது, சாரு (அலை) அவர்கள் மூலமாக அந்தக் குழந்தையை இறைவன் அவருக்கு அருளினுன். நபியவர்கள் அக் குழந் தைக்கு இஸ்ஹாக் எனப் பெயரிட்டார்.

பிள்ளை வளர்ந்து உரிய வயதை யடைந்ததும், றபகா எனப் பெயர்கொண்ட ஒரு பெண்ணை நபியவர்கள் தன் மகனுக்கு விவாகம் செய்துவைத்தார். திருமணத்திற்குப் பின், அவருக்கு நபித்துவம் கிடைத்தது. எனவே, நபி இஸ்ஹாக் (அலை) அவர்கள் அன்றுமுதல் அப் பணியில் ஈடு படலானுர். பல வருடங்களின்பின், அவருக்கு ஒரே சூலில் இரு ஆண் குழந்தைகள் பிறந்தன. மூத்த பிள்ளை சிவந்த நிறமாகவும், மேனியில் அடர்த்தியான உரோமம் உடைய வராகவும் காணப்பட்டார். அதற்கு ஈஸ் எனவும் இளைய பிள்ளைக்கு யாகூப் எனவும் நாம மிட்டார்.

பிள்ளைகள் வளர்ந்து வந்தன. ஈஸ் என்பவர் வேட் டையில் வல்லவராகவும் வனசஞ்சரியுமாக இருந்தார். யாகூப் என்பவர் நல்ல குணசாலியாகவும் மந்தைமேய்ப்ப வராகவு மிருந்தார். இருவருக்கும் ஒரு விஷயத்தில் தகராறு ஏற்பட்டது. மக்கள் இருவரையும் பிரித்துவைக்கவேண்டு மென்றெண்ணிய பெற்ருேர்கள்; சீரியா தேசத்திலே வசித் துவந்தவனும், றபகாவுடைய சகோதரனுமான லாபான் என்பவருடைய வீட்டுக்கு யாகூபை அனுப்பிவைத்தார்கள்.

யாகூப் அவர்கள் சீரியா தேசத்தினுள் நுழையும்பொ ழுது ஒரு வயல்வெளியைக் கண்டார். சில இடையர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவ்விடத்தே கால்நடைகளுக்குத் தண்ணீர் புகட்டிக்கொண்டிருந்தனர். யாகூப் அவர்கள் அந்த இடையர்களை அணுகி, அவர்கள் எவ்வூர் வாசிகளென வினவினர். அவர்கள் ஊரின் பெயரைக் கூறினர்கள். அதுவே லாபானுடைய ஊராகவும் இருந்தது. எனவே, அவர்களின் உதவியுடன் தன் மாமாவின் வீட்டை யடைந்து, யாகூப் அவர்கள் அங்கேயே சீவித்துவரலானர்.

லாபானுக்கு, லேயா என்றும் ருஹேறல் என்றும் நாமங்கொண்ட இரு புத்திரிக ளிருந்தனர். அவர்களில் ஒருத்தியை யாகூபுக்குத் திருமணம் செய்துவைக்கவேண்டும் என்றெண்ணிய லாபான், தனது எண்ணத்தை அவரிடம் தெரிவித்தார். அதை அவரும் விரும்பவே, மஹர் எவ்வளவு செலுத்த முடியுமென மருமகனிடம் லாபான் கேட்டார். மஹர் கொடுக்கத் தன்னிடம் உரொக்கப் பணம் இல்லையென்றும், அதற்குப் பகரமாக ஏழு வருடங்களுக்கு அவரின் மந்தைகளை மேய்த்துத் தரமுடியும் எனவும் எடுத்துக் கூறினர்.

குறித்த ஏழு வருடங்கள் கழிந்ததும், லேயாவின் திருமண ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்தன. அதிலே யாகூப் அவர்களுக்கு ஓர் அதிருப்தி உண்டானது. அதாவது :— இளைய மகளாகிய ருஹேறலைத் திருமணம் செய்யும் நோக்கமாகவே அவர் மஹர் குறிப்பிட்டார். அதைத் தன் மாமாவுக்கு எடுத்துரைக்க, லாபான் மருமகனை நோக்கி, மூத்த மகள் இருக்க இளைய மகளுக்கு மணம் முடிக்க முடியாதென்றும், அப்படி அவர் ருஹேறலை முடிக்க விரும்பினல், அதற்கு வேருக ஒரு மஹரைக் கூறிவிட்டு இரு புதல்விகளையும் மணம்செய்துகொள்ளும்படியும் வேண்டினர். அதற்கு இரண்டு வருடங்களைக் குறித்துவிட்டு, மொத்தம் ஒன்பது வருடங்கள் கழிந்ததின்பின் யாகூப் அவர்கள், அவ் விரு * பெண்களையும் மணம்செய்தார்.

திருமணம் செய்து இல்லற வாழ்க்கை நடாத்தி வரும் காலத்தில், அவரை இறைவன் நபியாகத் தேர்ந்தெடுத்தான். எனவே, நபி யாகூப் (அலை) அவர்கள் அப் புனிதப் பணியில் ஈடுபட்டுக்கொண்டு தனது குடும்ப வாழ்க்கையையும் நடாத்தி வந்தார்.

* இரு சகோதரிகளை ஒரே ஆண் முடிப்பது அப்பொழுது அனுமதிக்கப்பட்டிருந்தது ஆனல் இப்பொழுது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி யாகூப் (அலை) அவர்களின் மூத்த மனைவியாகிய லையா; றூபீல், எஹூதா, லாவா, ஷம்ஊன் என்ற நான்கு ஆண்களைப் பெற்ருர். இளைய மனைவியாகிய ருஹேறல்; யூசூப் என்ற ஒரேயொரு பிள்ளையை மட்டும் பெற்ருர். இந் நபியவர்கட்கு * ஹிபத் மனைவியர் இருவர் இருந்தனர். லையா கொடுத்த பெண்ணுக்கு சுல்பா என்றும், ருஹேறல் கொடுத்த பெண்ணுக்கு பல்ஹறா என்றும் பெயர்.

ஹிபத் மனைவியாகிய சுல்பா; தாண், நப்தலி, றுயாலூன் என்ற மூன்று ஆண்களைப் பெற்ருர். மற்றப் பெண்ணுகிய பல்ஹறா; ஜாது, ஆஷறு, எஸ்ஜறு என்ற மூன்று ஆண்களையும் பெற்ருர். எனவே, நபி யாகூப் (அலை) அவர்களுக்கு நான்கு மனைவியர்களினுலும் இதுவரை மொத்தம் பதிெெரு ஆண் குழந்தைகள் பிறந்தன.

அவர் மாமாவின் வீட்டிலே சந்தோஷமாகச் சீவித்து வரும் நாளில், இறைவனிடமிருந்து அவருக் கொரு கட்டளை பிறந்தது. அவருக்குச் சொந்தமான யாவற்றையும் எடுத்துக்கொண்டு, அவருடைய தகப்பனுராகிய நபி இஸ்ஹாக் (அலை) அவர்களுடைய ஊருக்குப் போகும்படி இறைவன் ஏவினுன். ஆகையினுல், நபியவர்கள் தனது நான்கு மனைவிகளையும், பதினெரு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு, இன்னும் தனக்குண்டான கால்நடைகளுடனும் தனது தகப்பனுரின் ஊரை நோக்கிப் புறப்பட்டார்.

போகும் வழியிலே, தன் சகோதரனுகிய ஈஸ் என்பவர் ஓர் ஊரில் இருப்பதாகக் கேள்விப்பட்டு, நபியவர்கள் செய்தி யனுப்பினுர். ஈஸ் முன்கொண்டிருந்த கோபங்களை யெல்லாம் மறந்து, இடைவழி வந்து, தன் தம்பியைக் கட்டித்தழுவி யழுதார். நபி யாகூப் (அலை) அவர்கள், தனக்கு உண்டான ஆடுகளில் 240 ஆடுகளைத் தன் சகோதரனுக்கு அன்பளிப்புச் செய்துவிட்டு, பயணத்தை மேற்கொண்டார்.

போகும் வழியிலே ருஹேறலுக்குப் பிரசவ – வேதனை உண்டானது. ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டு, இரண்டொரு நாளையால் ருஹேறல் அவ்விடத்தே காலமானுர். (இன்னுலில்லாஹி) அதற்குரிய கிரியைகளை முடித்துவிட்டு, குழந்தைக்கு புன்யாமீன் என நாமமுமிட்டு, நபியவர்கள் மீண்டும் பயணத்தை மேற்கொண்டார். அவர் கவலை தோய்ந்த முகத்துடன் பிரயாணம் செய்தமைக்காக,

* கணவனுக்கு மனைவி அன்பளிப்புச் செய்யும் பெண். இச் செய்கை அப்போது வழக்கமாய் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இஸ்றயீல்'' என்னும் காரணப் பெயரை இறைவன் நபியவர்கட்குச் சூட்டினன். அதன் பின், அதே நாமத்தைக் கொண்டே அவர் அதிகமாக அழைக்கப்பட்டார். வெகு நாளையப் பிரயாணத்தின் பின், நபி யாகூப் (அலை) அவர்கள் தன் தகப்பனரின் இல்லத்தை யடைந்தார்.

அவ் வேளை, நபி இஸ்ஹாக் (அலை) அவர்கள் மிகவும் முதிர்வயதுடையவராக இருந்தார். தனது நூற்றெண்பதாவது வயதிலே அவர் இறையடி சேர்ந்தார். (இன்னலில்லாஹி)

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி யூசுப் (அலை)

நபி யூசுப் (அலை) அவர்கள், நபி யாகூப் (அலை) அவர்களின் நான்கு மனைவியர்களில், ருஹேல் என்ற பெண்ணுக்குப் பிறந்த இருவரில் மூத்தவராவர். குர்ஆனில் கூறப்பட்ட நபிமார்களுடைய சரித்திரங்களில் இவருடைய சரித்திரம் மிக அழகானது என இறைவனால் வர்ணிக்கப்படுகிறது. (அல்குர் ஆன் 12: 3)

நபி யாகூப் (அலை) அவர்கள் தனது பன்னிரண்டு புதல்வர்களுடனும், எஞ்சிய மனைவியர்களுடனும், தனது தகப்பனாராகிய நபி இஸ்ஹாக் (அலை) அவர்களுடைய ஊரில் சீவித்து வரலானார். மக்கள் அனைவரும் அவருடைய மந்தைகளை மேய்ப்பவராக யிருந்தனர். ஆனால், யூசுப், புன்யாமீன், ஆகிய இருவரும் மிகவும் சிறுவர்களா யிருந்தமையால், அவர்கள் வீட்டில் தங்கி யிருப்பது வழக்கமா யிருந்தது. அதுமட்டுமல்ல, அவர்கள் தாயை இழந்த சிறுவர்கள் என்பதற்காக நபியவர்கள் அதிக அன்புகாட்டி, அவர்களை வெளியில் விடாமல் வளர்த்துவந்தார். தங்களுடைய தகப்பனார் இப்படிச் செய்தது ஏனைய பத்துச் சகோதரர்களுக்கும் சற்று குறையாகவே இருந்தது.

ஒரு நாள், இளம் யூசுப் அவர்கள் ஒரு கனவு கண்டு அதைத் தன் தகப்பனாரிடம் கூறினார். பதினொரு நட்சத்திரங்களும், சூரிய சந்திரர்களும் அவருக்குச் சிரம் பணிந்ததாக, கனவை விளக்கிக் கூறினார். (12: 4)

தன் மைந்தன் கண்ட கனவின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட நபியவர்கள், இளம் யூசுபை நோக்கி, "என் அருமைக் குழந்தையே! இறைவன் உம்மைத் தேர்ந்தெடுத்து, கனவுகளின் வியாக்கியானங்களையும் உமக்குக் கற்றுக் கொடுத்து; உம்மீதும்; யாகூபின் சந்ததிகள்மீதும் தன் அருளைப் பூர்த்திசெய்து வைப்பான். இவ்வாறே, உன் மூதாதைகளாகிய இப்ருஹீம், இஸ்ஹாக், ஆகியோர்மீதும் தன் அருளைப் பூர்த்திசெய்து வைத்தான்........" ஆகையினால், நீர் கண்ட கனவை உன் சகோதரர்களிடம் கூறவேண்டாம். காரணம், அவர்கள் உமக்கு யாதேனும் தீங்கு இழைக்கச் சதி செய்வார்கள். ஏனெனில், நிச்சயமாகச் சைத்தான் மனிதனுக்குப் பகிரங்கமான விரோதியாக இருக்கிறான்," என்று கூறினார். (12: 6, 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூசுப் அவர்கள் இன்னுமொரு கனவு கண்டு அதையும் தன் தகப்பனரிடம் கூறினர். ஒரு வயலிலே அவர்கள் பன்னிரண்டு பேர்களும் கதிர்களை அரிந்து கட்டிக்கொண்டிருந்ததாகவும், ஏனைய சகோதரர்கள் அரிந்து கட்டிய கதிர்க் கட்டுகள், அவருடைய கதிர்க்கட்டுக்கு சாஷ்டாங்கம் செய்ததாகவும் கனவை எடுத்துக்கூறினர். கனவின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட நபியவர்கள், மகனுக்கு முன் விடுத்த எச்சரிக்கையை விடுத்து, மிகவும் கண்காணிப்பாக யூசுபை வளர்த்து வந்தார்.

தங்களின் தகப்பனர் குறிப்பாக அவ் விரு சகோதரர்களையும், அதிலும் யூசுபை அதிகமாக நேசிப்பதைக் கண்ட ஏனைய சகோதரர்கள், அவர்மேல் கோபங்கொண்டனர். தாங்கள் பலசாலிகளாக இருந்து, தொழில் செய்யும் முறையில் தகப்பனருக்கு உதவி புரிந்தும்; அவர், அவர்கள் இருவரையும் அதிகமாக நேசிப்பது அவரின் அறியாமை என அப் புதல்வர்கள் எண்ணினர். இதற்காக யூசுபைக் கொலை செய்ய வேண்டு மென்றும், அப்படிச் செய்தால் தகப்பனரின் பார்வை முற்றிலும் அவர்கள் பக்கம் திரும்பு மென்றும், ஈற்றில், பாவமன்னிப்புக் கோரி நல்ல மனிதர்களாகிவிடலா மென்றும் யோசனை செய்தனர். (12: 8, 9)

அவர்களில் ஒரு சகோதரனுக்கு மட்டும் யூசுபைக் கொலை செய்வது மனவருத்தமாக யிருந்தது. அந்தச் சகோதரன் ஏனையோர்களைப் பார்த்து, யூசுபைக் கொலைசெய்ய வேண்டாமென்றும், அப்படி அவரை ஒழித்துவிட அவர்கள் நாடினல் ஒரு பாழ் கிணற்றில் அவரைப் போடும்படியும், இதனல், யாருடைய பார்வையிலாவது அவர் அகப்பட்டு எங்கேயாவது உயிரோடிருக்க முடியுமெனவும் பரிந்து பேசினன். (12: 10) எல்லோரும் ஆமோதித்தனர்.

ஒரு நாள், அவர்க ளெல்லோரும் ஒருங்கே சேர்ந்து வந்து, தங்கள் தகப்பனரின் முன் ஒழுக்கமாக நின்று, ''எங்கள் தந்தையே! தம்பி யூசுபை நாங்கள் காட்டிற்கு அழைத்துப்போவதை யிட்டு ஏன் நீங்கள் எங்கள்மீது அவநம்பிக்கையாக இருக்கின்றீர்கள்? உண்மையில் அவருடைய நலனுக்காகவே நாங்கள் இதை விரும்புகின்ரும். நாளைக்கு எங்களுடன் அவரை அனுப்பிவையுங்கள். அவர் காட்டிலுள்ள கனிகளைப் புசித்துக்கொண்டும்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அங்கு விளையாடிக்கொண்டும் இருப்பார். அவருக்கு ஏதும் தீங்கு வராமல் நிச்சயமாக நாங்கள் பாதுகார்த்துக்கொள் வோம்,'' என்று மிகவும் இரந்து கேட்டனர். (12: 11, 12)

இவைகளைக் கேட்ட நபி யாகூப் (அலை) அவர்கள், மைந்தர்களின்மேல் தனக்குச் சந்தேகம் உண்டென்பதைக் காட்டாது, வே று வழியில் விடையளித்தார். அவர்கள் விளையாட்டில் பராமுகமாயிருக்கும் சமயத்தில் யூசுபை மறந்துவிட, ஓநாய் அவரை அடித்துத் தின்றுவிடு மென் றும்; யூசுபை அவர்கள் அழைத்துச் செல்வது எவ்விதத்தி லும் அவருக்குத் துக்கத்தை உண்டுபண்ணிவிடும் என்றும் விளக்கிக் கூறி, இவைகளுக்கு தான் பயப்படுவதாகவும் கூறி ஞர். (12: 13)

அதற்கு மைந்தர்கள் தகப்பனுரை நோக்கி, ''நாங்கள் பலசாலிகளாக இருந்தும் அவரை ஓர் ஓநாய் அடித்துத் தின்றுவிட்டுப் போவதென்றல், நாங்கள் அசக்தர்கள் என் றல்லவா அர்த்தமாகிவிடும்?'' என்று எதிர்க் கேள்வி கேட்டு, தகப்பனுரின் மனதை இளகச் செய்தனர். நீண்ட காலமாக அவர்கள் அதைக் கேட்டுவந்ததினுலும், அவர்க ளுடைய பிடிவாதத்தினுலும் நபியவர்கள் அதற்கிசைந்தார். (12: 14)

தம்பியைக் கூட்டிக்கொண்டு, மந்தைகளையும் ஓட்டிக் கொண்டு காட்டை நோக்கிச் சென்ருர்கள். காட்டினூடா கச் செல்லும் அனுபவம் குறைந்த இளம் யூசுப் அவர்கள், இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பெய்தவராக, தனது வன - வருகையிட்டுக் குதூகலமடைந்தவராக, இவைகளினு லேற்பட்ட மனப் பூரிப்பினுல் முகம் மலர்ந்தவராக, சகோ தரர்களுடனே செல்லலானுர்.

புல்வெளியை யடைந்ததும், மந்தைகளை மேய்வதற்கு விட்டார்கள். தங்களது பலநாள் ஆசையைத் தீர்ப்பதற் காக, தம்பியைக் கூட்டிக்கொண்டுபோய் ஒரு பாழ் கிணற் றில் எறிந்தார்கள். இறைவனுடைய கிருபையால் யூசுப் அவர்கள் காப்பாற்றப்பட்டார். அதுமட்டுமல்ல, ''அவர்க ளுடைய இச் செயலைப்பற்றி ஒரு காலத்தில் நீர் அவர்க ளுக்கு அறிவுறுத்துவீர். அப்பொழுது அவர்கள் உம்மை அறிந்துகொள்ளமாட்டார்கள்,'' என ஆறுதலும் கூறி ஞன். (12: 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னமே அகற்றப்பட்டிருந்த நங்கள் தம்பியின் அங்கியை ஆட்டு இரத்தத்தில் தோய்த்துக்கொண்டு, மந்தைகளையும் ஓட்டிக்கொண்டு, பொழுது அடைந்தபின் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர். (12 : 16)

நிஜமாகத் துக்கம்கொண்டவர் அழுவதுபோன்று பாசாங்கு செய்தவண்ணம் வீட்டினுட் பிரவேசித்தார்கள். அழுதுகொண்டு வந்த தன் மைந்தர்களை அவதானித்த நபி யாகூப் (அலை) அவர்கள், யூசுபைக் காணததினல் அவரைப்பற்றி விசாரித்தார். அதற்கு அவர்கள், "எங்கள் தந்தையே! உண்மையாக நாங்கள் யூசுபை எங்களின் சாமான்களிடம் வைத்துவிட்டு ஓடிவிளையாடிக்கொண்டிருந்தோம். அவ் வேளை அவரை ஓர் ஓநாய் அடித்துத் தின்றுவிட்டது. அவரைக் காப்பாற்ற நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தோம்; முடியவில்லை. ஆனால், அவருடைய அங்கியை மட்டுமே காப்பாற்ற முடிந்தது. நாங்கள் எவ்வளவு உண்மை சொன்னபோதிலும் நீங்கள் அதை நம்பவேமாட்டீர்கள்," என்று கூறி, இரத்தம் தோய்ந்த அந்த ஆடையை அவருக்குக் காண்பித்தனர். (12:17,18)

கிழியாதிருந்த அந்த உடையைக் கண்ட நபியவர்கள் தன் மைந்தர்களை நோக்கி, "ஓநாய் அடித்துத் தின்னவில்லை. உங்கள் மனம் ஒரு தீய காரியத்தை உங்களுக்கு அழகாகக் காண்பிக்க, அதன்படியே செய்துவிட்டீர்கள். இத் துக்கத்தை நான் சகித்துக்கொள்வதுதான் நன்று. எனினும், நீங்கள் கூறியவற்றிலிருந்து யூசுபை இரட்சிக்குமாறு அல்லாஹ்விடம் நான் உதவி தேடுகிறேன்," என்றார். (12: 18) மகனை நினைத்து நினைத்து அழுதார்.

வியாபாரக் கூட்டம் செல்லும் ஒரு பெரிய பாதையின் அருகே அந்தக் கிணறு இருந்தது. எகிப்துக்குச் சென்றுகொண்டிருந்த சில வியாபாரிகள் அவ்விடத்தே சற்று தங்கிக்கொண்டு, அக் கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளி வரும்படி ஒருவனை அனுப்பினர்கள். அவன் அங்கு சென்று வாளியைக் கிணற்றில் விடவே, யூசுப் அதைப்பற்றிக்கொண்டார். அதைக் கண்ட அவன், "இதோ ஒரு சிறுவன்" என ஓசை யெழுப்பி, ஏனையோர்களையும் அவ்விடத்திற்கு எடுத்து, அவர்களின் உதவியினால் யூசுபை வெளியே எடுத்தான். பையனின் அழகோ, அவர்களால் வர்ணிக்கமுடியாமற்போய் விட்டது. எகிப்தில் நல்ல விலைக்கு அப் பையனை விற்கலாமென்றெண்ணிய அக் கூட்டத்தினர், வியாபாரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களுடன் அவரையும் சேர்த்துக்கொண்டனர். இதற்கிடையில், அந்தப் பத்துச் சகோதரர்களும் அங்கு வந்து, அப் பையன் தப்பியோடி வந்த தங்கள் அடிமை என வாதாடி, ஒரு சொற்ப தொகையான பணத்திற்கு அவரை விற்ருர்கள். (12: 19, 20)

இளம் யூசுப் அவர்கள் வியாபாரப் பொருளாக எகிப்துக்கு எடுத்துச்செல்லப்பட்டார். அவரின் அழகு, அந்த நாட்டு மக்கள் அனைவரையும் கவர்ந்தது. சிறு தொகை கொடுத்து மக்களை அடிமையாக வாங்குவதே அவர்களின் வழக்கம். ஆனல், யூசுப் விஷயத்தில் மக்கள் அப்படி இருக்கவில்லை. குழந்தைச் செல்வம் இல்லாத பெரும் தனவந்தர்கள் அங்கு வந்து விலை வைத்தார்கள். விலை வைப்பதில் உண்டான போட்டியைக் கண்ட வியாபாரிகள், மனதில் ஒன்றை நினைத்துக்கொண்டு, எது விலைக்குமே விருப்பம் காட்டாதிருந்தனர்.

அந் நாளில், அசீஸ் என்னும் ஒருவர் எகிப்தின் அதிபதியாய் இருந்தார். அவரின் மனைவியின் பெயர் சுலைகா. அவர்கட்கோ பிள்ளைப் பாக்கியம் இல்லாமலிருந்தது. யூசுபின் அழகைக் கேள்விப்பட்ட அசீஸ், அக் குழந்தையை என்ன விலை கொடுத்தாவது வாங்கவேண்டுமென்றெண்ணி, வியாபாரிகளைத் தன் அரண்மனைக்கு அழைப்பித்தார். வியாபாரிகள் வந்ததும் அசீஸ் மன்னன் பையனைப் பார்த்துவிட்டு, "கடைசியாகக் கேட்டவர் இப் பையனுக்கு என்ன விலை குறிப்பிட்டார்?" எனக் கேட்டார். அவர்கள் விலையைச் சொன்னுர்கள். உடனே மன்னன் வியாபாரிகளை நோக்கி, "இப் பிள்ளையினுடைய நிறைக்குச் சமஞன தங்கம் தருகின்றேன். இதை எனக்கே கொடுத்துவிடுங்கள்," என்று கேட்டார். யூசுப் அவர்கள் அசீஸ் மன்னனுக்கு விற்கப்பட்டார்.

மன்னன் யூசுபை அழைத்துச் சென்று, தன் மனைவியின் முன்னே நிறுத்தி, "நீ இப் பிள்ளையை மிகவும் கண்ணியமாக வைத்துக்கொள். அவரால் நாம் நன்மை அடையலாம், அல்லது அவரை நமது சுவீகாரப் புத்திரனுக ஆக்கிக்கொள்ளலாம்," என்று கூறினுர். (12: 21) பையனுடைய அழகை அவள் பார்த்து இரசித்து, பக்கத்தே அமரச் செய்து உவகைபூண்டாள். சுருங்கக் கூறின், பிள்ளை இல்லாப் பெரும் கலியை அவள் அன்றே மறந்தாள். ஓர் அரசகுமாரன் அரண்மனையிலே எவ்விதம் வளர்க்கப்படுவானே, அதேபோன்றுதான் அப் பிள்ளையும் அங்கு வளர்க்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கப்படவேண்டுமென அரண்மனைப் பணியாளர் அனைவர்களுக்கும் அசீஸ் மன்னன் கட்டளை பிறப்பித்தான். அதன்படியே பிள்ளையும் வளர்ந்து வரலாயிற்று.

இளம் யூசுப் அவர்கள், நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியுமாக அரண்மனையிலே வளர்ந்து வந்தார். பிறருக்கு மரியாதை செய்யும் குணம், சூதுவாதில்லாப் பேச்சு, கள்ளங்கபடமில்லா மனம், பொய்களவில்லாப் போக்கு, சுத்தம், போன்ற நற் குணங்கள் சிறு வயதிலிருந்தே அவரிடம் காணப்பட்டன. அவர் வளர்ந்து வாலிபமானார். முதிர் வயதை அடையாவிட்டாலும் தன்னுடைய வளர்ப்பு மகனின் திறமையைக் கண்ட அசீஸ் மன்னன், தான் ஓய்வு பெறும் நோக்கமாக, அரசியல் நிர்வாகத்தை அவரிடம் ஒப்படைத்து விட்டு, தான் மேற்பார்வையாளராக யிருந்தார். இளவரசர் யூசுப் அவர்கள் அரசாங்க நிர்வாகத்தில் என்னென்ன மாற்றங்கள் கொண்டுவர விரும்பினாரோ, தடையின்றி அவைகளெல்லாம் செய்யப்பட்டன.

யூசுப் அவர்களின் தலைமையின்கீழ் அரசாங்கம் வெகு சிறப்பாக நடந்துகொண்டு வந்தது. இவைகளெல்லாவற்றையும் கண்டு, இன்பப் பானம் குடித்துக்கொண்டு வந்த சுலேகாவுக்கு, அவர்மீது ஓர் ஆசை ஏற்பட்டது குறிப்பாக அவருடைய அழகு அவளைப் பெரிதும் கவர்ந்திருந்தது. அவளுக்கு உண்டாயிருந்த அந்த ''ஆசை'' நோய்க்கு, அவரைப் பார்த்துக்கொண்டிருப்பதே அவளுக்குப் பெரும் மருந்தாக இருந்தது, அதே அழியாச் செல்வமாகவும் இருந்தது. ஆசை, அவளைக் கசக்கிப் பிழிந்துகொண்டிருக்க, தாய்ப்பாசம் அதை எதிர்த்துத் தடுத்துக்கொண்டிருந்தது.

தனது மனதிலுள்ள இச்சையை அவரிடம் எடுத்துக்கூற சுலேகா எத்தனையோ முறைகள் முயன்றாள். ஆனால், அப்படிச் செய்ய வெட்கப்பட்டுக் கசங்கினாள். அவருடைய அழகை மனதிலே நினைவுகூர்ந்து, அவரை எண்ணியெண்ணி ஏங்கினாள். அவரைக் காணும் வேளைகளிலெல்லாம் ஏங்கி ஏங்கி வெதும்பினாள். தான் வளர்த்த பிள்ளையின்மீது தானே இச்சைகொண்டு, அந்த இச்சையினால் வெறிபிடித்து அலைவதை நினைக்கும்பொழுது, அவளுடைய மனமே ஆயிரம் முறை அவளை நொந்துகொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் பல கழிந்தன. ஒரு நாள் யூசுப் அவர்கள், அரண்மனை அறை ஒன்றினுள் ஓர் அலுவலாக உட்புகுந்தார். அவர் திரும்புவதற்கிடையில் சுலைகாவும் உள்ளே சென்றாள். அறையின் கதவுகளை மூடிவிட்டு யூசுப் அவர்களை நோக்கி, அவருடைய எண்ணம் அதிக நாட்களாக அவளை வாட்டுகிறதெனக் கூறி, அவளுடைய இச்சைக்கு இணங்குமாறு அவரை இரந்து கேட்டாள். அதற்கவர், ''அல்லாஹ் என்னை இரட்சித்துக்கொள்வானாகவும்! தாயே! உங்கள் கணவராகிய என் எஜமான் மிக அன்பாகவும் கண்ணியமாகவும் என்னை வைத்திருக்கிறார். இத்தகைய நன்மை செய்வோருக்கு நான் துரோகம் செய்யமாட்டேன். அப்படிச் செய்யும் அக்கிரமக்காரர்கள் நலம் பெறமாட்டார்கள்,'' என்று கூறி மறுப்புத்தெரிவித்தார். (12: 23)

''இவ்வளவு கெஞ்சியும் இளகாத இவருடைய மனம், இனிமேல் எப்பொழுதுதான் இடம் தரும்? ஆகவே, செய்வதை இன்றே செய்வோம்,'' என்றெண்ணிய சுலைகா; அவரைப் பாய்ந்துபிடித்தாள். அந்தப் பிடியிலிருந்து தப்பிய யூசுப் அவர்கள், கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடினார். அவரைத் தாவிப் பிடித்த சுலைகாவின் கரங்களுக்கு, அவரின் பின்புறச் சட்டையின் ஒரு துண்டு மட்டுமே அகப்பட்டது. அதே வேளை, அசீஸ் மன்னனும் அங்கு நின்றுகொண்டிருந்தான். உடனே அவள் மன்னனை நோக்கி, ''உங்கள் மனைவிக்குத் தீங்கிழைக்கக் கருதிய இவனுக்கு, சிறை அல்லது துன்புறுத்தும் வேதனையைத் தவிர வேறு தண்டனை யுண்டா?'' எனப் பெரும் ஓசையுடன் கேட்டு, தன்னை நல்லவளாகக் காட்டினாள். (12: 25)

ஓடிச் சென்ற யூசுப் அவர்கள் அரசனிடம் திரும்பி வந்து, சுலைகாதான் தன்னை வற்புறுத்தி அழைத்ததாகக் கூறி, அறையில் நடந்த நிகழ்ச்சியை அரசனுக்கு எடுத்துரைத்தார். அப்பொழுது, அவளுக்குச் சொந்தமான ஒருவர் முன்வந்து நியாயமான ஒரு யோசனை கூறினார். அவருடைய சட்டை முன்புறம் கிழிந்திருந்தால் சுலைகா கூறியது உண்மை யென்றும், பின்புறம் கிழிந்திருந்தால் யூசுப் கூறியது உண்மை யென்றும் விளங்கப்படுத்தினார். (12: 26, 27)

அதன்படியே அவரின் சட்டையை எடுத்து அரசர் பரிசீலனை செய்தார். அது பின்புறமாகக் கிழிந்திருப்பதைக் கண்டு தன் மனைவியை நோக்கி, ''நிச்சயமாக இது உங்களுடைய சதிதான். உங்களின் இச் சதி மகத்தானது,''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினர். யூசுப் அவர்களை நோக்கி, ''யூசுபே! நீ இதனை எவருக்கும் அறிவியாது, இம்மட்டில் விட்டுவிடும்,'' என வேண்டினர். மீண்டும் மனைவியை நோக்கி, ''திண்ணமாக நீதான் குற்றம் செய்திருக்கின்றாய்; உன் பாபத்திற்கு மன்னிப்பைத் தேடிக்கொள்,'' என்றும் கூறினர். (12: 28, 29)

யார் எப்படி மறைத்தபோதிலும், அவ் விஷயம் ஊர் மக்களுக்குத் தெரியவந்தது. அதுமட்டுமல்ல, பெண்களெல்லாம் அவளை இழிவாகப் பேசவும் தொடங்கினர். அதைக் கேள்விப்பட்ட சுலைகா, அவ்வூர் முக்கியஸ்தர்களின் மனைவிமார்களை அழைத்து, தன் அரண்மனையிலே ஒரு விருந்து கொடுத்தாள். விருந்து வைபவத்தின்பின், அவர்களைப் பெரியதோர் அறையிலே அமரச் செய்து, ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு கத்தியும் பழமும் கொடுத்தாள். அந்தப் புதிய முறையை யிட்டு அவர்கள் சந்தோஷப்பட்டுக்கொண்டு, பழத்தை அறுக்க ஆரம்பித்தனர். அதே வேளையில் யூசுப் அவர்களை அச் சபையின் முன்னே அழைப்பித்தாள். அவரை அப் பெண்கள் காணவே, இயற்கையான அவர் அழகில் லயித்து, அப்படியே மெய்மறந்தனர். இதனால், பழத்தை அறுப்பதற்குப் பதிலாக, அனைவரும் தங்கள் கைகளையே அறுத்தார்கள். ஒவ்வொருவரின் நிலையையும் கண்டு வெட்கித்த அப் பெண்கள், ஒருங்கே சேர்ந்து, ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக இவர் மனிதரல்ல; யாவரின் மனதையும் கவரக்கூடிய அழகுவாய்ந்த ஒரு அமரரேயன்றி வேறில்லை,'' எனக் கூறி, அவரின் அழகையிட்டும் வியந்தார்கள். (12: 30, 31)

சுலைகா அப் பெண்களை நோக்கி, ''எவருடன் நான் கெட்ட காரியத்தில் ஈடுபட முயன்றேன் என நீங்கள் கூறினீர்களோ, அவர்தான் இவர். நீங்களெல்லாம் இப்படியிருக்க, நான் மட்டும் அதற்கு விதிவிலக்கா? உண்மையாக நான்தான் அவரை வற்புறுத்தி அழைத்தேன்; ஆனால் அவர் தப்பிப் பாய்ந்தோடிவிட்டார். இனியும் அவர் நான் கூறுவதைச் செய்யாவிடில், கண்டிப்பாக அவர் சிறையில் டைக்கப்பட்டு சிறுமைப்படுத்தப்படுவார்,'' என்று கூறி, அவரைக் கண்டால் எந்தப் பெண்ணுமே இச்சைகொள்வாள் என்பதை எடுத்து விளக்கினாள். (12: 32)

சுலைகாவின் சர்வாதிகார வார்த்தைகளைக் கேட்ட யூசுப் அவர்கள், அப் பெண்ணின் அந்தச் சதியிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுமாறு இறைவனைப் பிரார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தார். "இனியும் அவர் நான்கூறுவதைச் செய்யாவிடில்..." என்று சுலைகா கூறிய வார்த்தை மன்னனையும் எட்டியது. அசீஸ் மன்னர் பெரும் யோசனையி லாழ்ந்தார். அவ் விஷயத்தில் தன் மனைவி, எந்த வேளையில் என்ன வேலை செய்ய இருக்கின்றாளோ என எண்ணி நிலைதடுமாறினார். அவளுடைய பார்வையிலிருந்து யூசுபை மறைத்து வைப்பதே நலமென அவருக்குத் தோன்றியது. எனவே, யூசுப் அவர்கள் நிரபராதி என்பதை மன்னன் அறிந்திருந்தும், தன் மரியாதையின் நலனுக்காகச் சிறிது காலத்திற்கு அவரைச் சிறையி லடைத்தார். (12: 33, 35)

யூசுப் அவர்கள் சிறை சென்றிருந்த காலத்தில், அரண்மனைச் சமையற்காரர்களில் இருவர் ஒரு விஷயத்திலே சந்தேகிக்கப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரும் ஆளுக்கொரு கனவு கண்டு, யூசுப் அவர்களிடம் ஒரு நாள் அவைகளைத் தெரிவித்தார்கள். ஒருவன், தன்னுடைய தலையில் உரொட்டிகளைச் சுமந்து செல்லும்பொழுது அவைகளைக் காகம் கொத்தித் தின்றதாகவும்; மற்றவன், ஓரிடத்திலே தான் திராட்சை இரசம் பிழிந்துகொண்டிருந்ததாகவும் தங்கள் கனவுகளை எடுத்துக் கூறினார்கள். கூறிவிட்டு யூசுப் அவர்களை நோக்கி, "உங்களை நாங்கள் நல்ல மனிதராகக் காண்கிறோம்; ஆகையினால், இவைகளின் அர்த்தங்களை எங்களுக்கு அறிவிப்பீர்களா?" என்று கேட்டனர். (12: 36)

அதற்கு யூசுப் அவர்கள் அவ்விருவரையும் நோக்கி, கனவுகளுக்கு அர்த்தம் கூறும் சக்தியை இறைவன் அவருக்குக் கொடுத்துள்ளா னென்றும்; ஆகையினால், அவர்களுடைய கனவுகளின் பலன்களை வெகு இலகுவில் கூறிவிட அவரால் முடியுமென்றும் கூறி; அவருடைய மூதாதைகளாகிய இப்றாஹீம், இஸ்ஹாக், யாகூப் ஆகியோரின் மார்க்கத்தையே அவர் பின்பற்றுவதாகவும் கூறினார். (12: 37, 38) இன்னும், பலதெய்வக் கொள்கையை இட்டும் கண்டித்துக் கூறி, ஏகதெய்வக் கொள்கையைக் கையாளும்படியும் வேண்டினார். (12: 39, 40)

பின் கனவு கண்டவர்களில் ஒருவனைப் பார்த்து, "நீ தூக்கில் இடப்பட்டு இறந்துவிடுவாய். உன் தலையைப் பட்சிகள் கொத்தித் தின்னும்," என்றும்; மற்றவனைப் பார்த்து, "நீ விடுதலையடைந்து முன்புபோல் உன் எஜமானுக்குத் திராட்சை இரசம் பிழிந்து புகட்டிக்கொண்டிருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்,'' என்றும் கனவுகளுக்கு அர்த்தம் கூறினார். அப்படி நடக்குமென வாக்குறுதியும் கொடுத்தார். *(12: 41)*

மேலும், விடுதலை அடைய இருந்த அம் மனிதனை யூசுப் அவர்கள் நோக்கி, ''தோழனே! நீ விடுதலையடைந்து வீடு சென்றபின், நான் அநியாயமாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன் என்பதாக அரசனுக்கு ஒரு முறை அறிவியும்,'' என வேண்டினார். அவர் கூறியபிரகாரம் சிறிது நாட்களால் அவன் விடுதலை யடைந்தான்; மற்றவன் தூக்கி விடப்பட்டான். எனினும், சைத்தான் மறக்கடித்து விட்டதனால், விடுதலை பெற்ற அவன் அவ் விஷயத்தை அரசனுக்கு அறிவிப்பதை விட்டுவிட்டான். இதனால், அவர் சிறைக்கூடத்தில் பல வருடங்கள் தங்கவேண்டியதாயிற்று. *(12: 42)*

ஒருநாள் இரவு அசீஸ் மன்னர் ஆச்சரியமான இரு கனவுகள் கண்டார். அழகுள்ள, கொழுத்த ஏழு பசுக்கள் ஓரிடத்திலே மேய்ந்துகொண்டிருக்கும்பொழுது; அழகற்ற, மெலிந்த ஏழு பசுக்கள் அவைகளின் பின்னால் வந்து, அவைகளைப் பிடித்துத் தின்றதாகக் கனவு கண்டார். அரசர் திடுக்கிட் டெழுந்து, யோசனையி லாழ்ந்தார். யோசனையால் தூக்கத்தை இழந்த அவரது விழிகள் மீண்டும் துயில்கொண்டன. அதே வேளையிலும் ஒரு கனவு கண்டார். செழுமையாக விளைந்த எழு நெற்கதிர்களைப் பதராக விளைந்த ஏழு நெற்கதிர்கள் விழுங்கியதாகக் கனவுகண்டார். இரவு விடிந்ததும் தன் மந்திரிமார்களை நோக்கி, ''என் பிரதானிகளே! நான் கண்ட இக் கனவுகளின் பயனை எனக்கு அறிவியுங்கள்,'' என்று கேட்டு, கனவுகளையும் கூறினார். அதற்கு அவர்கள், அவை அஜீரணத்தால் ஏற்பட்ட கனவுக ளென்றும், அத்தகைய கனவுகளுக்கு அர்த்தம் கூற அவர்களால் முடியாதென்றும் கூறினர். *(12: 43, 44)*

எனினும், அவர்களின் கூற்றையிட்டு அரசர் திருப்தி கொள்ளவில்லை. மனம் பதறும் தன்மையுடையவராக, எது நடக்குமோ என அஞ்சியவராக, காணப்பட்டார். அரசருடைய இந் நிலையைக் கண்டபொழுதுதான், விடுதலை பெற்ற அந்தச் சமையற்காரனுக்கு யூசுப் அவர்களின் நினைவு வந்தது. உடனே அவன் அரசரை நோக்கி, ''ஏங்கிக்கொண்டிருக்கும் நம் அரசரின் கனவுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் பலன் கூறமுடியும்; என்னைக் கொஞ்சம் சிறைச் சாலைக்கு அனுப்பிவையுங்கள்,'' என்றான்; அரசனும் விடை கொடுத்தான். (12: 45)

அவன் அங்கு சென்று, கனவுகளை யூசுப் அவர்களிடம் கூறி, அவைகளின் பலன்களைக் கேட்டான். அதற்கு அவர், "தொடர்பாக ஏழு வருடங்களுக்கு உங்களுக்கு நல்ல விளைச்சல் உண்டாகும்; அவ் வேளையில் தானியத்தைச் சேமித்து வையுங்கள். பின், தொடர்பாக ஏழு வருடங்களுக்குப் பஞ்சம் உண்டாகும்; அவ் வேளையில், சேமித்து வைத்த தானியத்தை உண்ணுங்கள்,'' என்று விளக்கிக் கூறினார். (12: 46—48)

அவன் அரசரிடம் வந்து அதைக் கூறவே, சந்தோஷம் கொண்ட மன்னன், அவரை அழைத்துவரும்படி ஏவினான். சமையற்காரன் மீண்டும் சிறைச்சாலைக்கு வந்து, அவருடன் எல்லாவற்றையும் கூறி, அங்கு போவதற்கு அழைத்தான். யூசுப் அவர்கள் சமையற்காரனை நோக்கி, ''நீர் உன் எஜமானிடம் திரும்பிச் சென்று, கைகளை அறுத்துக் கொண்ட பெண்களின் உண்மை விஷயமென்ன என்பதை அறிந்து வா,'' எனக் கூறினார். (12: 50)

அவன் அங்கு சென்று விஷயத்தை அரசனிடம் கூறவே, அன்று நடந்தவைகளை அப் பெண்களிடம் அரசன் வினவினான். உண்மையான செய்திகள் அன்றுதான் அரசனுக்குக் கிடைத்தன. இனியும் விஷயத்தை மறைக்கமுடியாது என எண்ணிய சுலைகா அரசனை நோக்கி, ''நான்தான் அவரை விரும்பி அழைத்தேன். அவர் சொல்லிய அனைத்தும் உண்மையே,'' என்றாள். பெண்களை யெல்லாம் விசாரித்து அரசர் உண்மையை அறிந்துகொண்டார் என்பதை யூசுப் அவர்கள் அறிந்ததும், செய்தி கொண்டுவந்தோனை நோக்கி, ''நான் பரிசுத்தமானவன் என்று என்னைப் புகழ்ந்து கூறவில்லை. ஆனால், என் எஜமானாகிய அவ் வரசர் மறைவாயிருந்த சமயத்தில், அவருக்கு நான் துரோகம் செய்யவில்லை என்பதை அவர் அறிந்துகொள்வதற்காகவும்; துரோகிகளின் சூழ்ச்சியை இறைவன் நிச்சயமாக நடைபெற விடுவதில்லை என்பதை மற்றோர்கள் அறியவேண்டும் என்பதற்காகவுமே அப் பெண்களை விசாரிக்கும்படி செய்தேன்,'' என்று கூறினார். (12: 51, 53, 52)

இச் செய்தி அரசனை அடைந்தது. யூசுப் அவர்களின் வாய்மையையும் நுண்ணிய அறிவையும் கண்டு அதிசயித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசீஸ் மன்னர், உடனே அவரை அரண்மனைக் கழைத்துவ ரும்படி கட்டளையிட்டார். அதன்படி அவர் அங்கு வரவே அவரை நோக்கி, "உண்மையாக நீ இன்றிலிருந்து எனது பெரும் மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றுவிட்டாய். உன்னை எனது சொந்த வேலைக்கு அமர்த்திக்கொண்டேன்," என்று கூறினர். அதற்கு யூசுப் அவர்கள், "இல்லை. தேசி யக் களஞ்சியத்தின் அதிகாரியாக என்னை ஆக்கிவிடுங்கள். அதை நான் நல்ல முறையில் பாதுகாக்கின்றேன்," என் ருர். அரசரும் ஆமோதித்தார். (12: 54, 55)

அதிக விளைச்சல் உண்டான அந்த ஏழு வருடங்களி லும் யூசுப் அவர்கள் பெருவாரியான தானியம் சேக ரித்து வைத்தார். விளைவற்ற காலம் தொடங்கியது. முந் திய மூன்று நான்கு வருடங்களையும் மக்கள் ஒருவாறு கழித்தனர். அதன்பிறகோ, பஞ்சம் உண்டாயிற்று. எனவே யூசுப் அவர்கள் நெற் களஞ்சியத்தைத் திறந்து தானியம் விற்கலானுர். பக்கத்து நாடுகளிலும் பஞ்சம் ஏற்பட்டது.

எகிப்திலுள்ள அரசரிடம் தானியம் இருப்பதாக நபி யாகூப் (அலை) அவர்கள் கேள்விப்பட்டு, அவருடைய குமாரர்களில் புன்யாமீனைத் தவிர ஏனைய பத்து நபர்களை யும் அங்கு அனுப்பிவைத்தார். எகிப்தின் எழில்மிகு அரண்மனையை அவர்கள் அடைந்தார்கள். மக்களெல்லாம் வரிசையில் நின்று தானியம் பெறுவதைக் கண்டு, அவர் களும் அவ்விதம் செய்தனர். அவ்விடத்தே நின்றுகொண்டு வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்த யூசுப் அவர்கள், வரிசையிலே வந்துகொண்டிருந்த தன் சகோதரர்களைக் கண்டார். பாசத்தால் அவருள்ளம் உருகியது. கொடிய பஞ்சத்தையும், தன் உற்ருர் உறவினர்களையும் நினைத்துக் கலங்கினுர். அவரால் அவ்விடத்தே நிற்கமுடியவில்லை; ஓர் அறைக்குச் சென்ருர். ஆனுல் சகோதரர்களோ யூசுப் அவர் களை மதித்துக்கொள்ளவில்லை. (12: 58)

அறைக்குட் சென்ற யூசுப் அவர்கள், ஒருவாறு தன் னைச் சரிப்படுத்திக்கொண்டு, அவர்களுடன் அவர் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் திண்ணப்படுத்திக் கொண்டு அங்கு வந்தார். சகோதரர்கள் அளவைக்காரனை நெருங்கியதும், "நிறுத்துங்கள்! நீங்கள் உளவுகாரர் என சந்தேகிக்கின்றேன்," என்ருர். அயல் நாட்டைச் சேர்ந்தவர் கள் அல்லவா அவர்கள்! எதிர்பாராத அவ் வார்த்தைகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதும், பயந்து நடுங்கினார்கள். யூசுப் அவர்களைக் கனப்பண்ணி, அப்படி அல்ல என்றும், உண்மையில் அவர்கள் தானியம் வாங்கவே வந்தார்கள் என்றும் கூறினர். மீண்டும் யூசுப் அவர்கள், ''இல்லை. நீங்கள் வேவு பார்க்கவே வந்தீர்கள்,'' என்றார். பீதிகொண்ட அவர்கள், தங்களின் உண்மைச் சரித்திரத்தை எடுத்துக்கூறினார்கள். ''அரசரே! நாங்களெல்லாம், கானன் தேசத்திலே வசிக்கும் யாகூப் நபி என்ற ஒரு வயோதிபரின் நான்கு மனைவியர்களின் குமாரர்கள். எங்களின் மொத்தம் பன்னிரண்டு பேர்கள். அதில், யூசுப் என்றொரு தம்பி சிறுவயதிலேயே காணமற்போய்விட்டான். அவனுடன் பிறந்த புன்யாமீன் என்ற தம்பி தகப்பனாருடன் வீட்டில் இருக்கின்றான். எஞ்சிய நாங்கள் உண்மையில் தானியம் பெறவே இங்கு வந்தோம்,'' என்றார்கள்.

அதை அவர் ஒப்புக்கொள்வதுபோன்று காட்டி, தந்திரத்தால் தன் குடும்ப நிலையை அறிந்தார். இன்னும், அவர்களைச் சந்தோஷப்படுத்துவதாகக் கூறி, அவர்கட்கொரு விருந்தும் அளித்தார். தானியத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் வெளியேறும்பொழுது, ''நீங்கள் அடுத்த முறை வரும்பொழுது, வீட்டிலிருக்கும் உங்கள் தம்பியையும் அழைத்து வரவேண்டும். தவறினால், உங்களுக்குத் தானியம் கொடுக்கமுடியாது; இப் பக்கம் என்னை நெருங்கவும் முடியாது,'' என்றும் கூறினார். பல காரணங்களினால் அவனைத் தகப்பனார் அனுப்பமாட்டாரென்றும், ஏதோ இயலுமான அளவுக்குத் தாங்கள் தெண்டிப்பதாகவும் வாக்குக் கொடுத்தனர். *(12: 59—61)*

பின், யூசுப் அவர்கள் தன் சேவகர்களை அழைத்து, ''அவர்கள் தந்த பணத்தை அவர்களுடைய பொதிகளிலே ஒழித்து வையுங்கள். அவர்கள் உண்மையானவர்களாயின், அப் பணத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் நம்மிடம் வருவார்கள்,'' என இரகசியமாகக் கூறினார். வீடு சென்று அவர்களுடைய மூட்டைகளை அவிழ்த்துப் பார்க்கவே, அவர்கள் கொடுத்த பணம் திருப்பப்பட்டிருப்பதைக் கண்டு, ''எங்கள் தந்தையே! நமக்கு வேண்டிய பணம் இதோ இருக்கிறது. இன்னும் நமக்குத் தேவையான தானியம் பெற்றுவரலாம்; தம்பி புன்யாமீனையும் எங்களுடன் அனுப்புங்கள். அப்படி அனுப்புவதினால், ஓர் ஒட்டகைச் சுமை தானியத்தை மேலதிகமாகவே கொண்டு வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோம். இங்கு இருப்பது வெகு சொற்ப தானியந்தானே!" என்று கூறினார்கள் (12: 62, 65)

நபி யாகூப் (அலை) அவர்கள் மக்களின் வார்த்தைகளை நம்பவில்லை. மாதங்கள் சில கழிந்தன. எடுத்துச் சென்ற தானியமும் முடிவடைந்துவிட்டது. எனவே, உள்ள பணத்தை எடுத்துக்கொண்டு எகிப்துக்குப் போகும்படி நபியவர்கள் மக்களை வேண்டினார். அதற்கு அவர்கள், "எங்கள் தந்தையே! அவ்வூர் அரசனின் சொற்படி புன்யாமீனை நாங்கள் கூட்டிக்கொண்டு போகாவிட்டால், எங்களுக்குத் தானியம் அளப்பது தடுக்கப்பட்டுவிடும். ஆகையினால், எங்கள் சகோதரன் புன்யாமீனையும் எங்களுடன் அனுப்புங்கள். நாங்கள் தானியம் வாங்கிக்கொண்டு நிச்சயமாக அவரையும் காப்பாற்றி வருவோம்," என்று கூறினார்கள். (12: 63)

அதற்கு நபியவர்கள், "இதற்கு முன்னர் இவருடைய சகோதரர் யூசுப் விஷயத்தில் நான் உங்களை நம்பி கைசேதம் அடைந்ததுபோல், இவர் விஷயத்திலும் உங்களை நான் நம்புவதா? அவரை நான் உங்களுடன் அனுப்பவே மாட்டேன்," என்று கூறி, பஞ்சத்தின் கொடுமையையும் மனதில் நினைத்து, "உங்கள் அனைவருக்கும் யாதொரு ஆபத்தும் ஒன்றாகச் சூழ்ந்துகொண்டால் அன்றி, நிச்சயமாக அவரை என்னிடம் கொண்டு வருவீர்கள் என்று அல்லாஹ்வின்மீது நீங்கள் அனைவரும் சத்தியம் செய்து கொடுத்தால் அவரை அனுப்புவேன்," என்றும் கூறினார். அவ்வாறு அவர்கள் சத்தியம் செய்துகொடுக்கவே, நபியவர்கள் தன் மக்களை நோக்கி, "நாம் செய்துகொண்ட இவ் வுடன்படிக்கைக்கு அல்லாஹ்வே சாட்சியாய் இருக்கின்றான்," என்று கூறி, அவரை அழைத்துச் செல்ல அனுமதி கொடுத்தார். (12: 64, 66)

மேலும் அவர் தன் மக்களை நோக்கி, "என் அருமை மக்களே! எகிப்தில் நீங்கள் நுழையும்பொழுது யாவரும் ஒரே வாசலால் நுழையாமல் வெவ்வேறு வாசல் வாயிலாக நுழையுங்கள். அல்லாஹ்வின் கட்டளைப்படி உங்களுக்கு ஏதும் நடக்க இருக்குமாயின் அதை என்னால் தடுக்கமுடியாது. ஏனெனில், சகல அதிகாரங்களும் அவனுக்கேயன்றி வேறு எவருக்கும் இல்லை. அவனிடமே உங்களை ஒப்படைத்துள்ளேன். அவனை நம்பியவர்கள் யாவரும் இவ்வாறே எதையும் ஒப்படைக்கவும்," என்றும் புத்திமதி கூறினார். (12: 67)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் எகிப்தை நோக்கிச் சென்றனர். அசீஸ் மன்னரின் அரண்மனையை யடைந்து, தானியம் பெறுவதற்காக வரிசையில் நின்றார்கள். யூசுப் அவர்கள், வரிசையில் நின்ற தன் சகோதரர்களை நோக்கி, ''நீங்கள் முன் கூறிய உங்கள் தம்பி எங்கே?'' எனக் கேட்டார். ''இதோ'' எனக் கூறிக்கொண்டு தம்பியை அவர்முன்னே நிறுத்தினர். யூசுப் அவர்கள் தன் தம்பி புன்யாமீனைத் தனிமையாக ஓர் அறைக்கு அழைத்துச் சென்று, தன்னுடைய முழுச் சரித்திரத்தையும் கூறினார். அவர்களிலிருந்து ஓடிய ஆனந்தக்கண்ணீரை அளவு கூற முடியாமலிருந்தது. பின்னும் அவர் தன் தம்பியை நோக்கி, அவரை அங்கு நிறுத்திக்கொள்ள அவர் ஓர் உபாயம் செய்வாரென்றும், அதை வெளிப்படுத்தக்கூடாதென்றும் கூறினார். (12: 69)

பின்னர், அவர்களுக்கு வேண்டிய அளவு தானியத்தைக் கொடுத்துவிட்டு, தன்னுடைய தம்பி புன்யாமீனுடைய சுமையில் ஒரு குவளையை ஒழித்து வைத்தார். அரண்மனையைவிட்டு அவர்கள் அகன்று சென்ற சிறிது நேரத்தால், யூசுப் அவர்கள் ஒரு சேவகனைக் கூப்பிட்டு, ''அவர்கள் குவளையைக் களவெடுத்துப் போவதாகக் குற்றம் சாட்டி, அது வைத்திருப்பவனைக் கைதுசெய்து வா,'' எனக் கட்டளையிட்டார். அவன் விரைந்து சென்று, அவர்களைச் சந்தித்து, ''ஓ ஒட்டகைக் கூட்டத்தார்களே! நீங்கள் திருடர்களாயிருக்கின்றீர்கள்,'' என்று சத்தமிட்டான். (12: 70)

அதற்கவர்கள், ''நீங்கள் எதை இழந்துவிட்டீர்கள்?'' என்று கேட்க; ''அரசருடைய மரக்காலை,'' என விடையளித்தான். அதைக் கேட்ட அந்தச் சகோதரர்கள், ''அல்லாஹ்வின்மீது சத்தியமாக நாங்கள் விஷமம் செய்வதற்கு இங்கு வரவில்லை. அன்றி, நாங்கள் திருடுபவர்களும் அல்ல. இதை நீங்களே நன்கு அறிவீர்கள்,'' என்று தாழ்மையாகக் கூறினர். அப்படி அவர்கள் கூறுவது பொய்யாக இருந்தால் அதற்குரிய தண்டனை என்னவென்று சேவகன் வினவினான். அதற்கு அவர்கள், எவனுடைய சுமையில் அது காணப்படுகிறதோ அவனே அதற்குரிய தண்டனைக்குரியவன் என்றும், அக்கிரமக்காரர்களுக்கு அவ்வாறே அவர்கள் தண்டனை அளிப்பதாகவும் கூறினர். (12: 71—75)

இதற்கிடையில், யூசுப் அவர்களும் அவ்விடத்திற்கு வந்தார். எல்லாச் சகோதரர்களுடைய பொதிகளையும் சோதித்தபின், கடைசியாக புன்யாமீனுடைய பொதியைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதித்தார். அக் குவளை அதில் காணப்படவே, கைதியாக புன்யாமீனை அரண்மனைக்கு அழைத்துச் செல்ல ஆயத்தமானார். திகில் அடைந்த அவர்கள், ''இவன் திருடியிருந்தால் இவனுடைய சகோதரன் யூசுபும் இதற்கு முன் நிச்சயமாகத் திருடியே இருப்பான்,'' என தங்களுக்குள்ளே இரகசியமாகக் கூறிக்கொண்டனர். இதைக் கேட்ட யூசுப் அவர்கள், ''நீங்கள் மிகப் பொல்லாதவர்கள். அறியாத விஷயத்தையிட்டுக் கூறுகின்றீர்களே! அதை அல்லாஹ்தான் நன்கறிவான்,'' என்று கூறினார். (12: 76, 77)

புன்யாமீன் கைதுசெய்யப்படப்போகின்றான் என்பதை அறிந்த அச் சகோதரர்கள் யூசுப் அவர்களை நோக்கி, ''அசீஸ் மன்னரே! முதிர்வயதுடைய எங்கள் தகப்பனார் இந்தத் தம்பியின்மேல் மிகவும் பிரியமுடையவர். இவரைக் காணாதுவிட்டால் அவர் இறந்துவிடுவார். ஆகையினால், எங்களில் ஒருவரை நீங்கள் நிறுத்திக்கொண்டு, அவரை விட்டுவிடுங்கள். இவ்வுதவிக்கு நிச்சயமாக நாங்கள் உங்களைப் பெரும் பரோபகாரியாகவே காண்போம்,'' என இரந்து கேட்டனர். அதற்கவர், அப்படிச் செய்யமுடியாதென்றும், அப்படிச் செய்வது அக்கிரமம் என்றும் கூறி, புன்யாமீனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். (12: 78, 79)

என்ன செய்யலாமென எல்லோரும் தனித்தனியே யோசித்தனர். அவர்களில் மூத்தவர் ஏனையோர்களை நோக்கி, ''நம் தந்தை நம்மிடம் உறுதியான சத்தியம் வாங்கியுள்ளார். இதற்கு முன்னர் யூசுப் விஷயத்திலும் அவருக்கு நாம் துரோகம் செய்துள்ளோம். இந் நிலையில், அவரைக் காண்பதற்கு நான் மிகவும் வெட்கப்படுகின்றேன். நீங்கள் தந்தையிடம் சென்று, எங்கள் தந்தையே! உங்கள் மகன் புன்யாமீன் மெய்யாகவே திருடிவிட்டான். உண்மையாக நாங்கள் தெரிந்ததையே கூறுகின்றோம். எங்களுக்குத் தெரியாமல் நடந்த இவ் விஷயத்திலிருந்து அவரைக் காப்பாற்ற உண்மையாகவே எங்களால் முடியாமற்போய்விட்டது. நீங்கள் இதை நம்பாவிட்டால் அவ்வூர் மக்களையும், எங்களுடன் வந்த நமதூர் மக்களையும் விசாரித்துப் பாருங்கள். நிச்சயமாக நாங்கள் உண்மையே கூறுகின்றோம்,'' என்று சொல்லும்படி ஆலோசனை கூறிவிட்டு, தான் மட்டும் அங்கு நின்றார். (12: 80—82)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஊருக்குத் திரும்பி வந்து அவ் வசனங்களைத் தங்கள் தகப்பனாரிடம் கூறினர். அவரோ அவைகளை நம்பாமல் துக்கத்தினால் அழுதார். மகன் யூசுபின் நாமத்தைக் கூறிக்கொண்டு சப்தம்போட்டழுதார். அந்த மகனை நினைத்து அவர் அவ்வளவு காலமும் அழுததால், அவருடைய கண்கள் வெண்மையாகப் பூத்துப்போ யிருந்தன. காணாமற்போன தன்னுடைய மக்களையெல்லாம் இறைவன் தன்னிடம் சேர்த்துவிடுவான் என்ற நம்பிக்கையுடன் அவர் இருந்தார். யூசுபை நினைத்து அவர் அழும்பொழுதெல்லாம் அச் சகோதரர்கள் அவரை நோக்கி, "நீங்கள் மரணிக்கும் வரை யூசுபின் நினைவை மறக்கமாட்டீர்கள் போலும்," என்று கூறுவார்கள். அதற்கு அவர், தன்னுடைய கவலையை இறைவனிடம் முறையிடுவதாகக் கூறுவார். (12: 83—86)

சிறிது காலத்தால் அவர் தன் மக்களை நோக்கி, அல்லாஹ்வின் அருளைப்பற்றி நம்பிக்கை இழக்காது காணாமற்போன அந்தச் சகோதரர்களைத் தேடும்படி வேண்டினார். இரண்டாம் முறையாக வாங்கிச் சென்ற தானியமும் முடிவடைந்தது. எனவே மீண்டும் அவர்கள் எகிப்துக்குச் சென்று, யூசுப் அவர்களை நோக்கி, "அசீஸ் மன்னரே! எங்களையும் எங்கள் குடும்பத்தினரையும் பஞ்சம் பிடித்துக்கொண்டது. நாங்கள் ஒரு அற்பப் பொருளே கொண்டுவந்துள்ளோம். அதைக் கவனியாது, எங்களுக்கு வேண்டிய தானியத்தைப் பூரணமாக அளந்து கொடுங்கள். அத்துடன் தானமாகவும் எங்களுக்கு ஏதும் கொடுத்தருள்வீர்களாக! நிச்சயமாக தானம் செய்வோருக்கு அல்லாஹ் பிரதிபலன் அளிப்பான்," என்று இரந்து கேட்டனர். (12: 87, 88)

அப்பொழுது யூசுப் அவர்கள் அவர்களை நோக்கி, "நீங்கள் அறியாமையில் ஆழ்ந்துகிடந்த காலத்தில் யூசுபையும் அவருடைய சகோதரரையும் என்ன செய்தீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா?" என்று கேட்டார். ஜோசியம்போல் இருந்த அக் கேள்வி அவர்களைத் தூக்கிவாரிப்போட்டது. "நீங்கள்தான் அந்த யூசுபாக இருக்கலாமோ?" என எதிர்க் கேள்வி கேட்டார்கள். உடனே யூசுப் அவர்கள், கண்களில் நீர் ததும்பியவராக, "ஆம். நான்தான் அந்த யூசுப்; இதோ என் சகோதரர் புன்யாமீன். நிச்சயமாக அல்லாஹ் எங்கள்மீது பேரருள் புரிந்துள்ளான். ஏனெனில், உண்மையாக எவர்கள் பரிசுத்தவானாக இருந்து கஷ்டங்களையும் சகித்துக்கொள்கின்றார்களோ, அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலியை அல்லாஹ் ஒருபொழுதும் வீணாக்குவதில்லை,'' என்று கூறினார். (12: 89, 90)

தம்பியின் வாயிலிருந்து வெளியான பழைய நிகழ்ச்சியைக் கேட்ட அச் சகோதரர்கள் வெட்கித்து, அவரை நோக்கி, ''உண்மையாகவே நாங்கள் உங்களுக்குத் தீங்கிழைத்தோம்; எனினும், எங்களைவிட அல்லாஹ் உங்களை மிகவும் மேன்மையாக்கி வைத்துள்ளான். எங்களை நீங்கள் மன்னிக்கவேண்டும்,'' என்று கேட்டனர். அதற்கவர், ''இன்றையத் தினம் உங்கள்மீது யாதொரு குற்றமும் நான் சுமத்தவில்லை; யாவையும் மன்னித்தேன். அல்லாஹ்வும உங்கள் குற்றங்களை மன்னித்துவிடுவானாக! அவன் கருணையாளர்களி லெல்லாம் மகா கருணையாளன்,'' என்று கூறினார். (12: 91, 92)

மீண்டும் யூசுப் அவர்கள் தன் சகோதரர்களை நோக்கி, ''நீங்கள் என்னுடைய இந்தச் சட்டையைக் கொண்டுபோய் நம் தகப்பனார் முகத்தில் போடுங்கள்; அதனால் அவர் இழந்த பார்வையை அடைந்துவிடுவார். அதன் பின் நீங்கள் யாவரும் உங்கள் குடும்பத்திலுள்ள அனைவரையும் அழைத்துக்கொண்டு என்னிடம் வாருங்கள்,'' என்றார். உடனே அவர்கள் எகிப்தை விட்டும் நீங்கி, தங்கள் ஊரை நோக்கிச் சென்றனர். அவர்கள் இடை வழியிற் போகும்பொழுதே நபி யாகூப் (அலை) அவர்களுக்கு, தன் மகன் யூசுப் அவர்களின் வாடை மூக்கில் விழுந்தது. ஆகையினால் அவர், ''என்னை நீங்கள் பைத்தியக்காரனென்று நினைக்கவேண்டாம்; இதோ யூசுபுடைய வாடையை நான் உண்மையாக நுகர்கின்றேன்,'' என்று தனிமையிலே பேசிக்கொண்டிருந்தார். அதே வேளையில் அவருடைய மைந்தர்களும் வீட்டை யடைந்தனர். தகப்பனார் அப்படிக் கூறுவதைக் கண்டு, ''நீங்கள் இன்னும் உங்களுடைய பழைய தப்பான அபிப்பிராயத்திலேயே இருக்கின்றீர்கள்,'' என்று கூறியவண்ணம் எடுத்துவந்த சட்டையை அவர் முகத்திலே எறிந்தார்கள். இழந்த பார்வையை உடனே அவர் பெற்று, யூசுப் அவர்களைப் பற்றி இறைவன் இடையிடையே அவருக்கு அறிவித்ததாகப் புகழ்ந்து பேசினார். (12: 93—96)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வர்கள் தகப்பனுரை நோக்கி, ''எங்கள் தந்தையே! மெய்யாகவே நாங்கள் பெரும் தவறிழைத்துவிட்டோம். எங்கள் பாவங்களை மன்னிக்கும்படி இறைவனை நீங்கள் பிரார்த்திப்பீராக,'' என வேண்டினுர்கள். பிறகு அவர் மன்னிப்புக் கோருவதாகவும், இறைவன் நிச்சயமாக அதை மன்னித்துவிடுவான் எனவும் தகப்பனுர் விடையளித்தார். ( 12: 97, 98 )

மறுகணமே எல்லோரும் எகிப்தை நோக்கிப் புறப்பட்டனர். யூசுப் அவர்கள் இடைவழி வந்து, தன் குடும்பத்தினரை வரவேற்று, ''நீங்கள் எகிப்தில் நுழையுங்கள். இறைவனருளால் அச்சமற்றவர்களாகவே நீங்கள் இருப்பீர்கள்,'' என ஆசி கூறினுர். நபி யாகூப் (அலை) அவர்கள் மகன் யூசுப் அவர்களைக் கட்டித் தழுவி, ''என் அருமை மகனே! எனது முதிர்வயதிலாவது உன்னைக் காண்பதற்கு இறைவன் எனக்கு அருள் புரிந்தான். அதற்காக இறைவனை நான் புகழ்கின்றேன்,'' எனக் கூறி அழுதார். (12: 99)

அரண்மனையை அடைந்ததும், யூசுப் அவர்கள் தன் குடும்பத்தினரை அங்கிருந்தோருக்கெல்லாம் அறிமுகம் செய்துவைத்தார். நாட்டு மக்களெல்லாம் அவருக்கு மரியாதை செய்வதைத் தன் தகப்பனுருக்குச் சுட்டிக்காட்டி, ''என் தந்தையே! முன்னர் நான் கண்ட சொற்பனத்தின் வியாக்கியானம் இதுதான். இறைவன் அதை உண்மையாக்கிவிட்டான்......'' என்று கூறினுர். இன்னும், ''என் இறைவனே! நிச்சயமாக ஓர் ஆட்சியையும் நீ எனக்குத் தந்தருள்புரிந்து, சொற்பனங்களின் வியாக்கியானங்களையும் எனக்குக் கற்பித்தாய். உனக்கு முற்றிலும் வழிப்பட்டவனுக என்னை நீ கைப்பற்றிக்கொள்வாயாக! நல்லடியார் கூட்டத்திலும் என்னை நீ சேர்த்துவிடுவாயாக! என இறைவனைப் பிரார்த்தித்தார். (12: 100, 101)

எகிப்திலே, தனது மகன் யூசுபின் அரண்மனையில் சந்தோஷமாகச் சீவித்துவரும் நாளில், நபி யாகூப் (அலை) அவர்கள் அங்கேயே மரணமானுர். (இன்னுலில்லாஹி) அங்கிருந்து அவருடைய பிரேதம் கானுன் தேசத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, அவருடைய மூதாதைகளாகிய இப்ருஹீம் (அலை) சாரு (அலை) ஆகியோர் அடக்கம்செய்யப்பட்ட இடத்திலே அடக்கம்செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசராக ஆட்சிபுரிந்தவந்த யூசுப் அவர்கள் உரிய வயதையடைந்ததும், இறைவன் அவரை நபியாகத் தேர்ந்தெடுத்தான். நபி யூசுப் (அலை) அவர்கள் மக்களுக்கு நற்போதனை செய்துவரும் நாளில், தனது நூற்றுப்பத்தாவது வயதிலே மரணமானார். (இன்னாலில்லாஹி)

---

அக்கரைப்பற்று 6ம் குறிச்சி, M.A. அப்துல் கனி ஆசிரியர் அவர்களால் அக்கரைப்பற்று மெயின் வீதி, "ஆதம்ஸ்" அச்சகத்தில் 2000 பிரதிகள் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 OCT 1970
COLOMBO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මහජන පුස්තකාලය
කොළඹ
නා: සා:
කොළඹ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org